உதயன்
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30
UTHAYAN - A Lively National Tamil Daily
28.°C 23.°C
பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 361 | வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 07, சனி 23.11.2013

## போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு பயனற்ற வரவு - செலவுத் திட்டம்

### பொருளியல் நிபுணர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.23
போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் தேடிக் கொடுக்கும் வகையில் இந்த வரவு - செலவுத் திட்டம் அமையவில்லை. சாதாரண மக்களுக்கு இதனால் எந்தப் பயனும் இல்லை என்று பொருளியல் நிபுணர்கள் கல்வியியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வழமை போன்று இம் முறையும் பாதுகாப்புக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற் றம் சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி செ.சந்திரசேகரம் கூறுகையில்,

வழமை போன்றே அரசின் கொள்கைகளின் பிரதிபலிப்பாக இம்முறை வரவு செலவுத் திட்டமும் அமைந்துள்ளது. போர் நிறைவுற்ற பின்னரும் பாதுகாப்புச் செலவு உயர்த்தப்பட்டுள்ள நிலை நிரந்தர அமைதியைப் பிரதிபலிக்காததையே

## புலனாய்வாளர் அடாவடியை வடக்கில் உடன் நிறுத்துங்கள்

### மன்னார் பேரணியில் ஆயர் கோரிக்கை

கொழும்பு, நவ.23
வடக்கில் இராணுவப் புலனாய்வாளர்களின் அடாவடியை உடன் நிறுத்தி அங்கு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசிடம் மன்னார் ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் வேண்டுகோள் விடுத்தார்.

மனிதாபிமானப் பணியாளர்களுக்கு



# வடக்குக்கான அதிகாரத்தை அர்த்தமற்றதாக்க அரசு சதி

## இதற்கு ஆளுநரும் உடந்தையென முதலமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவம்பர் 23
அரசின் சுயரூபம் இப்போது தான் வெளிப்படுகின்றது. எங்களுக்கு வழங்கிய அதிகாரத்தை எப்படி அர்த்தமற்றதாக்கலாம் என்பதில் ஆளுநருடன் சேர்ந்து அரசு செயற்படுகிறது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

எமக்கான அதிகாரப் பகிர்வைச் சிதைக்கச் சதி நடக்கிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது, அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



அரசு சார்பானவர்களுக்கு மக்கள் தேர்தலில் தகுந்த பதிலை வழங்கியுள்ளனர். இருப்பினும் அரசு சார்பானவர்கள் அதை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. மத்திய அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாகாணத்தின் மீது திணிக்கவே பார்க்கின்றார்கள். மக்களின் நன்மதிப்பைப் பெறத் தவறியவர்கள் கட்டளையிடுகின்றனர்.

முன்னர் தமது கையாள்களாகப் பயன்படுத்திய அரச அலுவலர்களை தமக்கு ஆதரவாகச் செயற்பட வற்புறுத்தி வருகின்றார்கள். இதனால் மக்களின் தேவைகள், அவர்களுக்கான சேவைகள் பாதிப்படைகின்றனவே என்ற எண்ணம் அவர்களுக்கு சற்றேனும் இல்லை.

அரசும், மாகாண சபையும் இணைந்து நடந்தால் தான் மாகாண சபை நிர்வாகமும், பிரதேச சபைகளின் நிர்வாகமும் வெற்றி பெற முடியும். நானா, நீயா என்ற பாணியில் ஒருவரின் உரித்துக்களை மற்றவர்கள் பாவிக்க நினைத்தால் முரண் நிலைதான் உருவாகும். மக்கள் நன்மை கருதித்தான் நாங்கள் பொறுமையாகத் தடம் பதித்து வருகின்றோம்.

இதுவரை காலமும் அரச அதிகாரம், இராணுவப் பலம், அனுசரணைப் படையின் அட்டூழியங்கள் போன்றவற்றின் உதவியுடன் நடத்தி வந்த அரச நிர்வாகத்தைத்தான் மக்கள்

## 99 வீதமான மக்களுக்கு மின்சாரக்கதிரை 'பட்ஜெட்'

### ஐ.தே.க. எதிர்த்து வாக்களிக்கும்; சபையில் ரணில் காட்டம்

கொழும்பு, நவ.23
"2014 ஆம் ஆண்டுக்கான அரசின் வரவு - செலவுத் திட்டம் நாட்டு மக்களையும், நாடாளுமன்றத்தையும் ஏமாற்றும் போலியான திட்டம். நாட்டிலுள்ள ஒரு சதவீதத் தினரின் நல்வாழ்வுக்காக 99 சதவீதமானோரைத் துன்பத்திற்குள்ளாக்கும் இந்த வரவு - செலவுத் திட்டம் சாதாரண மக்களை மின்சாரக் கதிரைக்கு கொண்டுசெல்லும். எனவே, இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்தே ஐ.தே.க. வாக்களிக்கும்."

இவ்வாறு நாடாளுமன்றில் நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க.

அரச நிதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான முழுமையான அதிகாரம் நாடாளுமன்

## பொதுநலவாயத்தின் உதவியுடன் சித்திரவதை குறித்தே விசாரணை

### மனித உரிமை ஆணைக்குழு கூறுகிறது

யாழ்ப்பாணம், நவ.23
சித்திரவதைகள் தொடர்பில் மாத்திரமே பொதுநலவாயத்தின் உதவிகளைப் பெற்று விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களுள் ஒருவரான இ. ஆனந்தராஜா யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில், இறுதிக் கட்டப் போரில்

## தங்கத்துக்கு வரி குறைப்பு

கொழும்பு, நவ.23
தங்கத்துக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது. 10 சதவீதமாகக் காணப்பட்ட தங்கத்துக்கான- இறக்குமதி வரி 1.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களம் தெரி வித்துள்ளது.

ஜனாதிபதி தனது வரவு - செலவுத் திட்டத்தில் தங்கத்தின் இறக்குமதி தீர்வை மீது விதிக்கப்பட்டிருந்த 100 சதவீத மேலதிக அறவீடு அகற்றப்படும் என அறிவித்தார்.

தங்கத்தின் விலை சடுதியாக வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து தங்கம் மீதான இறக்குமதி தீர்வை குறைக்கப்பட்டது. (த-சி)

## வீடழிப்பு, மீள்குடியமர்வு குறித்து நடவடிக்கை எடுப்பது அவசியம்

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.23
வலி.வடக்கு வீடழிப்பு மற்றும் மீள்குடியமர்வு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று சிவில் சமூகம் வலியுறுத்தியுள்ளது.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே

## யாழ். பல்கலைச் சுற்றாடலில் மாவீரர் துண்டுப் பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், நவ.23
மாவீரர்களை நினைவு கூரும் துண்டுப் பிரசுரங்கள், கடும் பாதுகாப்பையும் மீறி யாழ். பல்கலைக் கழகச் சுற்றாடலில் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

தாயக விடுதலைக்காக வித்தாகிப் போன மாவீரர்களின் நினைவு வாரம் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுவது வழமை.

## தொலைபேசி கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, நவ.23
நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுக்கான அழைப்புக் கட்டணங்கள் 5 வீதத்தால் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத் தல் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் அனுச பல்பிட்ட தெரிவித்துள்ளார்.

அத்தோடு, 2014 ஆம் நிதி யாண்டுக்கான வரவு-செலவுத்

## மனித உரிமைகள் மேம்பாட்டை அரசு தொடர்ந்து புறக்கணிப்பு

### சிவில் அமைப்புகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ.23
இலங்கையின் மனித உரிமைகள் மேம்பாட்டை அரசு தொடர்ந்தும் புறக்கணித்து வருகின்றது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

" இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குப் போதியளவு நிதிஒதுக்கீடு இல்லை.

## ஜனாதிபதி விசாரணைக் குழுவிடமும் முறையிடுக

### மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.23
காணாமற்போனவர்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்தவர்கள் ஜனாபதியால் நியமிக்கப்பட்டுள்ள காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவுக்கும் முறைப்பாடுகளைச் சமர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவாடப்பட்ட பொருள்கள் கோப்பாய் பொலிஸாரால் மீட்பு

## சந்தேக நபர் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், நவ.23
கோப்பாய் பொலிஸ் பிரிவில் பல்வேறு இடங்களில் திருடப்பட்ட சுமார் 5 இட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்டுள்ளனர்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கொக்குவிலைச் சேர்ந்த ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தப் பொருள்களை மீட்டதாகக்- கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஸ்ரீநிகி ஜெயக்கொடி தெரிவித்தார்.
இரண்டு சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அது தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணை முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.
கோப்பாய் பொலிஸ் பிரிவில் வெவ்வேறு இடங்களில் இரண்டு இரும்பகங்கள், அழகுசாதனக் கடை, இரண்டு வீடுகள், கடைகள் எனப் 13 இடங்களில் இவ்வாறு வெவ்வெறு நாள்களில் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.
மோட்டார் சைக்கிள் ஒன்று, இரண்டு பெண்களின் சைக்கிள்கள், பால்மா ரின்கள், பெட்டிகள், இனிப்பு வகைகள், மின்பிறப்பாக்கி ஒன்று, நீர் இறைக்கும் மின் மோட்டார்கள் - 5, 7 தேங்காயெண்ணை பரல், மண்ணெண்ணை பரல், பெறுமதிமிக்க ஒலிபெருக்கிப் பெட்டி என பல பொருள்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.
(த-4)

# இந்திய மீனவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், நவ. 23
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி ஊடுருவினர் என்ற குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 20 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
கடற்படையினரால் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
அவர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
(த-19)

# கொலைச் சந்தேக நபர் தொடர்ந்து மறியலில்

தென்மராட்சி, நவ.23
கொடிகாமத்தில் மனைவியையும், மகளையும் வெட்டிக் கொன்ற நபரை விளக்க மறியலில் வைக்குமாறு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.
கடந்த செப்ரெம்பர் பத்தாம் திகதி இரவு மனைவியையும், மகளையும் கத்தியால் வெட்டிக் கொலை செய்துவிட்டு தப்பியோடிய நபரை திருகோணமலை தம்பலகாமம் பொலிஸார் அங்கு வைத்துக் கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் கையளித்தனர்.
கொடிகாமம் பொலிஸார் இந்த நபரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில முற்படுத்தி மேலதிக விசாரணைகள் நடத்த 24 மணி நேர அவகாசம் கோரியிருந்தனர். அதற்கு நீதிவான் அனுமதி வழங்கியிருந்தார்.
விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்தியபோது டிசெம்பர் ஆறாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
(த-9)

# கமரூனுக்கு எதிராக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, நவ.23
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் வட பகுதி பயணத்தின் பின்னரான அவரது அறிக்கையை கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு தெவட்டகஹா ஜும்மா பள்ளி வாசலுக்கு அருகில் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.
ஒரு தலைப் பட்சமாக இயங்கும் பிரிட்டன் பிரதமரின் கொள்கையைக் கண்டிக்கும் அமைப்பே இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்து நடத்தியது.
இந்தப் பேரணியில் 'முஸ்லிம் மக்களை கமரூன் மறந்தது ஏன்?', 'வடக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களுக்கு கமரூன் செல்லாதது ஏன்?', 'அயர்லாந்துக்கு ஒரு நீதி இலங்கைக்கு ஒரு நீதியா?', 'பிரிட்டன் பிரதமர் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்வது ஏன்?' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஆர்ப்பாட்டக் காரர்கள் தாங்கியிருந்தனர்.
(த-10)

## சிறுவர் துஷ்பிரயோகம்: இளைஞர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.23
யாழ்.நகரில் சிறுவர்களைப் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்து வந்த முஸ்லிம் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.
யாழ்.நகரில் விளையாட்டு மைதானத்துக்கு விளையாடச் செல்லும் 16 வயதுக்குட்பட்ட இரு சிறுவர்களைக் குறித்த நபர், நண்பர்களாக்கிப் பின்னர் அவர்களுக்கு மதுப் பொருள்கள் மற்றும் போதைப் பொருள்களை வழங்கிக் கொடுத்து பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார்.
துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்ட சிறுவர்களின் பாடசாலை ஆசிரியர்கள் ஊடாக இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.
இதனையடுத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த இரு சிறுவர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை அறியப்பட்டுள்ளது.
(த-5)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் முல்லைத்தீவில் பணிப் புறக்கணிப்பு

முள்ளியவளை, நவ.23
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த 21ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.
முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றத்தைக் கண்டித்தே இந்தப் பணிப் புறக்கணிப்பை மேற்கொள்வதாகவும் இதற்குத் தகுந்த பதில் கிடைக்காவிடில் மாகாண மட்டத்தில் புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
இப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக ஒரு விசேட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு வாரத்துக்குள் பதில் தெரிவிக்கப்படும் எனவும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.
இப் பணிப் புறக்கணிப்பால் இரு நாள்களாக மாவட்டத்திலுள்ள சகல இறைச்சிக் கடைகளும் மூடப்பட்டுள்ளன.
(த-433)

## 79 இலங்கையரை நாடு கடத்தியது ஆஸ்திரேலியா

சட்டவிரோதமான முறையில் கடல்வழியாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரிய இலங்கையர்களில் 79 பேர் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.
கடந்த 10ஆம் திகதி ஆஸ்திரேலியா சென்றடைந்த குழுவொன்றே இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டுள்ளது என அந்நாட்டு அரசு கூறியுள்ளது.
அரசின் புதிய கொள்கையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, "நீங்கள் படகு மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவந்தால், இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுவீர்கள்" என்ற கடுமையான செய்தியையும் அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

# கடற்றொழில் பரிசோதகராக நால்வர் புதிதாக நியமனம்

யாழ்ப்பாணம், நவ.23
யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்துக்கு நான்கு கடற்றொழில் பரிசோதகர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
இவர்களுக்கான நியமனங்களை கடற்றொழில் அமைச்சு வழங்கியுள்ளது.
இந்த நான்கு பேரில் ஒருவர் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர் மற்றைய மூவரும் மட்டக்களப்பு கல்முனையை சேர்ந்தவர்கள்.
யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தில் எட்டு கடற்றொழில் பரிசோதகர்களுக்கு வெற்றிடம் உள்ளது.
இதில் தற்போது நான்கு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. நியமனம் செய்யப்பட்ட கடற்றொழில் பரிசோதகர்கள் தமது பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.
(த-17)

# இலங்கை-இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு டிசெம்பரில் தீர்வு

## மத்திய அமைச்சர் வாசன் நம்பிக்கை



**"இலங்கைக் கடற்படையால் புதுக்கோட்டை மீனவர்கள் சிறைப் பிடிக்கப்பட்ட சம்பவம் கண்டிக்கத் தக்கது. உலக மீனவர் தினத்தன்று இச்சம்பவம் நடைபெற்றது**

இலங்கை - இந்திய மீனவர் பிரச் சினைக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் வாரத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.
இரு நாட்டு மீனவர்களும் சந்தித்து கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகள் டிசெம்பர் மாதத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த பேச்சின் மூலம் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
இலங்கைக் கடற்படையால் புதுக்கோட்டை மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கது. உலக மீனவர் தினத்தன்று இச்சம்பவம் நடைபெற்றது வருத்தமளிக்கிறது.
இதுதொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை தொடர்புகொண்டு தெரிவித்தேன். டிசெம்பர் 3ஆவது வாரத்திற்குள் தமிழக - இலங்கை மீனவர்கள் ஒருசேர பேச்சு நடத்தி சுமுக முடிவு எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார் என்றும் ஜி.கே.வரசன் குறிப்பிட்டுள்ளார்.

# பட்ஜட்டுக்கு எதிராக 25இல் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## ஜே.வி.பியின் நாடா ளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி முன்வைத்துள்ள 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.
அத்தோடு, "இந்த அரசின் வரவு செலவு திட்டத்தினால் அடுத்த ஆண்டு மேலும் 1278 பில்லியன் ரூபாவை அரசு கடனாக பெறும் அபாயம் காணப் படுகின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.
பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற அக்கட்சியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,
"அரசு வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்தாலும் இதிலிருந்து நிச்சயமாக விலகியே செயற்படும். காரணம், 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை அரசு முன்வைத்தபோது பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிக்கப்படும் என்றோ, கஸினோவுக்கானவரிகுறைக்கப்படும்என்றோ அதில் குறிப்பிடவில்லை. ஆனால், இவற்றையெல்லாம் செய்து மக்களை அரசு கஷ்டப்படுத்தியது.
அதேபோல்தான் அடுத்த வருடமும் நடக்கும். அதுமட்டுமல்ல, தொலைபேசி, இணையம் போன்றவற்றிற்கு 5 வீதவரியை மேலும் அதிகரித்து ஏமாற்றமடைந்துள்ள மக்களை மேலும் ஏமாற்றியுள்ளது. இதுவே இந்த அரசின் தன்மை.
அரசு அடுத்த ஆண்டு வருமானமாக 1495 பில்லியன் ரூபாவை எதிர்ப்பார்க்கிறது. ஆனால், இந்த வரவு - செலவு திட்டத்தை பார்க்கின்றபோது 1345 பில்லியன் ரூபாவே வருமானமாக வரக்கூடும். இந்த வருமானத்தில் அரசு ஏற்கனவே பெற்ற கடன் மற்[illegible] விடும். அப்படியானால், எஞ்சி காணப்படும் தொகையோ வெறும் 30 பில்லியன் ரூபாவே. இதை வைத்து நாட்டுக்கும் மக்களுக்கும் என்ன செய்ய முடியும். இதனால், மேலும் அரசு 1278 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுக் கொள்ளும் அபாயம் காணப்படுகிறது. இதனால் மக்களே பாதிக்கப்படுகின்றனர்.
இதை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்த வரவு - செலவு திட்டத்தை எதிர்த்து நாம் அடுத்த 25 ஆம் திகதி கொழும்பில் பெரியதொரு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம். இது ஒரு [illegible]. அந்த அர[illegible] செயற்பாடுகள் ஓயும் வரை எமது போராட்டங்கள் ஓயாது" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்ரநெற், ஈ மெயிலின் வருகையின் அதிகரிப்பின் காரணத்தாலே தபால் பெட்டிகள் எல்லாம் இப்போது சாவு வீட்டு நோட்டீஸ் ஒட்டும் பலகைகளாக மாறியுள்ளன. நேற்று முன்தினம் நாவலர் வீதியில் உள்ள வீடு ஒன்றின் சாவு நிகழ்வின் போது வீட்டுக்கு அருகில் உள்ள தபால் பெட்டியில் ஒட்டப்பட்டிருந்த நோட்டீஸ். (வ-21)

# வலி. வடக்கு வீடழிப்பு உடனே நிறுத்துங்கள்

### சரவணபவன் எம். பி. ஊடாக ஜனாதிபதிக்கு வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 23

போர் காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் சொந்த இடங்களில் காலாதிகாலமாக வாழ்ந்து வந்த மக்கள் போர் காரணமாக உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் தமது சொத்துக்கள் அனைத்தையும் கைவிட்டு புலம்பெயர்ந்து வசதியீனங்கள் அற்ற நிலையில் வேறு இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட அமைதிச் சூழ்நிலையை அடுத்து அவர்கள் மீண்டும் சொந்த வாழ்விடங்களை நோக்கிச் செல்வதற்கான சந்தர்ப்பம் வெகு விரைவில் உருவாகும் என்று எதிர்பார்த்த இவ்வேளையில் அந்த மக்களின் எஞ்சியுள்ள அடையாளங்கள் மிக அண்மையில் இடித்தழிக்கப்பட்டமை மிகமிக வேதனைக்குரியதாகும். எனவே, இந்த விடயம் தொடர்பில் தங்களது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எதிர்பார்க்கிறோம் என்று வலிகாமம் மேற்கு பிரதேசசபை தவிசாளர் திருமதி ஐங்கரன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் ஊடாகத் தவிசாளர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள நீண்ட கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த காலங்களில் இடம்பெற்று முடிந்த மிகக் கொடூரமான போரால் பாதிப்புக்குள்ளாகி மீண்டும் ஓர் அமைதியான வாழ்வியலை நோக்கி நகர்ந்து செல்ல முற்பட்ட வேளையில் மீண்டும் மறைமுகமான தாக்கங்களை அனுபவிக்க நேர்ந்தமைக்கு மேலாக ஓர் இசைவற்ற சூழல் இயல்பாகத் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலையில் காலத்துக்குக் காலம் ஜனநாயக ரீதியாக முறைப்பாடுகளை மேற்கொண்டோம். அவை சார்பாக இது வரை சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. இந்த நிலையில் இந்த இடத்திலே கூடி ஓர் அமைதிப் பிரார்த்தனையை ஏற்பாடு செய்து மீண்டும் தடவை உங்களிடம் எமது கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். இந்த வகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தங்களது உயரிய நடவடிக்கையைக் கோருகின்றோம்.

★ வலி. வடக்கு பிரதேசத்தில் மிக நீண்ட காலத்துக்கு முன்னர் விவசாயமும் கடற்தொழிலும் மிக சிறப்பாகக் காணப்பட்ட நிலையில் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் காலாதிகாலமாக காத்துவந்த எமது சொத்துக்களை விட்டு உயிரைக் காப்பதற்காக மக்கள் புலம்பெயர்ந்தனர். இந்த நிலையில் அவர்கள் நாட்டின் அமைதிச் சூழலின் பின் மீண்டும் தமது சொந்த வாழ் விடங்களை நோக்கிச் செல்வதற்கான சந்தர்ப்பம் மிக விரைவில் உருவாகும் என எதிர் பார்த்த வேளை எஞ்சியுள்ள அடையாளங்கள் மிக அண்மையில் இடித்தழிக்கப்பட்டமை மிக வேதனைக்குரியதாகும். இந்த விடயம் தொடர்பில் தங்களது ஆக்கபூர்வமான நடவடிக்கையை எதிர்பார்க்கின்றோம்.

★ மிக நீண்ட போரின் பின்னர் போர் சூழலுக்குள்ளும் பாதுகாக்கப்பட்டு வந்த எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் அம்சங்களில் ஒன்றான எமது வழிபாட்டுத் தலங்கள் பலவகையிலும் மிக அண்மைக் காலத்தில் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றன. மிக அண்மையில் கூட தம்புள்ள பகுதியில் காளி கோயில் இடிக்கப் பட்டதற்கு மேலாக அந்தக் கோயில் சுற்றாடலில் வாழ்ந்த மக்களும் அவர்களது இருப்பிடங்களை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இவ்வாறான சூழலில் இந்து தமிழ் மக்களின் மனங்களில் ஜனநாயகம் மீதும் இந்த நாட்டின் வாழ்வுரிமை மீதும் கொண்டுள்ள பற்றுறுதி சிதைந்துவிடும் என்றே குறிப்பிடலாம். இந்த விடயம் தொடர்பில் தாங்கள் ஆக்கபூர்வமான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வீர்கள் என பரிபூரணமாக நம்புகின்றோம்.

★ மிக அண்மைக் காலமாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இந்த நிலையில் அவர்கள் அச்சத்துக்கு உள்ளாக் கப்பட்டதற்கு மேலாக மனரீதியாகவும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதேவேளை கடந்த காலப் போரால் பாதிப்புக்கு உள்ளாகிய பெண் தலைமைத்துவ குடும்பங்கள் என அடையாளப்படுத்தப்பட்டு அவர்கள் பிறிதொருவரிலோ அல்லது பிறிதொரு சமூகத்திலோ தங்கி வாழாது தாமாகவே வாழக்கூடிய நிலை இதுவரை உரிய முறையிலே பூர்த்தி செய்யப்படவில்லை. இந்த விடயம் தொடர்பிலும் தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறோம்.

★ கடந்த கால அசாதாரண சூழ்நிலைகளின் போது காணாமற்போனோர் பற்றிய விடயங்களை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த விடயம் தொடர்பில் ஜனநாயக போராட்டங்கள் பல நடத்தியும் கூட இதுவரை தகுந்த, சாதகமான, திருப்தி அளிக்கக்கூடிய தீர்வு கிடைக்கவில்லை. இந்த நிலை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

★ ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும் தாக்குதல்களும் இதுவரை தொடர்ந்த வண்ணமே உள்ளன. அண்மைக் காலத்தில் கூட பொது மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுகின்றன என்ற நிலையில் அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றார்கள். நவீன ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாகக் கருதப்படும் ஊடகத்துறை இவ்வாறாக தாக்கத்துக்கு உட்படுவது ஒட்டுமொத்த இலங்கையை அதன் ஜன நாயகத்தன்மையை ஏற்புடையதாக்காது என்றே கருதுகின்றோம் - என்றுள்ளது. (வ-15)

## கால்நடை வளர்ப்போருக்கு ஆயிரம் காளை மாடுகள்

### பால் உற்பத்தியை அதிகரிக்க

யாழ்ப்பாணம், நவ. 23

வடக்கில் பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் ஆயிரம் காளை மாடுகள் கால்நடை வளர்ப்போருக்கு தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன என்று வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம். ஹால்டின் தெரிவித்தார்.

உள்ளூர் இனமாடுகளை நல்லின மாடுகளாக மாற்றி அதிக பாலை வழங்கக்கூடிய பசு மாடுகளை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். வடக்கில் கால்நடை வளர்ப்போரிடம் உள்ளூர் மாடுகள் உள்ள போதும் அவை கூடியளவு பாலைத் தருவது இல்லை. இதனால் பால் உற்பத்தியாளர்களுக்கு போதிய வருமானம் இல்லை. எனவே ஏற்றுமதிக்கான வாய்ப்பு மிகக் குறைவடைகிறது. இதனை ஊக்குவித்து பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் நல்லினக் காளை மாடுகள் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் ஊடாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனூடாக நல்லின பசுமாடுகள் உருவாக்கப்பட்டு வடக்கில் பால் உற்பத்தி அதிகரிக்கப் படவுள்ளது - என்றும் தெரிவித்தார். (வ-14)

## நவாலியில் நாளை இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 23

போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவும் நோக்குடன் நவாலியூர் க. கபில்ராஜினால் உருவாக்கப்பட்டு பாடப்பட்ட இறுவட்டு வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நவாலி வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் இடம்பெறும்.

த. கபில்ராஜின் எழுத்துருவிலும், இனிய குரலிலும் அமையப் பெற்ற இறுவட்டு விற்பனை மூலம் கிட்டும் நிதி போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நேரடியாக வழங்கப்படவுள்ளது.

அ. கேதீ, யே. ம. யோசப், யி. கீர்த்திகா ஆகியோர் இணைக் குரல் வழங்க, அ. கேதீஸ் இசை அமைத்துள்ளார். (ஒ-50)



## பருத்தித்துறைக்கு வந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸுக்கு மதவாச்சியில் கல்வீச்சு

பருத்தித்துறை, நவ. 23

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பருத்தித்துறை டிப்போவுக்குரிய கொழும்பு - பருத்தித்துறை பஸ் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் இனந்தெரியாதோரால் கல் வீச்சுக்கு இலக்காகி முன் கண்ணாடி சேதமடைந்துள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

குறித்த பஸ் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டது. நேற்று அதிகாலை 2.15 மணிக்கு மதவாச்சி நகர்ப்புறப் பகுதியிலுள்ள இக்கிரி கொலாவ என்ற இடத்தில் உணவுக்காக பஸ் நிறுத்தப் பட்டது. அதன்போது உணவகத்துக்கு அருகிலிருந்த பற்றை ஒன்றுக்குள் இருந்து இனந்தெரியாத நபர்கள் சிலர் கல்வீசி பஸ்ஸை தாக்கிவிட்டு தப்பி ஓடிவிட்டனர். இந்தச் சம்பவத்தில் பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடி சேதத்துக்குள்ளாகியது. இது தொடர்பாக மதவாச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மைக் காலத்திலும் குறித்த பஸ்ஸுக்கு கல் வீசப்பட்டு கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (வ-422)



"_"

இக்கிரி கொலாவ என்ற இடத்தில் உணவுக்காக பஸ் நிறுத்தப் பட்டது. அதன்போது உணவகத்துக்கு அருகிலிருந்த பற்றை ஒன்றுக்குள் இருந்து இனந்தெரியாத நபர்கள் சிலர் கல்வீசி பஸ்ஸை தாக்கிவிட்டு தப்பி ஓடிவிட்டனர்.

## வறுமை நிலையாலேயே எல்லை தாண்டினோம்

### கைதாகிய இந்திய மீனவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

குடும்ப கஷ்டம் காரணமாகவே கடல் எல்லையைத் தாண்டி வருமானத்தைத் தேடுவதற்காக இலங்கைக் கடற்பரப்புக்கு மீன்பிடிக்க வந்தோம் என்று நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடி வளங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. இதனால் மீன்பிடித் தொழிலில் எமக்கு போதிய வருமானம் கிடைக்கப் பெறுவதில்லை. இதனால் பிள்ளைகளின் படிப்புச் செலவுக்குக் கூட வருமானம் போதுமானதாக இல்லாததால் பெரும் கஷ்டத்தை எதிர்கொண்டு வருகின்றோம். இந்திய கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட போதும் மீன்கள் அதிகளவில் பிடிபடாததால் இலங்கைக் கடற்பரப்புக்குள் உள்நுழைந்து மீன்பிடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இழுவைப் படகுகளில் சட்ட விரோத உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது இலங்கை மீனவர்களையும் பாதிக்கும் எனத் தெரிந்த போதும் எம்மால் அதனைத் தவிர்க்க முடியாதுள்ளது. வருமானத்தைத் தேடியே நாம் இவ்வாறு மீன்பிடிக்க வந்தோம் - என்றனர்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 20 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினரால் அனலைதீவு கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டு யாழ். மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் அன்றையதினமே முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்காக எடுத்துக் கொண்ட மல்லாகம் நீதிவான் அவர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். கைது செய்யப்பட்ட மீனவர்கள் 17 வயது தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்காத

# பிரதேச செயலர்களுடைய பெயர்ப்பட்டியல் வேண்டும்

## செனவிரத்ன வேண்டுகோள்

கொழும்பு.நவ.23
அரசினால் வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்காத பிரதேச செயலர் களின் பெயர்ப் பட்டியலை உடனடியாகப் பெற்றுத் தருமாறு அனைத்து மாவட்டச் செயலர்களுக்கும் பொது நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன அறிவித்துள்ளார்.
ஒவ்வொரு பிரதேச செயலர் களுக்கும் வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களில் அவர்கள் கட்டாயமாகக் குடியமர வேண்டியுள்ளது என ஏற்கெனவே சுற்றறிக்கைகள் மூலமாக உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.



மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண அதிகாரிகளை அந்தந்தப் பிரதேசங்களிலேயே தங்க வைப்பதற்காக ஏற்படுத் தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களைப் பயன்படுத்திக்கொள்ளாதிருப்பதானது தேசிய ரீதியில் பெரும் அநீதி என்று அவர் கூறினார்.
உத்தியோகபூர்வ இல்லங்கள் அவசியப்படாதிருக்கும் பட் சத்தில் அவற்றை வேறு அரச அதிகாரிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# ரயில்வேக்குத் தண்டமாக ரூ.17 லட்சம் 'வருமானம்'

## *கடந்த மாதத்தில் மட்டும்*

கொழும்பு, நவ.23
ரயில்வே திணைக்களம் கடந்த மாதம் 16 லட்சத்து 79 ஆயிரத்து 450 ரூபாவை தவறான வழிகளில் பயணத்தை மேற்கொண்ட ரயில் பயணிகளிடம் தண்டப் பணமாகச் சேகரித்துள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.
இந்தத் தொகை நடமாடும் பரிசோதனைகள், திடீர் சோத னைகள் என்பவற்றின் மூலமாக ரயில் பயணிகளி டமிருந்து சேகரிக்கப்பட்டதாக ரயில்வே வர்த்தக அத்தியட்சகர் ஜி. டபிள்யூ. எஸ். சிசிர குமார தெரிவித்தார்.



அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:-
கொழும்பு, நாவலப்பிட்டி, அநுராதபுரம் ஆகிய ரயில்வே வலயப் பகுதிகளில் சுமார் ஆயிரத்து 335 பயணிகளிட மிருந்து தண்டமாக இந்தத் தொகை அறவிடப்பட்டதாகவும் தெரிவித்தார்.
தண்டம் செலுத்திய பயணிகளில் பலர் மூன்றாம் வகுப்புக்கான பயணச் சீட்டை வாங்கி விட்டு முதலாவது, இரண்டா வது வகுப் புக்களில் பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.
ஏராளமானவர்கள் பயணச் சீட்டு இல்லாத நிலையில் பயணித்துள்ளனர். மேலும் பலர் பயணச் சீட்டில் குறிப்பிட்ட இடத்துக்கும் அப்பால் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.
மேலும், ரயில் பயணிகளின் தவறான செயல்களைக் கட்டுப் பாட்டுக்குள் வைக்கும் பொருட்டு தண்டமாக விதிக்கப்படும் ஆகக் குறைந்த தொகை 2 ஆயிரத்து 500 ரூபாவாக நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை மரியதாஸ் (தம்பிஜயா, சில்லாலை - இத்தாலி)



சில்லாயைப் பிறப்பிடமாகவும், பலர்மோ இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மரியதாஸ் கடந்த 21.11.2013 வியாழக்கிழமை இத்தாலியில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் லண்டனில் வசிக்கும் திருமதி பிறடென்சியா (தயா) வின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - யாகம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை (மருசலின்) எலிசபேத் தம்பதியரின் அன்புமருமகனும் மேரிதிரேசா (நேசம் - இளவாலை), லூர்துமலர் (மலர் - கனடா), திரேசம்மா (ராணி - சில்லாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜானிப்பிரியா (லண்டன்), சிந்துப்பிரியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமலதாஸ் (லண்டன்), சுஜி (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும் ஆயிஷா வின் பாசமிகு பேரனும் அலைக்சாண்டர், சவிரிமுத்து (கனடா), செபஸ்ரியம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் சிறி (லண்டன்), கருணா, சியாமினி (பிரான்ஸ்), நிஷாந்தினி, சுதாகரன் (கனடா), பிரபாகரன் (ஜேர்மனி), அருட் திரு பாஸ்கரன், சதர்சினி (கனடா), பிரதினி (கனடா), டெனிசன், டெனோசன், அருட்சகோதரி செபோஜினி (வவுனியா), டிமல்சன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.
அன்னாரின் இறதிச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
0039 3887214828 (விமல் இத்தாலி)
0044 7411397132 (சிந்து - லண்டன்)
0094 213218659 (இலங்கை - ராணி)
0044 7594343651 ( லண்டன் - யானி)
0094 021 4905813 (இலங்கை - நிஷாந்தினி)
0012 899972085 (கனடா - சுதர்சினி)

தகவல்:
சகோதரிகள் : மேரிதிரேசா, லூர்துமலர்
திரேசம்மா மற்றும்
அருட் தந்தை பாஸ்கரன்

## யானைத்தந்தம் வைத்திருந்த நபருக்குச் சிறை

யானைத்தந்தம் வைத்திருந்த தாகக் கூறப்படும் இளைஞ னுக்கு 12 மாதகால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட் டுள்ளதுடன், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அபராத மாக செலுத்துமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.பிரிங்கி உத்தர விட்டார்.
2008 ஆம் ஆண்டு பன்னல கம, மாந்தோட்ட பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமாக யானைத்தந்தம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டு அவருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்குதல் செய்தனர். இந்த நிலையில், அவருக்கு எதிரான வழக்கு நடைபெற்று வந்த நிலையில் புதன்கிழமை இந்தவழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் இவ்வாறு தீர்ப்பளித்தார்.

# சிறந்த சங்கங்கள் தெரிவில் பண்டத்தரிப்பு முதலிடத்தில்

91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சங்கங்கள் ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று சங்கங்கள் பிரிவில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளன.
யாழ். மாவட்டத்தில் உள்ள சங்கங்களின் செயற்பாடுகள், வியாபார நடவடிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.
இதன் அடிப்படையில் சிறந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்தையும், அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் இடத்தையும், நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.
அத்துடன் கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், யாழ்.சித்த மருத்துவக் கூட்டுறவு சங்கம் ஆகிய சங்கங்கள் முதல் நிலையில் உள்ளன.
இந்த சங்கங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (கு-17)

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் கிரிதரன்

(பொறியியல் ஆலோசகர் முன்னாள் RRAN பொறியியலாளர்)



நல்லூர் 2 ஆம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும், நல்லூர் 37/1 வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் கிரிதரன் நேற்று (22.11.2013) காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் (சட்டத்தரணி) மற்றும் விமலோதயம் தம்பதியரின் அன்புமகனும் நளாயினியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர்) - வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் பிரணவன் (HND - Civil Eng- ATI), கிரிஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் Dr.ராகவன் (பஞ்சாப்), Dr.காயத்திரி (பஞ்சாப்), சுபாஷினி (கொழும்பு), பாரத்தீபன் (அமெரிக்கா), கேசவன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூத்வுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/1 வைமன் வீதி, நல்லூர்.
தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கதிரித்தம்பி நாகம்மா



குரும்பசிட்டி றோட் கட்டுவனைப் (ஊரங்கினை) யைப் பிறப்பிடமாகவும், இல. 98 சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி நாகம்மா நேற்று (22.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
க. நவரத்தினம் (மகன்) 021 3734545

## 21 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 06 . 07 . 1927
உதிர்வு 03 . 11 . 2013

திருமதி செல்லம்மா செல்லையா

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லையா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று 22.11.2013 வெள்ளிக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்றது வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 23.11.2013 சனிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

அரசடி அம்மன் வீதி,திருநெல்வேலி. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவாரிப் பரீட்சார்த்திகள் பதிவுகளை மேற்கொள்ளலாம்

*ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு*

யாழ்ப்பாணம், நவ.23
2014 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு முதல் தடவையாக வெளிவாரிப் பரீட்சார்த்தியாகத் தோற்றவுள்ள 21 வயதுக்குக் குறைந்தவர்கள் பதிவுக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.
மாகாண கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதால் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பகுதியில் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் மார்ச் மாதத்தில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் போது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்தமைக்கான உரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டு முறையான விண்ணப்பப் படிவம் பரீட்சைத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## நெற் பயிரை நாசமாக்கும் கட்டாக்காலி மாடுகள்

*புங்குடுதீவு மக்கள் விசனம்*

யாழ்ப்பாணம், நவ.23
புங்குடுதீவுப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளால் நெற்பயிர்கள் நாசம் செய்யப்படுவதால் அந்தப் பகுதி விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாக பெருங்காடு தெற்கு சனசமூக நிலையத்தலைவர் எஸ். ரமேஸ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
கால்நடைச் சம்மேளனம் கட்டாக்காலிகள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. இதனால் பாதிக்கப்படும் விவசாயிகள் சம்மேளனத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளனர்.
பெருங்காடு தெற்கு, வடக்குப் பகுதிகளிலும் வல்லன் பிரதேசத்திலுமாக சுமார் நூறு ஏக்கர் வரை தற்போது நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த வயல்களுக்கு எல்லைகள் போடப்பட்ட போதும் கட்டாக்காலி மாடுகள் வயல்களுக்குள் சென்று முளைத்துள்ள நெற்பயிர்களை சேதமாக்கி வருகின்றன.
இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு கால்நடை சம்மேளனத்துக்கு அறிவித்திருந்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனத்தில் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)

## வரவு -செலவுத் திட்டம் தயாரிக்க ஆலோசனை

*வலி.கிழக்கு பிரதேச சபைக்கு*

யாழ்ப்பாணம், நவ.23
வலி.கிழக்கு பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான ஆலோசனைகளை பொது மக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை பிரதேச சபை மேற்கொண்டு வருவதாக வலி. கிழக்கு பிரதேச சபையின் தலைவர் அன்னலிங்கம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.
இதற்கமைவாக பிரதேச சபையின் உப அலுவலகங்களில் அந்தப் பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் வரவழைக்கப்பட்டு ஆலோசனைக் கருத்துக்கள் பெறப்பட்டு வருகின்றன.
மக்களது கருத்துக்களை உள்வாங்கும் நோக்குடன் முற்கூட்டியே இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
தற்போது கோப்பாய், அச்சுவேலி உப அலுவலகங்களில் மக்களிடம் இருந்து ஆலோசனைக் கருத்துகள் பெறப்பட்டுள்ளன.
மக்களிடம் இருந்து பெறப்படும் கருத்துக்கு அமைவாக வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு காட்சிப் படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். (வ-14-17)

*பிரான்பற்று-நல்லுண்ணி வீதி*

# மீள் புனரமைப்பு பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.23
பிரான்பற்று-நல்லுண்ணி வீதியின் மீள் புனரமைப்புப் பணி ரூபா ஒரு கோடியே 30 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஆயிரத்து 400 மீற்றர் நீளமான வீதியில் 300 மீற்றர் கொங்கிறீட் வீதியாகவும், மிகுதி தார் வீதியாகவும் கடந்த 40 வருடங்களின் பின்னர் மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.
இந்தப் புனரமைப்புத் திட்டதை பிரான்பற்று மக்கள் பிரதேச சபைக்கு உதவும் வகையில் முன்னின்று செயற்படுத்துகின்றனர்.
இந்த மீள் எழுச்சி (புறநெகும) வீதி அபிவிருத்தி திட்டம் தொடர்பாக மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்ததாவது:-
கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக பிரான்பற்று- நல்லுண்ணி வீதி மீள்புனரமைப்பு செய்யப்படவில்லை.
நல்லுண்ணி வீதி முத்து மாரியம்மன் வீதியில் ஆரம்பித்து பேச்சியம்மன் வீதியூடாக சூரிய வைரவர் ஆலயத்தில் முடிவடைகின்றது. இதில் இலுப்பையடி வீதி 300 மீற்றர் நீளத்துக்கு 'கொங்கிறீட்' வீதியாக மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.
இதனைவிட பிரான்பற்றில் பிரதேச சபைக்குட்பட்ட 14 வீதிகளும், வலி.தென்மேற்கில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 147 வீதிகளும் மீள்புனரமைப்பு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன.
இதற்கான முன்மொழிவுப் பத்திரங்கள் திட்டமிடல் துறைக்கு ஊடாக தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீடு பெறப்பட்டு இந்த வருட இறுதிக்குள் வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனுக்கு சமர்ப்பித்து அபிவிருத்தி செய்யப்படும்-என்றார். (வ-41)

> "_"
> நல்லுண்ணி வீதி முத்து மாரி யம்மன் வீதியில் ஆரம்பித்து பேச்சியம்மன் வீதியூடாக சூரிய வைரவர் ஆலயத்தில் முடிவடைகின்றது. இதில் இலுப்பை யடி வீதி 300 மீற்றர் நீளத்துக்கு 'கொங்கிறீட்' வீதியாக மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

## செஞ்சிலுவைச் சங்கத்தால் மாணவருக்கு சீருடை



இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரிவு, கோப்பாய் ஸ்ரீ கந்தவேள் வித்தியாலயத்தைச் சேர்ந்த நாற்பது மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடைகளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை வழங்கியது. மேற்படி பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். செஞ்சிலுவைச் சங்க உபதலைவர் த.ரவிச்சந்திரன், கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் இ.மயில்வாகனம், ஆளுநர் சபை உறுப்பினர் ம.சிவபாதசுந்தரம், வித்தியாலய அதிபர் சு.விவேகானந்தன் ஆகியோர் மாணவர்களுக்கான சீருடைகளை வழங்கினர். (வ-7)

## இலவச பாடநூல் சீருடை விநியோகம்

தென்மராட்சி, நவ.23
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச பாடநூல்களும், சீருடைத் துணிகளும் அந்தந்தப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
பாடநூல்கள் கோட்டக் கல்வி அலுவலகத்திலும் சீருடைத் துணிகள் வலயக் கல்வி அலுவலகத்திலும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## அபராதம்

தென்மராட்சி, நவ.22
ஆவணங்கள் எதுவுமின்றி மது போதையில் வாகனத்தைச் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதி, வாகன வரி ஆகியவை இல்லாமல் மது போதையில் வாகனம் செலுத்தியதாக நபரொருவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.
வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து அனைத்துக் குற்றங்களுக்குமாக 11 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. (வ-9)

## நுணாவில் மத்தியில் வீடு உடைத்து திருட்டு

சாவகச்சேரி - நுணாவில் மத்தி கிராம அலுவலர் வீடு மற்றும் அந்தப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் என்பவற்றில் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் 'கைவரிசையைக் காட்டியுள்ளனர்.
குறித்த கிராம அலுவலர் வீட்டில் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளையில் உள்நுழைந்த திருடர்கள் 10 ஆயிரம் ரூபா பணம் உட்பட பெறுமதிமிக்க பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.
வேலாயுதம் வீதியில் உள்ள கடையினுள் உள்நுழைந்த திருடர்கள் கடையிலிருந்த பல பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். திருட்டுச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-9)

## அங்காடிக் கடைகளுக்கும் மாநகரசபைக்கும் தொடர்பில்லை

*தெரிவித்தார் மாநகர முதல்வர்*

யாழ்பாணம், நவ.23
அங்காடி வியாபாரிகளுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடன் யாழ்.வேம்படி வீதியில் உள்ள காணியை உரிமையாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொடுத்ததைத் தவிர மாநகரசபைக்கு அந்தக் கடைகள் குறித்து தொடர்பு ஏதும் இல்லை என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்.மாநகரசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.
குறிப்பிட்ட அங்காடிக் கடைகள் மூடப்பட்டுள்ளமை குறித்து உறுப்பினர்களிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது. தற்போது வியாபாரம் இன்றிக் கடைகள் மூடப்பட் டுள்ளன.
இது தொடர்பாக மாநகரசபை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
இதற்குப் பதிலளித்த முதல்வர், குறித்த பிரதேசம் வியாபாரத்துக்குப் பொருத்தம் இல்லை எனக் கூறி வியாபாரிகளே கடைகளை மூடிவிட்டனர். கடைகளைக் கட்டியதும் வியாபாரிகளே. எந்தக் கடை யாருக்கு என்று மாநகரசபை தீர்மானிக்கவில்லை. கடை அமைப்பதற்கு மட்டுமே தற்காலிக அனுமதிகளை வழங்கியது. மாநகர சபைக்கும் இந்த விடயத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று தெரிவித்தார். (வ-7)

> "_"
> குறிப்பிட்ட அங்காடிக் கடைகள் மூடப்பட்டுள்ளமை குறித்து உறுப்பினர்களிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது. தற்போது வியாபாரம் இன்றி கடைகள் மூடப்பட் டுள்ளன.

*அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்களுக்கு*

## 8 ஆம் வகுப்பு சித்தியுடன் நியமனம் வழங்க நடவடிக்கை எடுங்கள்

*வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், நவ.23
உள்ளூராட்சிச் சபைகளில் ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் சேவைப் பிரமாண குறிப்பில் இடம்பெற்றுள்ள தவறினால் நியமனம் வழங்கலில் மேலதிக தாமதத்தை உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள் எதிர் நோக்குகின்றனர். எனவே அட்டவணைப்படுத்தப் படாத சுகாதார தொழிலாளர், பாதுகாவலர், சாரதி மற்றும் நூலக தொழிலாளி ஆகிய பதவிகளுக்கான கல்வித் தகைமையாக 8 ஆம் வகுப்பு சித்தியுடன் நியமனம் வழங்க புதிதாக பொறுப்பேற்ற மாகாண சபை துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சண்முகலிங்கம் சபேசன் தெரிவித்தார்.
1-1-2013 முதல் செயற்படும் படியாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வடமாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான ஆளணி வெற்றிட விவரத்தை அறிவித்திருந்தது.
இன்னமும் ஒரு மாதத்தில் ஒரு வருடம் முடிவடையவுள்ளது.
இதுவரை அட்டவணைப்படுத்தப்படாத பல்வேறு பதவிகளுக்கான நியமனங்கள் சபைகளின் தவிசாளர்களினால் முன்னிலைப்படுத்தவில்லை.
மேலும் இந்த விடயம் தொடர்பில் ஏற்கெனவே தவறான கல்வித் தகைமையின் அடிப்படையில் கோரப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் உடன் நிராகரித்து-
புதிதாக உள்வாரியாகவும்- வெளிவாரியாகவும் விண்ணப்பங்களை கோரத்தக்க வகையில் 8 ஆம் வகுப்பு தரத்துடன் புதிய சேவைக் குறிப்பை (ஏனைய மாகாணங்கள், பழைய சேவை பிரமாணக் குறிப்பு அடிப்படையில்) வெளியிட்டு பதில் கடமை புரியும் அலுவலர்களுக்கு அவர்களது சேவையைக் கருத்தில் கொண்டு உடன் நியமனம் வழங்க வடக்கு மாகாண சபை முன்வர வேண்டும் என்றும் சபேசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனப் பட்டாசுக்கு இந்தியாவில் தடை

புதுடில்லி, நவ.23
சட்ட விரோத சீனப் பட்டாசுகளுக்கு இந்தியாவில் தடை விதிக்கப்படும் என்று மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"இந்தியாவில் பட்டாசு தயாரிப்பு நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வருகிறது. இந்திய பட்டாசுகளை அதிக அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
அதே சமயம், சட்ட விரோதமாக சீனாவில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்படும் பட்டாசுகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார். (ற)

## ஆந்திராவை நெருங்கியது 'ஹெலன்'

நர்சபுரி, நவ.23
வங்கக் கடலில் உருவாகி ஆந்திரத்தை நோக்கி நகர்ந்த ஹெலன் புயல் நேற்று மாலை கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதனால் அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
ஆந்திராவின் நர்சபுரியில் இருந்து 25 கி.மீ. தொலைவில் நேற்றுக் காலை நிலை கொண்டிருந்த ஹெலன் புயல் மசூலிப்பட்டினம் அருகே கரையைக் கடக்கும் என்று எச்சரிக்கப்பட்டிருந்தது.
அதனால் ஆந்திராவின் கடலோரப் பகுதிகளில் கன மழை பெய்யும் என்றும், புயல் கரையைக் கடக்கும் போது காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்றும் கூறப்பட்டிருந்தது. அதைய டுத்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். (ற)



சிறையிலிருந்து வெளியே வந்த நெடுமாறனைச் சூழ்ந்துகொண்ட தொண்டர்கள், மாவீரன் பிரபாகரன் வாழ்க, அய்யா நெடுமாறன் வாழ்க, முள்ளிவாய்க்கால் முற்றத்தை இடித்த தமிழக அரசு ஒழிக என கோஷங்கள் எழுப்பினர்.

# தமிழர்களின் கோபம் 'ஜெ' பக்கம் திரும்பும்

### முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற விவகாரம்: எச்சரிக்கின்றார் பழ.நெடுமாறன்

சென்னை, நவ.23
முள்ளிவாய்க்கால் நினைவு முற்றச் சுவரை இடித்த அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழர்களின் பெருங்கோபத்துக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளார் பழ. நெடுமாறன்.
இந்த விவகாரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த பழ. நெடுமாறன் உள்ளிட்ட 83 பேர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் ஊடகவியலாளர்களுக்குக்கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் நெடுஞ்சாலைத் துறையிடம் முறையான அனுமதி பெற்றே கட்டப்பட்டது. அதிகாரிகள் கூறுவது போன்று அத்துமீறி நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சுவர் கட்டப்படவில்லை. சட்ட பூர்வமாக இந்தப் பிரச்சினையை அதிகாரிகள் கையாளவில்லை. குறித்த இடம் தொடர்பாக அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருந்தால் எம்மிடம் அது தொடர்பில் முறைப்படி விளக்கம் கேட்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இருட்டு வேளையில் திருட்டுத்தனமாக பொலிஸாரும், அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு நாங்கள் அதிக பொருள் செலவில் கட்டிய முள்ளிவாய்க்கால் முற்றத்தை இடித்து தள்ளியிருக்கிறார்கள்.
இந்த நடவடிக்கையுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லையெனில் இந்த இடிப்புக்கு பின்னணியில் தமிழக அரசு இருக்கிறது என்று தான் அர்த்தம். இதனால் தமிழ் மக்களின் பெருங் கோபத்துக்கு ஆளாக வேண்டியிருக்கும். முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற சுற்றுச்சுவரை இடித்தது சட்டவிரோதமானது. நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து மீண்டும் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றச் சுற்றுச் சுவரைக் கட்டியே தீருவோம்.
பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டனின் பிரதமர் கமரூன், இலங்கையில் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசியதோடு, தமிழ் மக்களின் அவலங்களை வெளிக் கொண்டுவரநடவடிக்கை எடுத்து வருகிறார். அவருக்கு எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்

### பழ.நெடுமாறன் குறித்து கருணாநிதி

சென்னை, நவ.23
முள்ளிவாய்க்கால் நினைவு முற்றச் சுவர் இடிக்கப்பட்டமை தொடர்பில் பழ.நெடுமாறன் கூறியிருக்கும் கருத்துக்கள் 'தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்' என்ற பழமொழியைத் தான் ஞாபகப் படுத்துகின்றது என்று கூறியுள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.



முள்ளிவாய்க்கால் நினைவு முற்றச் சுவர் இடிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவரிடம் முள்ளிவாய்க்கால் முற்றச் சுவர் இடிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்த நெடுமாறன் உட்பட சுமார் 80 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று டெசோ சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லையே? என்று கேட்கப்பட்டபோது,
"டெசோ சார்பில் நாங்கள் அப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால், சிறையில் இருந்து நாங்கள் வெளியே வர மாட்டோம் என்று நெடுமாறன் அறிக்கை விட்டிருப்பார். அதனால்தான் நாங்கள் அப்படிச் செய்யவில்லை. முள்ளிவாய்க்கால் முற்றத் திறப்பு நிகழ்ச்சிக்கு கலைஞருக்கு அழைப்பு அனுப்பப்படுமா என்று செய்தியாளர் ஒருவர் கேட்ட நேரத்தில், ஈழத் தமிழர் படுகொலைக்குக் காரணமாக இருந்தவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட மாட்டாது என்று பதிலளித்தவர் பழ. நெடுமாறன். அப்படிப்பட்டவரை விடுவிக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானம் நிறைவேற்றினால் ஏற்றுக் கொள்வாரா?
நல்லவேளையாக நீதிமன்றமே அவர்களுக்குப் பிணை வழங்கிவிட்டது. அண்மைக் காலங்களில் அ.தி.மு.க. ஆட்சியை நெடுமாறன் பாராட்டிக் கொண்டுதான் வந்தார். ஆனால் திடீரென்று முள்ளிவாய்க்கால் முற்ற இடிப்புச் சம்பவங்களின் பின்னர் 'நீதி மன்றத்திலும், மக்கள்மன்றத்தின் முன்னாலும் முறையிட்டு இந்த அரசின் முகமூடியைக் கிழித்து எறிவோம்; ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக சட்டசபையில் தீர்மானம் போடுவது, அறிக்கைகள் வெளியிடுவது என்பது போன்ற நாடகங்களில் முதலமைச்சர் ஜெயலலிதா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்; ஆனால் அவருடைய கபட நோக்கம் என்ன என்பதை இந்த இடிப்பு, தகர்ப்பு வேலை நமக்குத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது' என்று கூறியிருக்கிறார். தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்" என்று தெரிவித்துள்ளார்கருணாநிதி. (ற)

## மங்கள்யானின் முதல் படம்



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக விண் ணுக்குச் செலுத்திய 'மாங்கள்யான்' செயற்கைக் கோள் தற்போது பூமியைச் சுற்றி வருகின்றது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தனது செவ்வாய்க் கிரகம் நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. இந்தநிலையில் 'மாங்கள்யான்' தனது தொழிற்பாட்டை ஆரம்பித்துள்ளதுடன் தனது முதலாவது புகைப் படத்தை இஸ்ரோ தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அனுப்பியுள்ளது. ஆந்திரக் கரையோரத்தில் நிலை கொண்டுள்ள 'ஹெலன்' புயலை தெளிவாகப் படம்பிடித்து அனுப்பியுள்ளது 'மாங்கள்யான்'. (ற)

## ஊடுருவத் தயாராக 300 தீவிரவாதிகள்

### இந்திய இராணுவம் எச்சரிக்கை

ஸ்ரீநகர், நவ.23
இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியான ஜம்மு காஷ்மீர் எல்லைக்கு அப்பால் இருந்து 300தீவிரவாதிகள் இந்தியபகுதிக்குள் ஊடுருவத் தயாராக உள்ளனர் என்று எச்சரித்துள்ளது இந்திய இராணுவம்.
இந்திய வடக்கு மண்டல தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டி.எஸ்.கூடாவே இவ் வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறும்போது,
"ஜம்மு எல்லை அருகே சர்ச்சைக்குள்ளான பகுதியில் அவர்கள் தயார் நிலையில் உள்ளனர் என்று உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. எந்த நேரமும் ஊடுருவி இந்திய எல்லைக்குள் தீவிரவாத செயல்களில் ஈடுபட அவர்கள் திட்டமிட்டுள்ளனர். அதையடுத்து ஊடுருவலைத் தடுக்கும் வகையில் எல்லைப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரோந்துப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதால் அவர்களின் திட்டம் நிறைவேறுவது கடினம்" என்று தெரிவித்துள்ளார்.



இதேவேளை, சீனா, பாகிஸ்தான் இடையிலான எல்லையில் நிலவி வரும் சூழல் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்ய இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முப்படை தளபதிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
அதில் இந்தியா-சீனா, பாகிஸ்தான் எல்லையில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், காஷ்மீர் எல்லைப் பகுதியில் ஊடுருவல் மற்றும் எதிர் தாக்குதல் விடயங்கள் ஆகியன குறித்து ஆராயப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ற)

## தமிழக முதலமைச்சருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

### வேட்பு மனுத்தாக்கல் விவகாரத்தில்

நான்கு தொகுதிகளில் வேட்பு மனுத் தாக்கல் செய்தமை குறித்தமை குறித்த மேல் முறையீட்டு மனு தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயல லிதாவுக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.
2001ஆம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் புவனகிரி, கிருஷ்ணகிரி, ஆண்டிப்பட்டி, புதுக்கோட்டை ஆகிய 4 தொகுதிகளில் ஜெயலலிதா வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தார். 4 தொகுதிகளில் வேட்பு மனுதாக்கல் செய்ததை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால்அந்தமனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
இந்த நிலையில், நாகப்பட்டினம் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஏகேஎஸ் விஜயன் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், இது குறித்து பதில் அளிக்குமாறு ஜெயலலிதாவுக்கும், அப்போது தேர்தல் அதிகாரிகளாக பணி புரிந்தவர்களுக்கும் அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளது. (ற)

## அடங்க மறுக்கும் சாமியார்: புதையல் எடுப்பதில் விடாப்பிடி

லக்னோ, நவ.23
உத்தரப் பிரதேசத்தில் பழங்கால கோட்டையான உன்னாவ் கோட்டையில் ஆயிரம் தொன் தங்கப்புதையல் இருக்கின்றது என்று கூறிப் பரபரப்பை ஏற்படுத்தியவர் சோபன் சர்க்கார் சாமியார். அவரின் கனவை வ நம்பி புதையல் தோண்டும் இந்திய தொல்லியல்துறையும் சில பழைய கால சுவர்களைக் கண்டுபிடித்ததுடன், களைத்துப் போய் தங்கம் தேடுவதை நிறுத்தி விட்டது.
இந்தநிலையில் சாமியார் தனது கனவில் விடாப்பிடியாக உள்ளார். தனது பக்தர்களுடன் சென்று கனரக இயந்திரங்களின் உதவியுடன் அந்தப் பகுதியில் புதையல் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளார் அவர். புதையல் தோண்ட ஆரம்பிப்பதற்கு முன்னர் விசேட பூசையும் செய்துள்ளாராம் அவர். பூசை செய்து தொடங்கிய போதும் அவரது புதையல் தோண்டும் பணிகள் சில மணி நேரத்திலேயே தடைப்பட்டன. அந்தப் பகுதிக்கு வந்த இந்திய தொல்லியல் துறையும், பொலிஸாரும் அனைவரையும் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று விட்டனர்.
தற்போது ஆச்சிரமத்தில் களைப்பாறும் சோபன் சர்க்கார் கூறுகையில், "புதையல் எடுப்பதற்காக குறிப்பிட்ட இடத்தில் தோண்டப்படவில்லை. என்னை அனுமதித்தால் இரண்டு மணி நேரத்தில் புதையலை எடுத்து விடுவேன். கோட்டை யில் தங்கம் உள்ளது உறுதி" என்று வெகு சாதாரணமாகக் கூறுகின்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானப் பயணத்தில் கைத்தொலைபேசி பயன்படுத்தலாம்

நியூயோர்க், நவ.23
விமானத்தில் பயணம் செய்யும் போது கைத்தொலைபேசி மற்றும் இன்ரநெற் உபயோக்க பயணிகளை அனுமதிப்பது குறித்து அமெரிக்கா ஆலோசனை செய்து வருகிறது.
இதற்கான அறிக்கையில் 3,048 மீற்றர் உயரத்திற்கு மேல் விமானம் பறக்கும் போது கைத்தொலைபேசி மற்றும் இன்ரநெற் பயன்பாட்டை அனுமதிக்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
அதையடுத்து அமெரிக்காவில் விமானம் பறக்கும் போது கைத்தொலைபேசியில் பேச விதிக்கப்பட்டுள்ள தடை விரைவில் விலக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் விமானம் தரையிறங்கும் போதும் ஏறும் போதும் அதற்கான தடை நீடிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. (ற)



நேற்று அதிகாலை சீனாவின் இடம்பெற்ற எண்ணெய் குழாய் வெடிப்புச் சம்பவத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த வெடிப்புச் சம்பவத்துக்கு இதுவரை காரணம் தெரியவரவில்லை. எண்ணெய் குழாய் வெடித்ததை அடுத்துப் பெரும் தீப்பிழம்பு ஏற்பட்டதுடன் அந்தப் பகுதியில் இருந்த வாகனாங்கள் தூக்கியெறிப்பட்டன. அருகில் இருந்த கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

## ஜெனிவா பேச்சுகளில் நம்பிக்கை இன்மை – *ஈரான்*

தெஹ்ரான், நவ.23
தமது நாட்டு அணுத் திட்டங்கள் தொடர்பாக மேற்கு நாடுகளுடன் நடைபெற்று வரும் பேச்சுக்களில் மேற்கு நாடுகள் நம்பிக்கையீனத்துடன் பங்கு கொண்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளது ஈரான்.
தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள ஈரான் நம்பிக்கையீனத்துடன் கலந்துகொள்ளும் பேச்சுக்களில் ஒருபோதும் பயனுள்ள முடிவுகளை எடுக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளது.
கடந்த முறை இடம்பெற்ற பேச்சுக்களின் இறுதியில் மேற்கு நாடுகள் தமது விதிமுறைகளைக் கடுமையாக்கியதாலே ஆக்கபூர்மான முடிவுகள் எதையும் எடுக்க முடியவில்லை.
இனிவரும் பேச்சுக்களில் ஈரான் மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட்டால் இந்தப் பிரச்சினை குறித்து பயனுள்ள முடிவுகளைப் எடுக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது. (ற)

## 30 ஆண்டுகள் துன்புறுத்தப்பட்ட 3 பெண்கள் மீட்பு

லண்டன், நவ.23
பிரிட்டனில் 30 ஆண்டுகளாக அடிமைகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்த மீன்று பெண்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.
லண்டனின் தெற்கு பகுதியில் லாம்பெத் என்ற இடத்தில் இருந்து ஒரு தன்னார்வ தொண்டு அமைப்புக்கு பெண் ஒருவர் தொலைபேசியில் அழுது கொண்டே பேசினார்.
தானும் மற்றும் 2 பெண்களும் ஒரு வீட்டில் 30 ஆண்டுகளாக அடிமைகளாக அடைத்து வைக்கப்பட்டு கொடுமைகளையும், சித்ரவதைகளையும் அனுபவித்து வருவதாக அவர் தெரிவித்தார்.
அதையடுத்து தன்னார்வ தொண்டு ஊழியர்கள், பொலிஸாரின் உதவியுடன் அந்த வீட்டுக்கு சென்றனர்.
அங்கு அடைத்து வைக்கப்படிருந்த 3 பெண்களை மீட்டனர். அவர்களில் 69 வயது மலேசிய பெண், 57 வயது அயர்லாந்து பெண் ஆகியோருடன் இங்கி லாந்தை சேர்ந்த ஒரு பெண்ணும் அடங்குவதாகப் பொலிஸார் கூறுகின்றனர். (ற)

# மேலும் பத்தாண்டுகள் ஆப்கனில் அமெரிக்கா

## இருநாடுகளும் ஒப்பந்தம் கைச்சாத்து

காபூல், நவ.23
2020 ஆம் ஆண்டு வரை ஆப்கனில் தொடர்ந்து அமெரிக்கப் படைகள் நிலைகொண்டிருக்கும் வகையில் இருநாடுகளும் முக்கிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் குறித்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படாவிடத்து அமெரிக்கப் படைகள் ஆப்கனில் தொடர்சியாக நிலைகொள்ளும் வகையில் இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.



*அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் ஆப்கன் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய்.*

ஒப்பந்தத்தின் படி 2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆப்கனில் தங்கியிருக்கும் அமெரிக்க படையினருக்கு ஆப்கன் சட்டங்களில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்படும். ஆப்கனில் தங்கியிருக்கும் அமெரிக்க படையினர் தவறுகள் ஏதும் செய்தால், அமெரிக்க சட்டத்தின்படி அமெரிக்க அரசே விசாரணை நடத்தி தண்டனை அளிக்கும். ஆப்கனில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குக்குள் நேட்டோ படைகள் அங்கிருந்து வெளியேறி விடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் அமெரிக்கப் படைகள் தொடர்ந்து நிலைகொண்டிருக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்துக்கு ஆப்கனில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அங்குள்ள தலிபான் அமைப்பினரும் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (ற)

# மூர்சிக்கு ஆதரவாக மாணவர் போராட்டம்

*பொலிஸாரின் சூட்டில் ஒருவர் சாவு*




கெய்ரோ, நவ.23
எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முகமது மூர்சிக்கு ஆதரவாக மாணவர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியது. அதில் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கெய்ரோவில் உள்ள அல்-அஷார் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் முன்னாள் ஜனாதிபதி முர்சிக்கு ஆதரவாக திடீர் போராட்டத்தில் இறங்கினர். பல்கலைக்கழக வளாகத்தில் ரயர்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.
அதையடுத்து அங்கு குவிந்த பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டன. பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மாணவர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 5 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகின்றது. அந்தப் பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

# இடிந்து வீழ்ந்தது கட்டடம்: 32 பேர் சாவு

*லாட்வியாவில் பரிதாபம்*



ரிகா, நவ. 23
ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான லாட்வியாவின் தலைநகர் ரிகாவின் வணிக மையம் ஒன்றின் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 32 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை மக்கள் கூடியிருந்த பரபரப்பான வர்த்தக நேரத்தில் அந்தக் கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது. பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கி படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.
2011 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட இந்தக் கட்டிடம் அதனுடைய கட்டிட வேலைப்பாட்டிற்காக அந்த நாட்டு அரசிடம் சிறப்பு விருதையும் பெற்றுள்ளது. குறித்த கட்டிடத்தின் மாடியில் தோட்டம் ஒன்றை அமைக்கும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது.
சம்பவத்தினைத் தொடர்ந்து பொலிஸாரும் தீயணைப்புப் படை வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். மீட்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே மற்றொரு [illegible] இடிந்து விழுந்துள்ளது. அதில் சிக்கி ஏழு தீயணைப்பு வீரர்கள் காயமடைந்துள்ளனர். மூன்று கிரேன்கள் பயன்படுத்தப்பட்டு கட்டிட இடிபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன. அதன் பின்னரே கட்டிடத்தின் உள்ளே செல்லமுடியும் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின் றன.
இதுவரை இடிபாடுகளில் இருந்து 36 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மோப்பநாய்களின் உதவியுடன் இன்னும் உயிருடன் இடிபாடுகளில் சிக்கிகொண்டிருப்பவர்களைத் தேடும் முயற்சியும் நடைபெற்று வருகின்றது. 100க்கும் மேற்பட்டவர்கள் இடிபாடுகளில் சிக்கியிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது. (ற)



*சீனா தனது முதலாவது ஆளில்லா போர் விமானத்தை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.*
*கடந்த மாதம் சிறிய ரக ஆளில்லா விமானங்களை இயக்கி ஏனைய நாடுகளுக்கு எச்சரிக்கை மணி அடித்த சீனா தற்போது முதன்முறையாக ஆளில்லா போர் விமானத்தையும் வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.*
*அமெரிக்காவின் யுஎஸ் பி-2 ஆளில்லா விமானத்தை விடவும் சற்றுச் சிறிதாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த விமானம் ஓர் ஜெட் இயந்திரத்தால் இயங்குகின்றது.*
*சோதனை ஓட்டத்தில் சுமார் 20 நிமிடங்கள் வெற்றிகரமாக இந்த விமானம் பறப்பில் ஈடுபட்டது என்றும் கூறப்படுகின்றது. (ற)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவடி மயான அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.23

தாவடி இந்து மயான அபிவிருத்திச் சபை பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு காந்திகலை வளர்ச்சி மன்றசனசமூகநிலையத்தில் நடை பெற வுள்ளது.

சபைத்தலைவர் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில்மயான புனரமைப்பு வேலை தொடர்பான கலந்துரையாடுவதுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும். (ந)

### மணமக்கள் தேவை

- 79இல்பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 15 பாவம் உடைய சொந்த நகைக்கடை வைத்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
- 79இல் பிறந்த 12 இல் செவ்வாய் 42 பாவம் உடைய ஆஸ்திரேலியா எக்கவுண்டன் மணமகனுக்கு Cima பட்டதாரி மணமகள் தேவை.
- 86 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 28¼ பாவம் உடைய விரிவுரையாளர் மணமகளுக்கு மணமகன் தேவை.
- 79 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 11 பாவம் உடைய MBBS மணமகளுக்கு மணமகன் தேவை.
- 85 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 10 பாவம் உடைய Cima எக்கவுண்டன் மணமகளுக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகன் தேவை.
- 85 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 11½ பாவம் உடைய AAT ராஸ்மன் முடித்து வேலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மணமகளுக்குப் பட்டதாரி மணமகன் தேவை.
- 79 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 74½ பாவம் உடைய சட்டத்தரணி மணமகளுக்குப் பட்டதாரி மணமகன் தேவை.

தொடர்பு: [illegible], திருமண சேவை, இல. 135/3, கோவில் வீதி, நல்லூர்

077 607 0862

(40394) (12.6.3)

## பாபாவின் 88 ஆவது அவதாரதின நிகழ்வு

கொக்குவில் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தில் பகவானின் 88 ஆவது அவதார தின நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடை பெற வுள்ளது.

காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறும் இந்த நிகழ்வில் பஜனை, சிறப்புரை, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (ந)

★ ★ ★

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 88 ஆவது அவதார தினவிழா இன்று சனிக்கிழமை சங்கானை அராலி வீதியில் அமைந்துள்ள சாயி சேவா மண்டபத்தில் மாலை 6 மணி முதல் 8 மணி வரை நடை பெறவுள்ளது. விசேடபஜனையும், சாயி கலைநிகழ்வுகளும் இடம் என்று அமைப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-29)

## விண்ணப்பம் கோரல்

வடமாகாணத்தின் வவுனியா வடக்கு வலயத்தின் நெடுங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண் ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர் ஆகக் குறைந்தது 3 வருடங்களேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையைக் கொண்ட இலங்கை நிர்வாக சேவை III மற்றும் வடமாகாண பாடசாலையைச் சேர்ந்த அதிபர் சேவையிலுள்ள இலங்கை அதிபர் சேவை தரம்-I, 2-Iயைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்

தகுதியுடையவர்கள் எதிர்வரும் 30 ஆம் திக திக்கு முன்னதாக மாகாண கல்வித் திணைக்களத்துக்கு சுய விவரங்களுடன் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம். (ந-14)

## பொன் விழா மலர் வெளியீடு

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் குமரன் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் பொன் விழாவை முன்னிட்டு அற்புதப் பொன்மலர் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டா வில் ஆசிமட அரசடி விநாயகர் மணி மண்டபத்தில் நடை பெறவுள் ளது.

நிலையத்தின் தலைவர் மகேந் திரன் சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகயன் ஈ.எஸ். பி.நாகரெத்தினம், கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலய அதிபர் சண். வாமதேவன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாடகைக்கு/குத்தகைக்கு வீடுகள்/கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய 1500 சதுர அடிகளுக்கு மேற்பட்ட பெரிய நடுத்தர வீடுகள்/கட்டடங்கள் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு/குத்தகைக்குத் தேவை.

காலத்திற்குக் காலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேலதிக மாணவர்கள் உள்வாங்கப்படும் போது மாணவர்களுக்கான மேலதிக தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு, மேலதிகமான திருத்தங் களையோ/விரிவாக்கங்களையோ ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்கள் மேலும் விரும்பப்படுகின்றன.

வீட்டை வாடகைக்குத் தர விரும்புவோர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 09.12.2013 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் **சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் தனித்தனியாக கடித உறையின் இடது மேல் மூலையில் மாணவர்களின் விடுதிக்கான வீடு/கட்டடம் என குறிப் பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக் கழக கேள்விச் சபை யின் முடிவே இறுதியானது.

பதிவாளர்

(C/14973)(4.6.3)

## பரிசளிப்பு விழா

துன்னாலை காசிநாதர் வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் பொ.இரத்தின ராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சிவலய ஆரம்பப் பிரிவு உத விக்கல் விப்பணிப்பாளர்திருமதி க.பஞ்சலிங்கம் கலந்து கொள்வர். (ந-35)

### வாடகை

Attached bathroom உடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. (ஒரு நாள் 500/=)

Hotel Villa City, 422 Galle Rd, Colo 6

இராமகிருஷ்ணா வீதிக்கு அருகில்

0722 552 222




# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

### FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

Senior Professor/Professor in **Accounting**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **/Human Resource Management/Financial Management/Commerce**

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| **Senior Professor** | **Rs.67,100 – 11x1,425 – 82,775/-p.m.** |
| **Professor** | **Rs.56,505 – 13x1,310 – 73,535/- p.m.** |
| **Senior Lecturer Grade I** | **Rs.45,545 – 7x1050 – 52,895/-p.m.** |
| **Senior Lecturer Grade II** | **Rs.39,755 – 11x790 – 48,445/-p.m.** |
| **Lecturer (Probationary)** | **Rs.27,775 – 10x645 – 34,225/-p.m.** |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid:

i. Academic allowance –
- Senior Professor – 85% of the basicsalary
- Professor – 85% of the basic salary
- Senior Lecturer Gr. I/Gr. II – 80% of the basicsalary
- Lecturer (Probationary) – 60% of the basic salary

ii. Special allowance - 20% of basic salary

iii. Cost of living allowance - Rs.6,600/-p.m.

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

**Statutory benefits:**

I.Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.

II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.

III.Gratuity payments

IV.Employees' Trust Fund benefits.

V.Free Medical Services.

Closing date:

**Post of Senior Professor/Professor - 21.02.2014**

**Other posts - 31.12.2013**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

(C/14974)(4.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கல்வியும் ஆற்றலும் அழியாததால்*

## சர்வதேசம் எமது பக்கம்

*கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, நவ.23
எம்மிடம் உள்ள கல்வியும், ஆற்றல்களும் அழிந்துவிடவில்லை என்பதாலேயே சர்வதேசம் எமது பக்கம் திரும்பியுள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவரான நா.வை.குகராசா.
கிளிநொச்சி முரசுமோட்டை பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.
அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மாறியுள்ள நவீன உலகின் போக்குக் காரணமாக வாசிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு இது போன்ற போட்டிகளை நடத்த வேண்டிய தேவை உருவாகியுள்ளது.
நீண்ட காலமாக எமது சமூகம் கல்வியையும், ஆற்றலையும் கொண்டிருப்ப தால்தான் உலகம் இன்று எம்மைத் திரும்பிப் பார்க் கின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி அதிபர் தி.வரதன், கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் இ.கிருஷ்ணகுமார், பிரதேச சபை உறுப்பினர்களான அ.செல்லத்துரை, செ. புஸ்பராசா ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
(க-6)

# கட்டடம் அமைப்பதற்கு காணியை வழங்கவும்

*முல்லைத்தீவு மாற்றுத் திறனாளிகள் சங்கம் கோரிக்கை*

முல்லைத்தீவு, நவ.23
முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத்துக்கான கட்டடத்தை அமைப்பதற்குக் காணியொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் போர் காரணமாக சுமார் 7 ஆயிரத்து 500 பேரும், பிறப்பு மற்றும் விபத்துக்கள் காரணமாக 3 ஆயிரத்து 500 பேரும் என சுமார் 11 ஆயிரம் பேர் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர்.
அவர்களின் தேவை கருதி உருவாக்கப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கம் அதற்கான அலுவலகம் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகின்றது.

*"முல்லைத்தீவு மாவட்டத்தில் போர் காரணமாக சுமார் 7 ஆயிரத்து 500 பேரும், பிறப்பு மற்றும் விபத்துக்கள் காரண மாக 3 ஆயிரத்து 500 பேரும் என 11 ஆயிரம் பேர் வரையில் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர்."*

இந்தச் சங்கத்துக்கென நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைக்க வேண்டிய தேவையுள்ள போதிலும் சொந்தமான காணி இல்லாததால் அதனை நிறைவேற்றுவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன.
சொந்தக் காணியொன்று தமக்குக் கிடைக்குமாயின் அதில் நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கென நிதியைப் பல்வேறு வழிகளில் தம்மால் திரட்டிக் கொள்ள முடியுமென சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க-6)

## வன்னேரிக் குளத்தில் அழிக்கப்படும் மீன்குஞ்சுகள்


அக்கராயன், நவ.23
கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் விடப்பட்ட சிறிய மீன் குஞ்சுகள் தடைசெய்யப்பட்ட வலைகள் பயன்படுத்தப்பட்டு பிடிக்கப்படுவதாக இங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
இனப் பெருக்கத்திற்கென குளத்தில் விடப்பட்ட மீன்குஞ்சுகளை நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளவர்கள் பிடித்துச் செல்வதால் எதிர்காலத்தில் வளர்ச்சியடைந்த மீன்களைப் பிடிக்க முடியாத நிலை ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.
இதனை உரிய அதிகாரிகள் கடுமையாகக் கண்காணிக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
(க-18)

## சேதமடைந்த வீதிகள்

வவுனியா, நவ.23
வவுனியா செக்கட்டிப் புலவு கிராம அலுவலர் அலுவலகம் மற்றும் பாடசாலைக்குச் செல்லும் வீதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
இந்த வீதியை செக்கட்டிப்புலவு கிராம மக்கள் உட்பட ஆயிரக் கணக்கான பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். பாடசாலை செல்லும் சிறார்கள் குன்றும் குழியுமாக உள்ள இந்த வீதியூடாக மழை காலங்களில் செல்லும்போது விபத்துக்களை எதிர்நோக்குகின்றனர். இதேவேளை செக்கட்டிப்புலவு கிராம அலுவலரின் அலுவலகத்துக்குச் செல்லும் வயோதிபர்கள் உட்பட பலரும் இந்த வீதியால் பயணிப்பதில் சிர மத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.
பல வருடங்களாகவே இந்த வீதி சேதமடைந்த நிலையிலுள்ளதால் தாம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் உடனடியாக இதனைப் புனரமைக்குமாறும் இல்லையேல் மன்னார் வீதியில் போராட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தாம் தயாராகி வருவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
(க-402)

### இலக்கிய விழா

அக்கராயன், நவ.23
துணுக்காய் பிரதேச செயலகத்தின் கலை ,பண்பாட்டு இலக்கிய விழா அடுத்த மாதம் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.
பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலைஞர் மதிப்பளிப்பு, கலை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசு வழங்கல் உட்பட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-18)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்தில் கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின்போது மக்களின் தேவைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டன.
(க-18)

*ஆயிரக் கணக்கான மக்கள் பயன்படுத்தும்*

## மகாறம்பைக்குளம் வீதியை புனரமைக்க வேண்டுகோள்

வேப்பங்குளம், நவ.23
ஆயிரக் கணக்கான மக்கள் பயன்படுத்தும் மகாறம்பைக் குளம் வீதியை உடனடியாகப் புனரமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
பூந்தோட்டச் சந்தியில் ஆரம்பித்து சிறீராமபுரம் வீட்டுத் திட்டத்துக்குச் செல்லும் இந்த வீதியை சுமார் 3,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த வீதி நீண்ட காலமாகப் புனரமைப்பு எதுவுமின்றிக் காணப்படுகின்றது. எனவே இதனை மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். இந்த வீதியால் சைக்கிளில் கூடச் செல்ல முடியாத நிலையில் மக்கள் அவதிப்படுவதையும் காண முடிகின்றது.
இந்த வீதியின் பல பகுதிகளிலும் பெரிய பள்ளங்கள் காணப்படுகின்றன. மழை பெய்யும் போது இந்தப் பள்ளங்களில் வெள்ளநீர் நிறைந்து காணப்படும். இதனால் சைக்கிளில் செல்வோர் விழுந்தெழும்புவதைக் காண முடிகின்றது.
பொது மக்கள் உட்பட சிறீராமபுரம் திருஞான சம்பந்தர் வித்தியாலயம், மகாறம்பைக் குளம் அ.த.க. பாட சாலை, கரும்பனிச்சங்குளம் அ.த.க.பாடசாலை, மதீனா வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் இந்த வீதியைத் தினமும் பயன்படுத்தி வருகின்றனர்.
தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இந்த வீதியை உடனடியாக புனரமைத்து மக்களின் சிரமங்களைப் போக்குமாறு அந்தப் பகுதி மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
(க-421)

## புலமைப் பரிசிலில் சித்தியடைந்தவர்களுக்கு பாராட்டு

*வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில்*

வவுனியா, நவ.23
வவுனியா விபுலானந்தாக் கல்லூரியிலிருந்து 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த 52 மாணவர்களுக்கான பாராட்டு வைபவமும் பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கல்லூரி அதிபர் வே.இந்திரன் தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், போக்குவரத்து கிராமியத்துறை மீன்பிடி அமைச்சர் எஸ்.டெனீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா நகர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, எம்.தியாகராசா, ஜீ.ரி.லிங்கநாதன் தொழிலதிபர்களான செந்தில்நாதன் மயூரன், எஸ்.கோணேஸ்வரன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவனேஸ்வரி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.
மேலும் மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.
நிகழ்வின் போது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 52 மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (க-5-402)

## மாற்றுத் திறனாளிகளுக்கு அவசியமாகத் தேவைப்படுவது உளவளப் பயிற்சிகளே

*கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் வண. பிதா யோசுவா அடிகளார் தெரிவிப்பு*

மாற்றுத் திறனாளிகளுக்கு உளவளப் பயிற்சிகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன. இவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது மாத்திரமே பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. இவ்வாறு கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தின் இயக்குநரான வண.பிதா யோசுவா அடிகளார் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;
மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் தீர்வாக அமையாது. உளத் தாக்கங்களில் இருந்து மீண்டெழ உளவள பயிற்சிகள் மிக அவசியமானது - என்றார்.
கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சம்மேளனத்தை அமைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலே மாற்றுத் திறனாளிகளிடையே சுய குழுக்களை அமைத்துப் பணியாற்றி வருகின்றோம். நான்கு படிமுறைகளைக் கொண்டு இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். நாம் ஒரு அரங்கச் [illegible] புணர்வை ஏற்படுத்தக் கூடிய வளங்கள் எம்மிடம் உள்ளன. நாம் மாற்றுத் திறனாளிகளுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம். ஒரு மாற்றுத் திறனாளியை அவரது குடும்பமும் சமூகமும் எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம்.
[illegible]ளிகளை [illegible] உருவாக்குவதுடன் வாழ்வாதாரம், மருத்துவம், சுகாதாரம் போன்ற பல்வேறு விடயங்களில் அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம்.
மாற்றுத் திறனாளிகள் வங்கிகளில் கடனுதவிகளைப் பெற்று வாழ்வாதாரத்தை அமைத்துக்கொள்ள முடியும் என்ற பயிற்சிகளையும் வழங்கி வருகின்றோம். மாற்றுத் திறனாளிகளுக்கு உளவளத் துணைப் பயிற்சிகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன. உளத் தாக்கங்களிலிருந்தும் அவர்கள் மீண்டெழுந்து வரும்போது தான் அவர்களிடத்தில் நம்பிக்கை ஏற்படும்.
மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படும் போது தான் அவர்கள் வழங்கப்படும் உதவிகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றார்.
(க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயிகளுக்கு நேர்முகப் பரீட்சை

மட்டக்களப்பு,நவ.23

விவசாய அமைச்சின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படுத்தப் படவுள்ள வர்த்தகப் பண்ணை அமைத்தல் செயற்திட்ட விவசாயிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 27ஆம், 29ஆம்திகதிகளில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் உள்ள விவசாய அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்த நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பித்தவர்கள் அனைவரும் பங்கு பெறலாம் என்று மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பி.உலகநாதன் தெரிவித்துள்ளார். (ச)

## காணிப் பிரச்சினை குறித்து ஆராய கலந்துரையாடல்

மட்டக்களப்பு,நவ.23

கிழக்கு மாகாண விவசாய கால்நடை உற்பத்தியாளர்களின் மேய்ச்சல் தரை மற்றும் சுவீகரிக்கப்பட்டு வரும் காணிகளை மீட்டெடுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை திருமலை மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடை பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அம் பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள காணிப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டது. (ச)

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் தமிழருக்கு கிடைக்க வேண்டும்

## திருமலை நகர சபையில் பிரேரணை நிறைவேற்றம்

மூதூர்,நவ.23

அரச அமைப்புக்கான 13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு அமைவாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று திருகோணமலை நகர சபையின் மாதாந்த அமர்வில் பிரேரணை நிறைவேறியுள் ளது.

திருகோணமலை நகர சபையின் மாதாந்த அமர்வில் நகர சபை உறுப்பினர் கோ.சத்திய சீலராஜா,அரச அமைப்புக்கான 13 ஆம் திருத்தத்துக்கு அமைவான அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்என்ற பிரேரணையை சபையில் முன் வைத்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பாக உரையாற்றியபோது அவர் தெரிவித்ததாவது:-

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பு நாட்டில் வாழ்ந்த சிங்கள, தமிழ் மக்கள் சகோதரர்களாக, ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர்.

1915 ஆம் ஆண்டில் கம்பளையில் சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் மோதலில் ஈடுபட்ட காலத்தில் வெள்ளைக் காரனின் படைகள் சிங்களவருக்கு எதிராகச் செயற்பட்ட வேளையில் சேர்.பொன்னம்பலம் இராம நாதன் கப்பலில் பிரிட்டன் சென்று அங்கு சிங்கள மக்களுக்காக வாதாடி நீதியை நிலை நாட்டியதற்காக அவர் அங்கு இருந்து நாடு திரும்பிய பொழுது சிங்கள மக்கள் அவரை கோச்சு வண்டியில் வைத்து தாமே இழுத்து வந்தகாலம் ஒன்று இருந்தது. சிங்கள, தமிழ் மக்கள் இவ்வளவுக்கு ஒற்றுமையாக வாழ்ந்து வந்து இருக்கின்றனர்.

பல நெருக்கடிக்கும் மத்தியில் நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெற வைத்து தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே என வட மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் ஜனநாயக வழியிலான தீர்ப்பை வழங் கியுள்ளனர்.

எனவே மக்களின் ஜனநாயக தீர்ப்புக்கு மதிப்பளித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி ஐக்கிய இலங்கைக்குள் 13 ஆம் திருத்தத்துக்கு அமைவாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகாரங்களை வழங்கி தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற ஜனாதிபதி முன் வரவேண்டும்.- என்றார்.

இந்தப் பிரேரணையை நகர சபை உறுப்பினர் சி.நந்தகுமார் வழி மொழிந்தார்.

சக உறுப்பிப்பினர்களின் ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டபோது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த இரு உறுப்பினர்கள் பிரேரணைக்கு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியமை குறிப்பிடத் தக் கது. (ச-40)



திருக்கோவில்,தாண்டியடி ,தங்கவேலாயுதபுரம் முச்சந்தியில் அமைந்திருந்த தேனீர் கடைக்குள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு புகுந்த காட்டு யானை கடையை உடைத்து உணவுப் பொருள்களை சாப்பிட்டும் சேதமாக்கியும் உள்ளது. திருக்கோவில் பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம் நேரில் சென்று சேதமடைந்த தேனீர் கடையை பார்வையிட்டார். (ச)

பொத்துவில் பிரதேச சபை

## வரவு- செலவுத் திட்டம் ஒரு வாக்கால் தோல்வி

மட்டக்களப்பு,நவ.23

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட்டிலுள்ள பொத்துவில் பிரதேசசபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் ஒரு வாக்கால் தோல்வியடைந்துள்ளது.

பொத்துவில் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தவிசாளர் எம்.எஸ்.எம்.வாசிதினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு- செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக தவிசாளர் எம்.எஸ்.எம்.வாசித், பசறிச்சேனை முபாரக், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த பதுர்க்கான் மற்றும் மஜீத் ஆகியோர் வாக்களித்துள்ளனர்.

எனினும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான தாஜுதீன், மர்சூக், ரஹீம், முபாரக் மற்றும் தமிழரசுக்கட்சி உறுப்பினர் துரைரத்தினம் ஆகியோர் எதிராக வாக்களித்துள்ளனர்.

அதனால் மேலதிக ஒரு வாக்கால் வரவு - செலவுத் திட்டம் தோற்க டிக்கப்பட்டுள்ளது.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நான்கு உறுப்பினர்கள் வரவு- செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## திருகோணமலை சிறைக்கு வருகை தந்த பிரதிஅமைச்சர்



திருகோணமலை,நவ.23

திருகோணமலை சிறைச்சாலைக்கு சிறைச்சாலை மற்றும் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் சந்திரசிறி முத்துகுமாரன புதன்கிழமை சென்று கைதிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்

பிரதி அமைச்சருடன் அமைச்சின் செயலர் ஜி. எஸ். விதானகே, அமைச்சின் ஆலோசகர் சதீஸ்குமார், திருகோண மலை சிறைச்சாலை அத்தியட்சகர் ஜே. சி.வீரசிங்க ஆகியோரும் சென்றிருந்தனர்.

திருகோணமலை சிறைச் சாலையிலுள்ள 228 கைதிகளையும் பிரதி அமைச்சர் சந்தித்தார்.

கைதிகளுக்கு சிறைச்சாலையில் வேலைகளை வழங்கி அவர்களுக்கு அதன் மூலம் கொடுப்பனவு வழங்கி சேமிப்பை உருவாக்க வேண்டும். அதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வரு கின்றன.

இதன் மூலம் அவர்களது குற்றச் செயல்களை குறைத்துக் கொள்ள முடியும் என்று சிறைச்சாலை மற்றும் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் சந்திரசிறி முத்துகுமாரன தெரிவித்தார். (ச-291)

# கைது செய்யப்பட்ட நபர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை

## பாதுகாப்புத் துறையினருடன் பேச்சு

அம்பாறை ,நவ.23

நிந்தவூர் பிரதேசத்தில் இடம் பெற்ற ஹர்த்தால் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்று கிழக்கு மாகாண சபையின் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஹர்த்தாலின் போது கைது செய்யப்பட்டு புதன்கிழமை சம்மாந்துறை நீதிமன்றத்தில் முன்னிலை செய்யப்பட்ட 21பேரில் 6 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 15 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 15 பேரும் அப்பாவிகள். ஹர்த்தாலின் போது அவர்கள் திட்டமிட்டு பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கவில்லைஎன்று கிழக்குமாகாண சபை உறுப்பினர் ஜெமீல் கூறினார். இந்த 15 பேரையும் விடுவிப்பதற்கு அவசர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார்.

இதற்காக நீதி அமைச்சரும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் ஆகியோர் ஊடாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று ஜெமீல் தெரிவித்தார்.

## காத்தான்குடியிலும் எரிபொருள் நிலையம்



காத்தான்குடி பிரதேச மீனவர்களின் நன்மை கருதி காத்தான்குடி கடற்கரையில் எரிபொருள்நிரப்பு நிலையமொன்று புதன்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தால் 23 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் திறந்து வைத்தார்.

இந்த நிலையத்தில் மீனவர்கள் மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியும். எதிர்காலத்தில் படகுகளின் இறங்கு துறையொன்றை அமைக்க உத்தேசித்துள்ளோம் என்று மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் தெரிவித்தார். (ச)

# நிந்தவூர் சம்பவத்துக்கு நடவடிக்கை வேண்டும்

## கோருகிறார் றிஷாத் பதியுதீன்

மட்டக்களப்பு,நவ.23

நிந்தவூரில் இடம்பெற்ற சம்பவத்துக்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் றிஷாத் பதியுதீன் பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிந்தவூரில் கடந்த சில நாள்களாக இடம்பெற்று வரும் கொள்ளை, திருட்டு சம்பவங்கள் தொடர்பாக சம்மாந்துறைப் பொலிஸில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து விழிப்புக்குழு ஏற்படுத்தப்பட்டது.

விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சிலர் சீருடையை மாற்றி சாதாரண உடையை அணிந்துகொண்டிருந்தவேளையில் கையும், மெய்யுமாக [illegible] னர். அவர்களை சம்மாந்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக விசேட அதிரடிப்



படையினர் [illegible] கைப்பற்றிக் கொண்டு சென்றதேன்?

விசேட அதிரடிப்படையினர் தமது கடமை நடவடிக்கைகளுக்காக சிவில் உடையில் வருவதாக இருந்தால் தங்களது முகாமிலிருந்து சிவிலுடையில் வந்திருக்க முடியும்.

அவ்வாறில்லாமல் சீருடையில் வந்து நிந்தவூரில் வைத்து திருட்டுத்தனமாக உடையை மாற்ற வேண்டியதன் அவசியம் என்ன ? அதுமட்டுமல்லாமல் சாதாரண சிவில் நடவடிக்கைகள் பொலிஸாருக்குரிய கடமையாகும். அவ்வாறான நிலையில் விசேட அதிரடிப்படையினர் என்ன கடமைக்காக அங்கு வந்தார்கள் ? அவ்வாறு வருவதாக இருந்தால் சம்மாந்துறைப் பொலிஸாருக்கு தெரிவிக்காமல் வந்ததேன் ?

எனவே, இந்த விசேட அதிரடிப்படையினரின் செயற்பாட்டிற்குப் பின்னால் இருக்கின்ற மர்மம் தெரியப்படுத்தப்பட வேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார். (ச-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை வானில் கடத்தப்பட்ட குடும்பஸ்தரை உடன் விடுவிக்குக!

## ஜனாதிபதியிடம் ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

மீண்டுமொரு குடும்பஸ்தரை வெள்ளை வானில் கடத்தி சித்திரவதை செய்யப்படுவதை ஜனாதிபதி அறிவாரா? இல்லையெனில் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்டவரை ஜனாதிபதி மஹிந்த உடன் விடுவிப்பாரா? விடுவித்து இனங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டுவாரா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து குமரகுருபரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த வெள்ளிக்கிழமை, கிளிநொச்சி நகரப் பகுதிக்குள் வைத்துப் பொதுமக்கள் பலர் பார்த்திருக்க, பகலில் கடத்தப்பட்ட குடும்பஸ்தர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தான் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக அழுதுகொண்டு தெரிவித்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தக் குடும்பஸ்தர் தடுப்பு முகாமிலிருந்து அண்மையில் விடுதலையாகிய நிலையில் கடத்தப்பட்டிருப்பது பல முன்னாள் போராளிகளின் மனதில் அச்சத்தை விளைவித்துள்ளது.

இவர் கடந்த வட மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தீவிர பரப்புரையை கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொண்டு வந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்தவருக்கு இந்த நிலைமை என்றால் இவரின் விடுதலையில் வடமாகாண முதலமைச்சருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் பெரும் பங்களிப்பிருக்க வேண்டும். குரல் கொடுக்க வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் போட்டா போட்டிக்கு ஆள்கடத்தல் ஒருபோதும் ஜனநாயக நடவடிக்கையாக அமைய முடியாது என்பதை ஜனநாயக சக்திகள் புரிந்து கொள்ளவேண்டும்.

உடனடியாக அந்நபரை விடுவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், இந்த மனித கடத்தலுக்கும் மனித உரிமை மீறலுக்கும் அரசே பொறுப்பேற்கவேண்டும் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மறைந்த ஊடகவியலாளர்களுக்கு கொழும்பில் நினைவஞ்சலி நிகழ்வு





இயற்கை மரணமடைந்த 'உதயன்' பத்திரிகையின் முன்னாள் செய்தி ஆலோசகரும், 'வீரகேசரி' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான எஸ்.நடராஜா மற்றும் 'தினக்குரல்' பத்திரிகையின் உதவி ஆசிரியர் ரவிவர்மன் ஆகியோருக்கு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை நினைவஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ரவிவர்மன் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதற்கு இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் ஊடகத்துறையில் பணியாற்றியவரும் மூத்த ஊடகவியலாளர்கள் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் அனந்த பாலகிட்டணர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊடகத்துறை சமூகத்தினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## தொலைபேசியில் மிரட்டி பணம் பறிக்கும் கும்பல் பற்றி பொலிஸார் எச்சரிக்கை

### விழிப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்



பொலிஸ் உயரதிகாரிகள் அல்லது அமைச்சு அதிகாரிகள் எனத் தம்மைத் தொலைபேசி வாயிலாக அறிமுகப்படுத்திக் கொண்டு மக்களிடம் பணம் பறிக்கும் கும்பலொன்று நாடெங்கும் தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும், அவர்களிடம் ஏமாந்துவிட வேண்டாமெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பொலிஸ் தலைமையகத்தில் நடந்த ஊடகவியலாளர் கூட்டத்தின்போதே அவர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில ஹோட்டல் உரிமையாளர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொள்ளும் கும்பல், ஹோட்டல் அசுத்தமாக இருப்பதாகவும் சட்டப்படி நடவடிக்கை எடுத்தால் அதை மூடி சீல் வைக்கவேண்டி வருமெனவும் எச்சரிக்கிறது. சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்க குறிப்பிட்ட ஒரு வங்கிக் கணக்கில் இவ்வளவு பணம் வைப்புச் செய்யப்பட வேண்டுமென நிர்ப்பந்திக்கிறது.

மேலும் சில வர்த்தகர்களிடம் தாங்கள் பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் என அறிமுகப் படுத்திக் கொண்டு மிரட்டிப் பணம் பறிக்கிறது. இங்கும் அதே வங்கி வைப்புமுறை கையாளப்படுகிறது.

பொதுமக்களில் யாருக்காவது இப்படிப்பட்ட மிரட்டல்கள் வந்தால் அவற்றை உதாசீனம் செய்யுமாறும் அதுபற்றிய தகவல்களை உடனடியாக 011 - 2854880 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் யூனியன் பிளேஸிலுள்ள சூதாட்ட விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்ட சம்பவம் பற்றி ஒரு நிருபர் எழுப்பிய கேள்விக்கு அஜித் ரோஹண அளித்த பதில்,

"இந்த சூதாட்ட விடுதி இதுவரை ஏழு தடவைகள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இனியும் அது தொடர்ந்து நடக்கும். இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வெளிவரும் வதந்திகளில் உண்மை இல்லை.

அப்படி யாரும் இதுவரை இடமாற்றம் செய்யப்படவில்லை" - இவ்வாறு அவர் தெரி வித்தார்.

## கொழும்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்குப் பிடியாணை

கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜயதிலகவை கைது செய்யுமாறு பிடி யாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் சாட்சியமளிக்க வருவதற்கு தவறியதை அடுத்தே கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பலப்பிட்டிய அவரை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பித்துள்ளார்.

தெஹிவளை கடற்படை சாவடியில் வைத்து 3 மாணவர்கள் கடத்தப்பட்டதாக கூறப்படுவது தொடர்பான ஆள்கொணர்வு விசாரணையின் போது சாட்சியமளிக்க வருமாறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது. அவர் சாட்சியமளிக்க வராததைக் அடுத்தே அவரை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பித்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரண்ணாகொட, ஏ.எஸ்.பி. ஜயதிலக்க ஆகியோரின் சாட்சியங்கள் நெறிப்படுத்தப்பட இருந்தன.

பொதுநலவாய தலைவர்கள் மாநாடு காரணமாக அட்மிரல் வசந்த கரண்ணாகொடவுக்கு அழைப்பாணை விடுக்கப்படவில்லையென வழக்குரைஞர் கெ.வி.தவராஜா சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து நீதிவான் இந்த வழக்கை அடுத்த வருடம் ஜனவரி 30 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

## கான்ஸ்டபிள், மனைவி கொலை:

# பிரதான சந்தேக நபர் துப்பாக்கிச்சூட்டில் சாவு

கம்புறுப்பிட்டிய, மாஸ்முல்ல பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார்.

பொலிஸாரின் தற்காப்புக்காக இத்துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை மீட்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த போது [illegible] மீட்கச் சென்ற தம் மீது குறித்த நபர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள முயன்றதாகவும் தமது பாதுகாப்புக்கருதி சந்தேக நபர் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பல குற்றவாளிகளை கைது செய்த நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மாத்தறை பிராந்திய துஷ்பிரயோக தடுப்புப் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிளும் அவரது மனைவியும் கடந்த சனிக்கிழமை இரவு வெட்டிக்கொலை செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களின் இரண்டு வயது ஆண் குழந்தை கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் கான்ஸ்டபிளான வெலிகம லியன ஆரச்சிகே சுனில் (வயது-33), அவரது மனைவியான அப்சரா சமன் மலீ ஆகியோரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

போதைப்பொருள் தொடர்பான குற்றவாளிகளைக் கைது செய்யும் நடவடிக்கைகள் பலவற்றில் மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு 6 விசேட பொலிஸ்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது.

## ராஜபக்ஷவுக்கு ரஷ்ய ஜனாதிபதி பாராட்டு

பொதுநலவாய அரச தலைமைப் பதவிபெற்ற இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ரஷ்ய ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பொதுநலவாயத்தின் தலைமைப் பதவியைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டினார்.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான இருதரப்பு நல்லுறவுகளை வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்த ரஷ்ய ஜனாதிபதிக்கு இலங்கையின் விருப்பமும் அதுவென ஜனாதிபதி மஹிந்த தெரிவித்தார்.

பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெற்றது. பொதுநலவாயத்திற்கு உபசரணையளித்த நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த அடுத்த இரண்டுஆண்டுகளுக்குத்தலைமைப் பதவியை வகிப் பார்.

அபிவிருத்தியை உள்ளடக்கிய சமத்துவத்துடனான வளர்ச்சி என்பது இவ்வாண்டின் பொதுநலவாய மாநாட்டின் தொனிப்பொருளாக இருந்தது. அடுத்த பொதுநலவாய மாநாடு 2015இல் மாலைதீவில் நடைபெறும்.

## ஆற்றில் மூழ்கி இருவர் மாயம்



மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஸ்கெலியா களனி - கிளையாறில் நேற்று நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி காணாமற் போயுள்ளனர்.

மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் நேற்று மதியம் நீராடச்சென்றுள்ளனர்.

இதன்போதே பிரவுன்ஸ்வீக் தோட்டத்தைச் சேர்ந்த இருவர் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளனர்.

அவர்களைத் தேடும் பணியில் மஸ்கெலிய பொலிஸாரும் பொதுமக்களும் ஈடுபட்டுள்ளனர்.

## தமிழருவியின் சொற்பொழிவு

யாழ். காரைநகர் விகாரைப்பிட்டி இந்து இளைஞர் சங்கத்தின் ஆண்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந்து இளைஞர் சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன், 'காரைநகர் வளர்த்திட்ட கவின் கலைகள்' எனும் தலைப்பில் உரையாற்றுவார்.

ஆண்டு விழாவை முன்னிட்டுபட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகள் என்பன நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இது தகுமா?

நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளுக்கு மதிப்பளித்துத்தான் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைத்துவம் இலங்கைக்கு உண்மையில் வழங்கப்பட்டதா?

2014ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கருத்தை அடுத்து இந்தக் கேள்வி எல்லோருக்கும் எழுவது இயல்பே.

"பொதுநலவாய நாடுகளின் தலைமைப்பதவி இலங்கைக்கு வழங்கப்பட்டதன் ஊடாக எமது அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளைச் சர்வதேசம் அங்கீகரித்துள்ளது" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் பேரரசிடம் அடிமைகளாக இருந்த நாடுகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டதுதான் பொதுநலவாய நாடுகளின் அமைப்பு. இரண்டாம் உலகப் போரின் பின்னர் எழுந்த உலக ஒழுங்கில் நாடுகளைத் தொடர்ந்தும் அடிமைப்படுத்தி வைத்திருக்க முடியாத நிலையில், சூரியன் மறையாத பேரரசு என்ற தனது மதிப்பை இழக்க விரும்பாத பிரிட்டிஷ் அரசு தனது அடிமை நாடுகளை வசியப்படுத்தி இந்த அமைப்பை உருவாக்கியது.

இத்தகைய பின்னணியைக் கொண்ட இந்த அமைப்பின் தலைவர்கள் மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறுகிறது. 2011ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா நாட்டின் பேர்த் நகரத்தில் நடைபெற்றது. இலங்கையிடம் தலைமைப் பதவியை வழங்குவது என்ற முடிவு அந்தக் கூட்டத்திலேயே இறுதி செய்யப்பட்டது.

தலைமைப்பதவி இலங்கையிடம் கொடுக்கப்படக்கூடாது என்று அந்த மாநாட்டின்போதும் மனித உரிமை அமைப்புக்கள் எதிர்ப்புக்களைக் கிளப்பின. எனினும் இலங்கை அரசு இன்று எதிர்கொள்வதைப்போன்ற மனித உரிமை மீறல் சிக்கல்களை அப்போது எதிர்கொண்டிருக்காததன் காரணத்தால் பதவி அதற்குக் கிடைத்தது.

எடுக்கப்பட்ட அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்த ஆண்டு அமைப்பின் தலைமைப் பதவி அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கையிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதில் இருந்து இன்று வரை அதற்குத் தலைமை தாங்கி வந்த பிரிட்டிஷ் மகாராணி இலங்கை மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. இதற்கு அவரது உடல்நிலை காரணமாகக் கூறப்பட்டாலும், இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையே முக்கிய காரணம் என்றும் கூறப்பட்டது.

போதாதற்கு பிரிட்டிஷ் பிரதமர் கெமரூன் வேறு தடாலடியாக இலங்கையை மிரட்டி விட்டுப் போயிருக்கிறார். மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்தாவிட்டால் அடுத்த மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மூலம் சர்வதேச விசாரணை ஒன்றை இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரித்திருக்கிறார். மேலும் கனடா மற்றும் மொரிஷியஸ் நாடுகள் மாநாட்டை புறக்கணித்துள்ளன. இந்தியத் தலைவர் உட்பட 30 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவில்லை.

அப்படியிருக்கும்போது நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையைச் சர்வதேசம் அங்கீகரித்தது என்று எப்படிச் சொல்ல முடியும்? அதுவும் தவிர, பொதுநலவாய நாடுகள் அமைப்பில் உள்ளவற்றில் பெரும்பான்மையான நாடுகள் மூன்றாம் உலகைச் சேர்ந்த பலமற்ற நாடுகள். உலக ஒழுங்கை நிர்ணயிக்கும் சக்தி மிக்க நாடுகள் அல்ல. இந்த நிலையில் சர்வதேச நாடுகள் அங்கீகரித்தன என்று கூறி மக்களை ஏமாற்றுவது ஒரு நாட்டுத் தலைவருக்குத் தகுமா?

# பொல்லைக் கொடுத்து வாங்கிய அடி



பொதுநலவாயமாநாடு, கொழும்பில்நடத்தப்பட்ட நிலையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புகழும்தான் சர்வதேச அளவில் உயர்த்திப் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். வழக்கமாக எந்தவொரு சர்வதேச மாநாடு நடத்தப்பட்டாலும், அந்த மாநாட்டை நடத்தும் நாட்டுக்கும் நாட்டின் தலைவருக்கும், உயர்ந்தளவிலான கௌரவம் அளிக்கப்படும். ஊடகங்களில் அதிகளவு முக்கியத்துவம் கிடைக்கும். ஆனால், கொழும்பில் நடந்த பொதுநலவாய மாநாடு அத் தகைய பெருமையை இலங்கைக்கோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கோ கொடுத்திருக்கவில்லை. மாறாக, கடுமையான விமர்சனங்களையும் அவப்பெயர்களையும் தான் தேடிக் கொடுத்திருக்கிறது.

பொல்லைக் கொடுத்து அடிவாங்கியது போல என்று கூறுவது போலத் தான், பொதுநலவாய மாநாட்டை நடத்தப் போய், இலங்கை அரசு பல்வேறு சிக்கல்களில் மாட்டிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2009இல் போர் முடிவுக்கு வந்த சில மாதங்களில் ரினிடாட் அன் டுபாகோ நாட்டில் நடந்த பொதுநலவாய மாநாட்டில், 23ஆவது பொதுநலவாய உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்த விருப்பம் தெரிவித்திருந்தது இலங்கை. அப்போது, அது இலங்கைக்குப் பெரும் புகழையும், உலகளாவிய அந்தஸ்தை யும் தேடித் தரும் என்றும், போரினா லும் தமிழர் பிரச்சினையாலும் சர்வ தேச அளவில் ஏற்பட்டுள்ள கறைகளைக் கழுவிவிடும் என்றும் கணக்குப் போட்டிருந்தது அரசு. அந்தக்கற்பனை, கொழும்பில் 23ஆவது பொதுநலவாய உச்சி மாநாடு ஆரம்பமாகும் வரை நீடித்தது. ஆனால், கடந்த வெள்ளிக்கிழமைக்கு சிலநாள்கள்முன்னதாகவே, இது ஒரு சிக்கலான நிலைக்குள் தம்மைத் தள்ளப் போகிறது என்ற உண்மை அரசுக்கு விளங்கி விட்டது. கனடா எழுப்பிய போர்க்குரலும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வருகைக்கு எழுந்த எதிர்ப்பும், இந்த மாநாடு சர்ச்சைக்குரியதாக மாறப் போகிறது என்ற சமிக்ஞையை வெளிப்படுத்திவிட்டது. இலங்கை அரசு போட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால், பிரிட்டன் செயற்படத் தொடங்கிய போது, கிட்டத்தட்ட ஒட்டுமொத்த பொதுநலவாய மாநாட்டின் பார்வையுமே அதன் மீது திரும்பி விட்டது.

### அழுத்தம் கொடுப்பதற்கான கருவியானது

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைப் போலவே, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும், மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளினதும், ஊடகங்களினதும், புலம்பெயர் தமிழர்களினதும் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தார். ஆனால், மாநாட்டைப் புறக்கணிக்கும் அழைப்புகளை உறுதியாக நிராகரித்து விட்ட டேவிட் கமரூன், தனது பயணத்தை கொமன்வெல்த் மாநாட்டுக்கான பயணமாகவோ அல்லது இலங்கையின் எழிலைத் தரிசிப்பதற்கான ஒரு சுற்றுலாப் பயணமாகவோ கருதாமல், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான ஒரு கருவியாக மாற்றிக் கொண்டார். அவரது அந்த முடிவும், தற்துணிவும், இன்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை, உலகெங்கும் உள்ள தமிழர்கள் மத்தியில் ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

### பேசு பொருளாகிய மனித உரிமை விவகாரம்

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கை வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் – இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள்- டேவிட் கமரூனின் பயணத்தைப் பாராட்டுகிறார்கள், கொண்டாடுகிறார்கள். அதற்குக் காரணம், டேவிட் கமரூன் – பொதுநலவாய மாநாட்டைப் பயன்படுத்திக் கொண்ட விதமும், அதற்காகப் பிரிட்டன் வகுத்த வியூகமும் தான். போர்க்குற்றங்கள் உள்ளிட்ட மனிதஉரிமை மீறல்கள் குறித்து நான்கு மாதங்களுக்குள் - அதாவது வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர், விசாரணை நடத்தத் தவறினால், சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்ற டேவிட் கமரூனின் எச்சரிக்கை, ஒட்டுமொத்த பொதுநலவாய மாநாட்டையுமே, புதிய தளத்துக்குள் கொண்டு போய் விட்டது. அதாவது பொதுநலவாய மாநாட்டின் பிரதான கருப்பொருள் எதுவாக இருந்தாலும், மாநாட்டு அரசுகளுக்குள் பேசப்பட்ட விடயங்கள் எதுவாக இருந்தாலும், இலங்கையின் மனிதஉரிமை மீறல் விவகாரமே உலகளாவிய பேச்சுக்குரிய விவகாரமாக மாறியது. இந்த மாநாட்டுக் காலகட்டத்தில், உலகளாவிய ஊடகங்கள் அனைத்துமே இதைப் பற்றித் தான் விவாதித்தன. எழுதிக் குவித்தன. பொதுநலவாய மாநாட்டின் அடிப்படை அம்சங்கள், இருதரப்பு பேச்சுக்கள், வர்த்தக இணக்கப்பாடுகள், தலைவர்களின் சந்திப்புகள், மாநாடு நடத்தப்படும் நாட்டின் எழில், மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்தெல்லாம், விவாதிப்பதில் உலகளாவிய ஊடகங்கள் கவனம் செலுத்தவில்லை. அதற்கு மாறாக, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனிதஉரிமை மீறல்கள் குறித்தும், இந்த மீறல்கள் பற்றிய விசாரணைகள் நடத்தப்படாதமை குறித்தும், போருக்குப் பின்னர் தமிழர்கள் எதிர்கொள்ளும், ஊடகங்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்தும், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் கருத்துகள் குறித்தும், கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பரின் புறக்கணிப்புக் குறித்தும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வராதது குறித்தும், மொறிசியஸ் பிரதமரான நவீன் ராம்கூலமின் புறக்கணிப்புக் குறித்துமே ஊடகங்கள் கவனம் செலுத்தின. போர் முடிவுக்கு வந்த பின்னர், கடந்த நான்கரை ஆண்டுகளில், ஊடகங்களில் இலங்கை இந்தளவுக்கு முக்கியத்துவப் படுத்தப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்டு, விமர்சிக்கப்பட்டது இதுவே முதல் முறை எனலாம்.

### அரசின் எதர்பார்ப்பை தகர்த்த மாநாடு

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு எதிராக இரண்டு தீர்மானங்கள் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட போது இலங்கையின் மனிதஉரிமைகள் நிலை குறித்து உலகளவில் செலுத்தப் பட்ட கவனத்தை விடவும், ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டதை விடவும், அதிக மாகவே பொதுநலவாய மாநாட்டின் போது விமர்சனங்களை இலங்கை எதிர்கொண்டது. 2009இல் முடிந்து போன போரின் அவலங்கள் மறக்கப்பட்ட விகாரமாகி விடுமோ என்று தமிழர் தரப்பிலுள்ள பலரும் அஞ்சிக் கொண்டிருந்த சூழலில்தான் இன்று அதை உலகளவில் பேசப்படும் விவகாரமாக மாற்றி விட்டுள்ளது பொதுநலவாய உச்சி மாநாடு. அதற்கும் அப்பால், இலங்கையில் நடந்த மனிதஉரிமை மீறல்களுக்கு எதிராக, சர்வதேச நடவடிக்கையைத் தூண்டுவதற்கான ஒரு கருவியாகவும் இந்த மாநாடு பயன்பட்டிருக்கிறது. சில சர்வதேச ஊடகங்களில், மஹிந்த ராஜபக்ஷ போர்க்குற்றவாளியா - கதாநாயகனா என்ற தலைப்பில் அலசல்கள் வெளியாகின.

### தலைகீழாக மாறிய நிலைமை

இத்தகையதொரு நிலையைத் தேடித் தருவதற்காக இலங்கை இந்த மாநாட்டை நடத்தியிருக்கவும் இல்லை. இதை நடத்த ஆசைப்பட்டிருக்கவுமில்லை. இப்படியொரு நெருக்கடியான நிலை ஏற்படும் என்று தெரிந்திருந்தால், நிச்சயமாக இலங்கை அரசு பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடத்த விரும்பியிருக்கவும் மாட்டாது. அரசு எதிர்பார்த்தது ஒன்று, நடந்தது ஒன்றாகி விட்டது.

அரசின் எதிர்பார்ப்புகள் அனைத்தையுமே பொதுநலவாய மாநாடு தவிடு பொடியாகியுள்ளது. இந்த மாநாடு, இலங்கைக்கு பொருளாதார முதலீடுகளைக் கொடுக்கலாம், வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கலாம். ஆனால் நற்பெயரையோ புகழையோ கொடுக்கத் தவறிவிட்டது. அது மட்டுமன்றி, அரசு கழுவிவிட நினைத்த போரின் கறைகளையும், காயங்களையும் இந்த மாநாட்டினால் கழுவி மறைத்துவிட முடியவில்லை. இவற்றுக்கெல்லாம் அப்பால், இந்த மாநாடு, இலங்கை மீதான சர்வதேச பிடியை மேலும் இறுக்கிக் கொள்வதற்கான களமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அரசு சற்றும் எதிர்பாராமல் நடந்து விட்டது.

பொதுநலவாய மாநாட்டில் இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதற்கு போர்க்குற்ற விவகாரங்களும், மனிதஉரிமை மீறல் விவகாரங்களும், வாய்ப்பளித்து விட்டன. அரசு, பெருமளவு பணத்தை வாரியிறைத்தும், உலகத் தலைவர்களை அழைத்து வந்தும், தனக்குத்தானே நெருப்பு வைத்துக் கொண்டது தான் மிச்சம்

(நன்றி: இணையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 88 ஆவது அவதார தினத்தையொட்டி (23.11.2013) இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது

# மானிட சேவையே மகேசன் சேவையென வாழ்ந்து காட்டிய பகவான் சத்தியசாயிபாபா

மருத்துவர்
இ.கணேசமூர்த்தி

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் அதிவேக வ்ளர்ச்சியடைந்தாலும், பெரும்பாலான மனிதரிடையே திருப்தியும், மகிழ்ச்சியும், அமைதியும் காணப்படுவதில்லை. விஞ்ஞான வளர்ச்சி மனிதனுக்குப் பல சௌகரியங்களைக் கொடுத்துள்ளது. இவை மகிழ்ச்சி, திருப்தியைக் கொடுப்பதற்குப் பதிலாக விரக்தி, மன அழுத்தம், வன்முறைகளையே அதிகரித்துள்ளது. சுருங்கக்கூறின் தற்காலத்தில் மனித நேயம் குன்றிவிட்டது. மனிதனிலுள்ள ஐம்பூதச் சேர்க்கை சமநிலை குலைந்துள்ளது. இதனால் இயற்கை அனர்த்தங்களும் மனிதனால் ஏற் படுத்தப்படும் போர் அழிவுகளும் மேலோங்கியுள்ளன. இந்தப் பூமியையும் உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டுமென்று மகா மனிதர்கள் தவம், பிரார்த்தனை செய்வதன் மூலம் பிரபஞ்ச மகாசக்தி அடிக்கடி மனித ரூபத்தில் அவதரித்து, தர்மத்தை நிலைநாட்டிக் கொள்கின்றது.

தர்மத்தை நிலைநாட்டவும், வேதத்தைப் போதிக்கவும் சீரழிந்து போன தர்மப் பாதையை சீராக்கவும் தான் அவ தாரம் எடுத்ததாக பகவான் சத்தியசாயி பாபா பல தடவைகள் கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனுள்ளும் அதர்மம் புகுந்துவிட்டதால் மகாசக்தி அடுத் தடுத்து மூன்று தடவைகள் அவதரிக்க வேண்டியுள்ளதென்றும் கூறியுள் ளார். இதனால்தான் இதை சாயி அவதாரம் என்று கூறப்படுகிறது. முதலாவது அவதாரம் மகாராஷ்டிர மாநிலத்தில் (1835-1918) சீரடி சாயி பாபாவாக நிகழ்ந்தது. இரண்டாவது ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தியில் சத்தியசாயி பாபாவாக (1926-2011) நிகழ்ந்தது. மூன்றாவது பிரேமசாயி பாபாவாக கன்னட மாநிலத்தில் சில வருடங்களில் நிகழும் என்று பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா கூறியுள்ளார்.

பரப்பிரமத்தை மானிட உருவத்தில் தரிசிக்கவும் , உரையாடவும், போதனைகள் கேட்கவும், எவ்வாறு வாழ வேண்டுமென்று பகவான் பாபா வாழ்ந்து காட்டியதும் எமக்குக் கிடைத்த அரும்பெரும் பாக்கியம். இவையெல்லாம் உலகிலுள்ள முழு நாடுகளுக்கும் சென்றடைந்துள்ளன. விஞ்ஞானத்தால் இதுவரை பிரபஞ்சத்திலிருக்கும் விழிப்புணர்வையும் (universe consciousness) மனித மூளைக்கும் மனத்துக்குமுள்ள தொடர்பையும் (Interphase) கிரகிக்க முடியவில்லை. இந்த உயர் விழிப்புணர்வு நிலையை ஆன்மிகம் மூலம் கிரகிக்க முடியும்.

பகவான் சத்தியசாயி பாபாவின் மனித உடலெடுப்பே அசாதாரணமானது. அவரது தாயார், தான் கிணற்றடியில் நின்ற பொழுது, ஆகாயத்திலிருந்து ஒரு நீல நிற உருண்டை வயிற்றினுள் புகுந்ததும் தான் மயங்கி விழுந்ததாகவும், பின்பு கர்ப்பத்துக்குரிய அறிகுறிகள் தென்பட்டன என்றும் சொல்லியுள்ளார். சுவாமியும் தான் தோன்றியது பிரசவம் அல்ல பிரவேசம் என்று விளக்கியுள்ளார். அவருக்குப் பெற்றோர்கள் வைத்த பெயர் சத்திய நாராயணராஜீவாகும். சிறு வயதிலேயே உயர் பண்புகளைப் பின்பற்றியதோடு அவற்றைத் தனது தோழர்களுக்கும் சொல்லிக் கொடுத்தார். அவர் பல பொருள்களை சிருஷ்டித்துக் கொடுத்து அவர்களை கடவுள் பக்திக்கு உள்ளாக்கினார். தனது 14 ஆவது வயதில் படிப்பையும் வீட்டையும் துறந்து (20.10.1940) வெளியேறினார். இதற்கு சில நாள்களுக்கு முன்பே தாம் சாயி பாபா என்று பிரகடனம் செய்தார்.



> தர்மத்தை நிலைநாட்டவும், வேதத்தைப் போதிக்கவும் சீரழிந்து போன தர்மப் பாதையை சீராக்கவும் தான் அவதாரம் எடுத்ததாக பகவான் சத்தியசாயி பாபா பல தடவைகள் கூறியுள்ளார்.

தாயின் வேண்டுதலுக்கிணங்க புட்டபர்த்தியிலேயே ஆச்சிரமம் அமைத்துத் தங்கினார். எத்தனையோ அழைப்புகள் வெளிநாடுகளிலிருந்து வந்தாலும் உகண்டா (ஆரிக்கா நாடு) என்ற நாட்டைத் தவிர வேறு ஒரு நாட்டுக்கும் செல்லவில்லை. எதுவாகினும் சூட்சும உடம்பில் உலகில் பல இடங்களில் பிரசன்னமாயுள்ளார். இதனால் வெளிநாட்டவர்களும் அதிக எண்ணிக்கையில் புட்டபர்த்திக்கு வரத் தொடங்கினார்கள்.

இவரைப் பலர் தெய்வம் என்று ஏற்றுக்கொண்டு பகவான், சுவாமி என்றழைக்கிறார்கள். தெய்வீகத் தன்மையை ஏற்றுக்கொள்ளாத பலர் இவரை ஒரு சிறந்த சீர்திருத்தவாதியென்று ஏற்றுக் கொள்கிறார்கள். சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளுக்கு இடம் கொடுப்பதில்லை. கல்வி, குடிதண்ணீர், வைத்தியம் இலவசமாகச் சகலருக்கும் கொடுக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தி செயற்பட்டுள்ளார். தனது பக்தர்களை கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும்படி வலியுறுத்தியுள்ளார். கிராம சேவையே இராம சேவையென்று பிரகடனம் செய்துள்ளார். அரசாங்கத்தாலும் செய்யமுடியாத மிகப் பெரிய திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். அதிநவீன வைத்தியசாலைகளை நிறுவி மக்கள் நோய் தீர்க்க உதவியுள்ளார். இதற்காகவே பலர் இவரைத் தெய்வீகமானவர் என்று ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

சத்தியசாயி மனித மேம்பாடுகள் இணைந்த கல்வி முறையை அறிமுகம் செய்துள்ளார். இதை முன்பள்ளி முதல் பட்டப் பின்படிப்புவரை நடைமுறைப்படுத்தி ஏற்படும் நன்மைகளை எல்லோருக்கும் காட்டியுள்ளார். பகவான் மானிட சேவையே மகேசன் சேவையென்று , சேவைக்கு முன்னுரிமை கொடுத்துள்ளார். அதற்காக உலகளாவிய ரீதியில் சத்தியசாயி சேவா நிறுவனத்தை ஸ்தாபித்துள்ளார். இங்கெல்லாம் ஆன்மிக வளர்ச்சியுடன் ஆன்மிக அடிப்படையில் கல்விச் சேவை முதலியன செயற்படுகின்றன.


அற்புதங்கள் பல புரிந்துள்ளார். அற்புதங்கள் தனது இயல்பே என்றும், பக்தர்களில் நம்பிக்கை ஊட்டுவதற்காகவே அற்புதங்கள் நிகழ்கின்றன என்றும் சொல்லியுள்ளார். இவரின் அற்புதங்கள் சொல்லில் அடங்காதவை. அவரின் மகா சமாதிக்குப் பின்பும், தெய்வீகத்தைப் பல இடங்களில் பல மாதிரி வெளிப்படுத்தியுள்ளார். படங்களிலிருந்து விபூதி சொரிவதும், அமிர்தம் மாறுவதும் இவற்றுள் அடங்கும்.

பகவான் பாபாவின் அவதார தினம் நவம்பர் மாதம் 23 ஆம் திகதியாகும். இது இந்த நாளில் சத்தியசாயி நிலையங் களிலும் கொண்டாடப்படும். ஒரு முறை "ஆனந்தமான பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என்று பக்தர்கள் கோஷமிட்டார்கள். அப்போது அவர் "ஆனந்தமே என் சுபாவம், எனக்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை எந்நாளில் என்னை உங்கள் இதயத்தில் இருத்துகிறீர்களோ, அந்த நாளே தான் உங்களில் பிறந்த தினமாகும் என்று உயரிய விளக்கம் கொடுத்தார்.

# நம்மை நாமாக வாழ நல்வழி காட்டிய நாவலர்

ச.லலீசன்,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

(24.11.2013 நாளை ஞாயிற்றுக்கிழமை நாவலர் குருபூசை நாள். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் நாவலர் விழா இம்முறை நாவலர் வாழ்ந்த வீடு அமைந்திருந்த இடமாகிய நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறுகின்றது.)



நாவலர் என்ற பெயருடன் எம்மண்ணில் மூவர் அறியப்பட்டனர். ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர் என்போரே அவர்கள். இருப்பினும் நாவலர் என்றதும் எல்லோர் நினைவிலும் வருவது நல்லை நகர் ஆறுமுக நாவலரே. அந்நிய சக்திகளின் ஆக்கிரமிப்புக்கு அடிபணியாது, தேசிய உணர்வுடன் மண்ணையும் மக்களையும், அவர் சார்ந்த சைவ வாழ்வியலையும் பேணிய பெருந்தகையாக நாவலரை அடையாளப்படுத்தலாம்.

1822 டிசம்பா 18 ஆம் திகதி நல்லூர் கந்தப்பிள்ளை-சிவகாமி தம்பதிக்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தவரே ஆறுமுகம் என்ற பிள்ளைத் திருநாமம் பூண்ட நாவலர். 1879 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி பூதவுடல் நீத்துப் புகழுடல் எய்தும் வரை மண்ணையும் மக்களையும் நேசித்த மாமனிதராக வாழ்ந்தார்.

விதேசிய மதமும் ஆங்கில மொழியும் எம்மண்ணை ஆக்கிரமித்து சுதேசியத்தையும் தமிழ்மொழியையும் பாதித்த காலத்திலேயே நாவலர் தோற்றம் பெற்றார். நான் இல்வாழ்க்கையிற் புகவில்லை. இவைகளெல்லாவற்றுக்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளாத்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம் என்று இருவேறு இடங்களில் நாவலர் குறிப்பிட்டமையில் இருந்து அவரது நோக்கம் சைவத்தை வளர்ப்பதென்றும் அதற்கு உதவக்கூடிய முறையில் தமிழ்க் கல்வியையும் அவர் வளர்க்க முற்பட்டார் என்றும் அறிய முடிகின்றது. இவ்வாறு இலட்சிய[illegible] பயணித்தவர் தன்னுடன் [illegible]டைய வேறு பணிகளையும் முன்னெடுத்தார். சமூகத்தை ஆற்றுப்படுத்தக்கூடிய சிறந்த மார்க்கம் பிரசங்கமே [illegible] வில் முதன் முதலாகச் சைவப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். 1879 ஆம் ஆண்டு சுந்தரர் குருபூசை வரை அதாவது இறக்கும் காலம் வரை பிரசங்கப் பணியைத் தொடர்ந்தார்.

பாடநூல்கள் மற்றும் பதிப்பு நூல்கள், உரை நூல்கள் எனப் பல்வகைப்பட்ட நூல்களை வெளியிட்டார். இதற்காக அச்சு இயந்திரசாலைகளை யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் நிறுவினார். நாவலர் பதிப்புச் சுத்தமானது என்ற நம்பிக்கை ஏற்படும் வகையில் அவரது பதிப்புப் பணிகள் அமைந்திருந்தன. சைவச்சூழலில் பிள்ளைகள் கல்வி பெற வேண்டும் என்பதற்காக சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார். ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்க வேண்டும் எனக் கருதி 1872 இல் வண்ணையில் ஆங்கில மொழி மூலப் பாடசாலை ஒன்றையும் நிறுவினார். கண்டனப் பிரசுர முறைமையை வளர்த்தெடுத்தவரும் நாவலர்தான். தனக்குப் பிடிக்காத - சமூகத்துக்கு ஒவ்வாதது எனக் கருதுகின்றவற்றையெல்லாம் துணிந்து எதிர்த்தார். இதற்குக் கண்டனப் பிரசுரங்களை வெளியிடும் உத்தியைக் கையாண்டார். தமிழ் உரைநடையின் திறம் வளரப் பணி செய்தவராகவும் நாவலரைக் காணலாம். தனது உரை நடையில் எளிமையான சிறிய வசனங்களைக் கையாண்டார். புதிய தமிழுக்கு அவசியமான மாற்றங்களையும் புகுத்தினார். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்தார். வசன நடை கைவந்த வல்லாளர், தமிழ் உரை நடையின் தந்தை என்றெல்லாம் இன்றைய உலகு புகழும் அளவுக்கு அவரது பணி இருந்தது. தமிழ் இலக்கண நூல்களை ஆக்கியும் சில இலக்கண நூல்களுக்கு உரையெழுதியும் , சில இலக்கண நூல்களை முதன்முதல் பதிப்பித்தும் தமிழ்த் தொண் டாற்றினார்.

அவரது ஆசிரியப் பணியும் விதந்து போற்றத்தக்கது. தான் கற்ற வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்) 1841 இல் இருந்து சில காலங்களுக்கு மேல் வகுப்புக்களுக்கு தமிழாசிரியராகவும் கீழ் வகுப்புக்களுக்கு ஆங்கில ஆசிரியராகவும் பணி புரிந்தார். தவிர, மரபு முறையில் மாணவர்களுக்கு இலவசமாகத் தமிழ் போதித்தார். நாவலருடைய சமூகப் பணிகளும் சமூகம் போற்றத்தக்கவை. 1876 - 1877 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் யாழ். மண்ணில் கடும் வறட்சி நிலவிய போது அவர் ஆற்றிய கஞ்சித்தொட்டித் தருமத்தின் ஊடாகப் பலர் பசியாறினர். சேர். பொன் இராமநாதன் அரசியலில் ஈடுபடத் தனது முழு ஆதரவையும் வழங்கியிருந்தமையானது நாவலரது அரசியல் ஈடுபாட்டைச் சுட்டி நிற்கின்றது.

நாவலர் ஐந்து முறை தமிழகத்துக்குப் பயணம் செய்திருக்கிறார். முதலாவது பயணம் பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்து அரங்கேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும். பைபிளைச் சுத்தமாக மொழிபெயர்த்ததன் ஊடாக உண்மைச்சமயிஒருவனுக்குச் சமயக் காழ்ப்புக் கிடையாது என்பதையும் நிரூபித்தார். இரண்டாவது பயணம் அச்சியந்திரம் வாங்கவென அமைந்தது. இதன்போதே திருவாவடுதுறை ஆதீனத்தார் நாவலர் என்ற பட்டத்தை வழங்கினர். மொழிப்பற்றும் சமயப்பற்றும் எம் அனைவருள்ளும் மேலெழுவது, எம் மண்ணின் எழுச்சிக்கும் மக்களின் வாழ்வுக்கும் வளங்கொழிப்பதாக அமையும். இன்று 134 ஆவது ஆண்டாக நாவலரை நினைவில் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக விழாவை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.23

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் திருவாசக விழாவை முன்னிட்டு பிரதேச செயலக மட்டத்தில் அறநெறிப் பாடசாலைகள் இடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கட்டுரைப் போட்டிகள் கீழ்ப் பிரிவுக்கு "மாணிக்க வாசக சுவாமிகள்" என்ற தலைப்பிலும், மத்திய பிரிவுக்கு "திருவாசகம் காட்டும் பக்திநெறி" என்ற தலைப்பிலும், மேற் பிரிவுக்கு "திருவெம்பாவை காட்டும் சிவபக்தி" என்ற தலைப்பிலும் நடைபெறும்.

பேச்சுப் போட்டிகள் பாலர் பிரிவுக்கு "மாணிக்கவாசக சுவாமிகள்" என்ற தலைப்பிலும், கீழ்ப்பிரிவுக்கு "மாணிக்கவாசகரும் திருவாசகமும்" என்ற தலைப்பிலும், மத்திய பிரிவுக்கு "மாணிக்க வாசகரும் வாழ்வும்" என்ற தலைப்பிலும், மேற்பிரிவுக்கு "மாணிக்க வாசகர் காட்டிய பக்திநெறி" என்ற தலைப்பிலும் நடை பெறும்.

இதனைவிட திருவாசகப் போட்டியும், பண்ணிசைப் போட்டியும் நடைபெறும். போட்டிகள் அடுத்தமாதம் முதலாம் திகதி நடத்தப்படவுள்ளன. (வ-14)



கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தின் 24ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது இந்தப் பாடசாலையில் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கடமையாற்றி தற்போது கிளி/சேரன்பற்று அ.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இ.செபரத்தினராசாவுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் கௌரவிக்கப்பட்டது. (வ-422)

## நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சை ஞாயிறு

அச்சுவேலி,நவ.23

இலங்கை கல்வி நிர்வாக சேவை (எஸ்.எல்.ஈ.ஏ.எஸ்) தரம்III பதவிக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை (மட்டுப்படுத்தப் பட்டது) நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆளணிக்கு திறந்த நிலை, மட்டுப்படுத்தப்பட்ட நிலை, சேவை மூப்பு திறமை என்ற அடிப்படையில் ஆள் சேர்ப்புச் செய்யப்படுகின்றது. குறிப்பிட்ட கால சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர் - அதிபர்கள் மற்றும் கற்பித்தல் சேவை யில் உள்ளவர்கள் மட்டுப்படுத்தப்பட்டநிலை போட்டிப் பரீட்சைக்குத் தோற்றலாம். மொத்த ஆளணியில் 30 வீதமானோர் மட்டுப்படுத்தப்பட்ட நிலை போட்டிப் பரீட்சை மூலம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டி நிலை பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைத் திணைக்களம் அனுமதி அட்டைகளை அனுப்பி வைத்துள்ளது. (வ-11)

# வழிகாட்டல் கருத்தரங்கு



ஏழாலை வடக்கு-கிழக்கு சனசமூக நிலையத்தால் இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஏழாலை பிரதேசத்தைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதில் வரலாற்றுப் பாடக் கருத்தரங்கை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினரும், ஆசிரியருமான பா.கஜதீபன் நடத்தினார். இந்தக் கருத்தரங்குக்கான அனுசரணையை வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவருமான சி.ஹரகரன் வழங்கி இருந்தார். (வ-5)

## முன்பள்ளிக்கு மண்ணெய் அடுப்பு

தென்மராட்சி, நவ.23

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலையத்தினர் நடத்தும் பாரதி முன்பள்ளி சிறார்களுக்கு பால் காய்ச்சுவதற்கென மண்ணெண்ணெய் அடுப்பு அன்பளிப் பாக வழங்கப்பட்டுள்ளது.

நிலையத் தலைவர் க.கேதீஸ்வரன் மண்ணெண்ணெய் அடுப்பை முன்பள்ளி அபிவிருத்திச் சபைத் தலைவர் ந. சுந்தரலிங்கத்திடம் கையளித்தார். முன்பள்ளி சிறார்களுக்கு இது வரை காலமும் விறகு அடுப்பிலேயே பால் காய்ச்சி வழங்கப்பட்டுவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பஸ் தரிப்பிடம் அமைக்க மக்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, நவ.23

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பஸ் தரிப்பிடங்களை அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் , முள்ளிவளை, மாங்குளம் ஆகிய பிரதான இடங்களில் பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்படாமையால் பயணிகள் பல்வேறு சிரமங் களை எதிர்கொண்டு வருகின் றனர். வெயில் காலங்களில் ஏற்கெனவே சிரமங்களை எதிர் கொண்ட இவர்கள் மழை பெய்யும் வேளைகளில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் மழையின்போது அருகில் உள்ள கடைகளுக்குள் தஞ்சம் புகுவதும், பஸ்ஸைக் கண்டதும் மழையில் நனைந்தவாறு ஓடோடிச் செல்வதையும் காண முடிகின்றது.

எனவே முக்கிய இடங்களில் பஸ் தரிப்பிடங்களை அமைக்குமாறு பயணிகள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)



# இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?



**மேடம்**: எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.



**இடபம்**: திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும்.



**மிதுனம்**: எளிதாக முடிய வேண்டிய விடயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். சிலர் உங்களைக் குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**கடகம்** : சிக்கனமாக இருங்கள். அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். உத்தியோகத்தில் வேலைச் சுமையால் சோர்வடைவீர்கள். எதிலும் நிதானித்து செயற்படுங்கள்.



**சிங்கம்**: சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம் அலைச்சல் நீங்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.



**கன்னி**: வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். ஆடம்பரச் செலவுகளை தவிர்க்கப்பாருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**நாளை**

கார்த்திகை-08 ஞாயிற்றுக்கிழமை 24.11.2013

திதி: ஷஷ்டி கா.07.32 வரை

நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ. 03.59 வரை

சுபநேரம்: 09.11 - 10.41 வரை

இராகுகாலம்: 04.41 - 06.11 வரை



**துலாம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.



**விருச்சிகம்**: உங்களை அறியாமலேயே ஒரு வித படபடப்பு வந்து செல்லும். சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும்.



**தனுசு**: பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். அதிகம் உழைக்க வேண்டி வரும்.



**மகரம்**: எண்ணம்போல் செயற்பட வேண்டும் என எண்ணுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**கும்பம்**: பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.



**மீனம்**: எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 1 | | 9 | 4 | 3 | |
| | | | | 7 | | 2 | 6 | |
| | 9 | | 3 | 2 | | | | |
| 1 | 3 | 6 | 5 | | | | | |
| 5 | 8 | | | 4 | | | 7 | 6 |
| | | | | | 8 | 9 | 5 | 1 |
| | | | | 6 | 3 | | 4 | |
| | 4 | 5 | | 1 | | | | |
| | 1 | 3 | 4 | | 5 | 6 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 4 | 9 | 3 | 2 | 8 | 5 |
| 8 | 3 | 2 | 7 | 5 | 1 | 4 | 9 | 6 |
| 5 | 9 | 4 | 2 | 6 | 8 | 1 | 3 | 7 |
| 2 | 6 | 3 | 1 | 4 | 9 | 7 | 5 | 8 |
| 9 | 7 | 1 | 6 | 8 | 5 | 3 | 2 | 4 |
| 4 | 8 | 5 | 3 | 2 | 7 | 6 | 1 | 9 |
| 1 | 4 | 8 | 5 | 7 | 2 | 9 | 6 | 3 |
| 7 | 2 | 9 | 8 | 3 | 6 | 5 | 4 | 1 |
| 3 | 5 | 6 | 9 | 1 | 4 | 8 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20.08.1963 உதிர்வு 23.11.2005



திருமதி
செலஸ்ரீனா
கதிரமலை

அழகான பூவுலகைவிட்டுப் பரலோகம் சென்ற தாயே
அம்மா அம்மா என்று அழுகின்றோம் ஆண்டுகள் எட்டாய்
உமது திருவதன நினைவினிலே வாழுகின்றோம் நாமிங்கு
வாழ்ந்து காட்டி வாழவைத்து வானுலகம் சென்ற
எமது குலவிளக்கை ஆண்டவர் திருக்கரத்தில்
வாடா மலராய் மணம்வீசச் செய்ய
திருக்குடும்ப மாதா வழியாக இறைஞ்சுகின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
உறவுகள்.

மல்வம், உடுவில். (40387).(7.6.3)



## வெள்ளிவிழாவில் 23ஆம் ஆண்டு நினைவுக்குரல்

அமரர் சண்முகம்
ஞானப்பிரகாசம்

தோற்றம் 06.10.1927 மறைவு 23.11.1990



சமூக அபிவிருத்தி மன்றத்தின்
ஸ்தாபகரும் முன்னாள் இணைப்
பதிகாரியுமாகிய அமரர் சண்முகம்
ஞானப்பிரகாசம் அவர்களை சமூக
அபிவிருத்தி மன்றத்தின் வெள்ளி விழா
நாளாகிய இன்று நினைவு
கூருகின்றோம். இன்று (23.11.2013)
சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற
இருக்கும் நினைவு தின வைபவத்தில்
பங்கு பற்றுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றம்



## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கூட்டுறவாளர் அமரர்
சண்முகம்
ஞானப்பிரகாசம்
(ஸ்தாபகர், முன்னாள்
தலைவர்,
யாழ். மா.சி.க.கூ.சங்க.சமாசம்)



தோற்றம்
06.10.1927

மறைவு
23.11.1990

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 23 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
கோப்பாய் பிராந்தியம்
(சி/14960)(3.6.4)



## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கூட்டுறவாளர் அமரர்
சண்முகம்
ஞானப்பிரகாசம்
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர்,
யாழ். மா.சி.க.கூ.சங்க.சமாசம்)



தோற்றம் 06 ★ 10 ★ 1927
மறைவு 23 ★ 11 ★ 1990

சமாசத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 23 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

இல.637,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/14959)(3.6.4)
யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.


## 'தாயக ஒலி' வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.23

'இணுவில் ஒலி' சஞ்சிகை நடத்திய மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியின் விருது வழங்கும் விழாவும் 'தாயக ஒலி' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். லண்டனில் வதியும் வவுனியூர் இரா.உதயணன் முதன்மை விருந்தினராகவும் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.அரசரத்தினம், பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் உடுவை எஸ்.தில்லை நடராஜா, கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் ஐ.இராசரத்தினம், கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி சசிதேவி சிவனேசன், இலக்கியப் புரவலர் வைத்திய கலாநிதி தாஸிம் அகமது ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், லண்டனைச் சோந்த டாக்டர் சேர்.என்.விவேகானந்தா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவனத்தின் அனுசரணையுடன் இணுவில் திருவூர் ஒன்றியம் நடத்தும் இந்த நிகழ்வில் உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் வரவேற்புரையையும் நாவலர் நற்பணிமன்றத்தலைவர் ந.கருணை ஆனந்தன், அண்ணா தொழிலக அதிபர் எஸ்.பி. நடராசா ஆகியோர் வாழ்த்துரையையும் வழங்குவர்.

திருமதி வி.சண்முகரத்தினம் (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), என்.கணேசலிங்கம் (நீர் கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி), ஜனாபா நஜீபா ஹம்ஸா (களுத்துறை முஸ்லிம் பாலிகா ம.வி.) ஆகிய அதிபர்களும் பேராசிரியர் சபா ஜெயராஜா, சைவப் புலவர் சு.செல்லத்துரை, திருமதி வசந்தி தயாபரன், எல்.ஓங்காரமூர்த்தி, மு.மனோகரன், க.சிவபுத்திரன் ஆகிய நடுவர்களும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ)

## யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

'யாழ். யோக அரங்கத்தினர்' நடத்தும் யோகா பயிற்சியின் அறிமுக நிகழ்வு நல்லூர் தேரடி அருகில் உள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யோக அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யோகா பயிற்சிநெறி இரு பிரிவுகளாக இடம் பெறும். பயிற்சிநெறி-1 காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையும், பயிற்சிநெறி-2 மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையும் தொடர்ந்து 20 நாள்கள் நடைபெறும். இந்தப் பயிற்சி நெறியில் உடல், உள ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியமான ஆசனப் பயிற்சிகள், சூரியநமஸ்காரம், பிராணாயாமம், சாந்த வழிமுறை மற்றும் தியானப் பயிற்சிகள் என்பன வழங்கப்படும். (ந)

## குத்துவிளக்கு திருடியோர் வகையாக மாட்டினர்

வலி. வடக்கு, நவ.23

பட்டப் பகலில் கோயில் கதவை உடைத்து ஆலயத்தில் இருந்த பெறுமதியான குத்து விளக்குகளைத் திருடிச்செல்ல முயன்ற இளைஞர்கள் இருவர் ஆலய பூசகரிடம் வகையாக மாட்டிக் கொண்ட சம்பவம் வியாழக்கிழமை ஏழாலை மத்தி சாடியடி பொயதம்பிரான் ஆலயத்தில் இடம் பெற்றது.

பகல் பூசைக்கு ஆலய பூசகர் வந்தவேளையில் ஆலய சுற்றாடலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் இளைஞர் ஒருவர் நடமாடுவதைக் கண்டுள்ளார். சந்தேகம் கொண்ட பூசகர் ஆலயத்தின் கதவை அவதானித்த வேளையில் அது திறந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

இதனால் பூசகர் அயலவர்களின் உதவியுடன் இருவரையும் பிடித்துள்ளார். அதே வேளை சந்தேக நபரது கைத்தொலைபேசிக்கு அழைப்பு வந்துள்ளது. அப்போது பிடிபட்டவர்களில் ஒருவர் "விடயம் பிழைத்து விட்டது. வாகனம் கொண்டு வர வேண்டாம்" என தெரிவித்ததைத் தொடர்ந்து சந்தேக நபர்களுக்கு பொது மக்கள் 'மரியாதை' வழங்கினர்.

சந்தேக நபர்கள் இருவரும் கிராம அலுவலர் மூலம் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். (ந-86)

## வர்த்தக நிலையம் உடைத்து திருட்டு

வலி. வடக்கு, நவ. 23

மாவிட்டபுரம் காங்கேசன்துறை வீதியில் உள்ள சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான உதிரிப் பாகங்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. வர்த்தக நிலையத்தின் கூரையைப் பிரித்து உள் இருந்த லெவல் சீற்களை உடைத்துக் கொண்டு இறங்கிய திருடர்களே சைக்கிள் உதிரிப் பாகங்களை திருடிக்கொண்டு சென்றுள்ளார்கள்.

குறிப்பிட்ட திருட்டுச் சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (ந-86)

## வெள்ளி விழா

யாழ்ப்பாணம், நவ.23

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் வெள்ளி விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி ருக்குமணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் விருந்தினர்கள் உரை, மரக்கன்றுகள் வழங்கல், பரிசில்கள் வழங்கல், பணியாளர் கௌரவிப்பு, சிறுவர் முதியோர் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறும். (ந-11)

## பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.23

யாழ்ப்பாணம் ஈச்சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் கல்லூரித் தலைவர் லயன் ஜெ.ரஜீவன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் பி.கோபாலகிருஷ்ண ஐயர் கலந்து கொண்டு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பார். (ந)


## பிறந்தநாள் நினைவஞ்சலி



பிறந்தது
23.11.1969

இறைவனைச்
சேர்ந்தது
02.05.2006

அமரர்
பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ்
[சுரேஷ்]
(முன்னாள் சந்தைப்படுத்தல் முகாமையாளர்–உதயன் வெளியீட்டு (தனி) நிறுவனம்)

என்னை அறிந்தவர்களே என்மீது இரக்கமாயிருங்கள் உங்கள்
ஜெபம்: இடைவிடாத வேண்டுதலே எனக்கு ஆறுதலும் ஆனந்தமுமாகும்.

ஆண்டவரே எங்கள் மீட்பரே! மானிடர் அனைவரும் மீட்படைந்து சாவிலிருந்து வாழ்வுக்குச் சென்றடைய நீர் உம்மையே சாவுக்குக் கையளித்தீர் – நாம் இழந்த எமது சுரேஷுக்காகக் கண்ணீர் சொரிந்து உம்மைத் தாழ்மையுடன் மன்றாடும் எம் அனைவர் மீதும் உமது கருணைக் கண்களைத் திருப்பிய ருளும் ஆண்டவரே! உமது விசுவாசிகளுக்கும் வாழ்வின் கதவுகளை உமது உயிர்ப்பினால் திறந்து வைத்தீரே! இரக்கம் மிகுந்த தந்தையே எமது சுரேஷின் பாவங்களை மன்னித்து அவருக்கு ஒளியும் பேரின்பமும், அமைதியும் நிறைந்த ஓர் இடத்தை உமது விண்ணக வீட்டில் அளித்தருளும்.

–ஆமென்.

எமது சுரேஷின் ஆன்ம இளைப்பாற்றுக்காக மட்டக்குளிய, பாம் வீதியிலமைந்துள்ள "கார்மேல் மாதா" சிற்றாலயத்தில் காலை 6.45 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
அத்துடன் 27.11.2013 அன்று கொட்டாஞ்சேனை புனித லூசியார் பேராலயத்தில் மாலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

எமது சுரேஷை என்றும் மறவாத மனைவி - சுவேன் (Suven)
பிள்ளைகள் - அல்றின், சேஷா
(Alrin), (Saesha)

(சி/3930)(5.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டுக்காணியும் தோட்டக்காணியும் விற்பனைக்கு**

சிறுப்பிட்டி தெற்கில் பருத்தித்துறை வீதியில் இருந்து மேற்குப்பக்கமாக செல்லும் வீதியில் செல்லப்பிள்ளையார் கோயிலுக்கு மேற்பக்கமாக 350 மீற்றர் தூரமளவில் றோட்டுக்குக் கிழக்குப் பக்கமாக 6 பரப்புக் காணியுடன் கூடிய கல் வீடு நன்னீர் கிணற்றுவசதியுடனும் பயிர் வகைகளுடனும் மற்றும் சிறுப்பிட்டியில் இராசபாதைக்கு அருகில் நன்னீர் கிணற்றுவசதியுடன் 12 பரப்பு செம்பாட்டுத் தோட்டமும் உடன் விற்பனைக்குண்டு.

(40350)(4.6.3)

தொடர்பு: 0061312200048

**வீடு காணி விற்பனைக்கு**

யாழ். கச்சேரிப் பகுதியில்
சோமசுந்தரம் வீதியில் 21 ஆம் இலக்கமும் நி.பர.2, குழி 11.36 விஸ்தீரணமும் கொண்ட ஆதனமும் அதில் அமைந் துள்ள மாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 827 5397 (40391) (4.6.3)

**SMA Accounting**

* Book Keeping (Part Time)
* Accounting Report
(Trade A/C, Profit & Loss A/C, Balance sheet)
* Taxation
* Accounting Software

என்பன குறைந்த கட்டணத்தில் தங்கள் இடத்திற்கே வந்து செய்து தரப்படும். (40360)(7.6.3)

தொடர்பு: S. மதன் 075 760 2425

**கட்டடம் வாடகைக்கு**

யாழ்ப்பாணத்தில் கைதடியில் 3 மாடிக் கட்டடம் (கைதடி BOC இக்குப் பக்கத்தில் வாடகைக் குண்டு) இது 120 அடி நீளமும் 27 அடி அகலமும் (3000 சதுர அடி) கொண்டதாக அமைந்துள்ளது. வங்கிகள் மற்றும் கம்பனிகள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 071 827 5397 (40392)(4.6.3)

**பாராட்டுகின்றோம்**

சாமஸ்ரீ தேசமானிய விருது விழா




இன்று (23.11.2013) சனிக்கிழமை
திருகோணமலை சென்ற்.மேரீஸ்
கல்லூரி வளாகத்தில் இடம்பெறும்
மேற்படி விழாவில் யாழ்ப்பாணம் -
நாயன்மார்கட்டைச் சேர்ந்த முன்னாள் சிரேஷ்ட
பொதுச் சுகாதார பரிசோதகரும்
சமாதான நீதிவானும், சிங்களம் -
தமிழ்-ஆங்கிலம் ஆகிய
மும்மொழிகளிலும் அரச அங்கீகாரம்
பெற்ற மொழிபெயர்ப்பாளருமாகிய
**துரையப்பா மகாதேவன்**
அவர்கள் சாமஸ்ரீ தேசமானிய
எனும் விருது வழங்கப்பெறுகின்றார்.
அவரைச் சீரும் சிறப்புடனும் வாழ்வதற்காக வண்.வட-கிழக்கு
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகரைப் பிரார்த்தித்து
வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
ராஜ ராஜேஸ்வரி (மனைவி),
DR.M. நிரஞ்சன், காலாசனி, சஞ்சயன் - திருகோணமலை,
மாலினி - புரவீந்திரன் - நாயன்மார்கட்டு,
சுதா, உதயகுமார், ராகவி - லண்டன்,
ரவிஷங்கர், இந்திராணி - திருகோணமலை,
நாகரத்தினம் (மனி - நாயன்மார்கட்டு).

**பொன்விழா**

வட இலங்கையில் ரயர் நிரப்பும்
தொழிலில் முன்னோடி நிறுவனம்

**நோர்தேன் இன்டஸ்றிஸ்**

தனது 50ஆவது வருட சேவையை
இன்று (23.11.2013) பூர்த்தி செய்கிறது

வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள்,
முகவர்கள், வங்கியாளர்கள் மற்றும்
ஊழியர்கள் அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்தாபகர்:
அமரர்
தம்பியப்பா
சண்முகலிங்கம்
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.



(40390) (7.6.3)

## கண்காட்சியும் கலை நிகழ்வும்

யாழ்.மாநகரசபை முன்பள்ளி சிறார்களின் கண்காட்சியும் கலை நிகழ்வும் நல்லூர்பண்டாரமாளிகை வளவு முன்பள்ளியில் நாளை மறுதினம் திங்கட்கிழமைகாலை9.30 மணிக்குநடைபெறும். யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில்நடைபெறும்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக ஆரம்ப பிள்ளை அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் ஜெயா தம்பையா, யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையப் பொறுப்பாளர் திருமதி சறோஜா சிவசந்திரன், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன்ஆகியோர்கலந்து கொள்வர். (ந)

## ஆண்டு விழா

எவரெஸ்ட் கிட்ஸ் வேல்ட்டின் 8 ஆவது ஆண்டுநிறைவு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.
நிறுவனத்தின் பணிப்பாளர் சி.ஜெயபாலசிங்கம்தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகயாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி என். செல்வநாயகம் கலந்து கொள்வார். (ந-14)

## திருப்பலி வழிபாடு

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய வருடாந்தப் பெருவிழாத் திருப்பலி வழிபாடுகள் இன்று சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.
இன்று மாலை 4.30 மணிக்குநற்கருணைப் பெருவிழாவும் நாளை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும், திருச்சொருப பவனியும் இடம்பெறும். (ந-135)

## மழலைகள் உலகக் கலை விழா

கோண்டாவில் மேற்கு மழலைகள் உலகத்தின் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. கே.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி கே.தேவராஜா கலந்துகொள்வார். (ந-14)

**'அற்லான்ரா' வைத்தியசாலை-மருதனார்மடம்**
**விசேட வைத்திய நிபுணர் சேவை**

மகப்பேற்று வைத்திய நிபுணர்களான
01. Dr.A.ஸ்ரீதரன், பிரதி வியாழக்கிழமை தோறும் மாலை 6.30 மணிக்கும்
02. Dr.K.சுரேஷ்குமார் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 5.30 மணிக்கும் நோயாளரைப் பார்வையிடுவர்.

தொடர்பு:021 224 2299 (40098)(4.6.3) நிர்வாகி

**வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு**

FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதனால் பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் தங்கள் பிரேரணைகளை
M.M. அல்போன்ஸ்
செயலாளர்,
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்,
சென்மேரிஸ் வித்தியாலயம் (O.L.R)யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 07.12.2013இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
செயலாளர் (40367) (7.3)
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

**"அற்லான்ரா" வைத்தியசாலை-மருதனார்மடம்**
**ஒய்வுபெற்ற தலைமைத் தாதி தேவை**

மேற்படி வைத்தியசாலையில் தாதியர் பயிற்சி வகுப்புகளைப் பொறுப்பேற்று நடத்தவல்ல ஓய்வுபெற்ற தலைமைத் தாதி ஒருவர் உடன் தேவை.
தொடர்புகளுக்கு : தொ.பே.077 371 5670
முக்கிய குறிப்பு : பிரதி சனிக்கிழமை தோறும் பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறும் மேற்படி வகுப்பில் இணைந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.
இலவசம்
T.P : 021 224 2299 (40099) (4.6.3) நிர்வாகி



**ஸ்ரீ அம்மா பகவானின்**
**வரதீட்சை மாலையும் ஆரோக்கிய தீட்சை நிகழ்வும்**

மனித குலத்தின் துயர்துடைக்க அந்தக்கடவுளே மனித உருவில் வந்து இப் புவியிலிருந்து அருள் பாலிக்கின்றனர். அருளின் வெளிப்பாடே இந்த அருள் தரும் அற்புத நிகழ்வு
இடம் : கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை,
ஏ9 வீதி, டிப்போசந்தி அருகில்
நேரம் : மு.ப 10.00 மணி
காலம் : நாளை (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை
இந்த நிகழ்விற்கு அனைவரும் வருக அருள் வளம் பெறுக
ஏகத்துவ நிலையம், கிளிநொச்சி.
(40563)(4.6.3) தொ.பே. 077 205 3060/077 201 8757

**SMALL SOLAR ELECTRIC SYSTEM**



Complete Set - 148,500/=
245w Solar Panal - 2
1500w Inverter - 1
86 A Battery - 2
Charger Controler - 1

7 Hours working
Tube light (40w)-5
Fan (75 w) - 2

**KINGS ELECTRONICS**
No.11-A, Stanley Road, Jaffna.
T.P: 021 222 3857 / 072 7949 242

**அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான**
HNB **அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி
**கிளிநொச்சி வடக்கு, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி**
ஆகிய கிளைகளில் 15.10.2012இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 24.11.2013 தொடக்கம் 28.11.2013 (ஞாயிறு-வியாழன்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரிவீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.
ஏல விற்பனைத் திகதியினைப் பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களின் மாநாடு

ஏறாவூர்,நவ.23
குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சாந்தி சச்சிதானந்தம் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட திட்ட மிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ் செழியன் கலந்து கொண்டார். மட்டக்களப்பு, திருகோண மலை, யாழ்ப்பாணம்,புத்தளம் ஆகிய மாவட்டங்களிலுள்ள வித வைகள் செயலணியின் தலைவிகள் இந்த விதவைகளின் மாநாட்டில் பங்குபற் றினர்.
போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்களின் இயலாற்றலை மேம்படுத்தும் வகையில் அவர்களைக் கிராமங்கள் தோறும் ஒன்றிணைத்துச் செயலணிகளாக மாற்றும் திட்டத்தின் ஒரு கட்டமாக இந்த மாநாடு நடத்தப்பட்டது என்று விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சாந்தி சச்சிதானந்தம் தெரிவித்தார். (ச)

## காணிப் பிரச்சினை குறித்து ஆராய்வு



மட்டக்களப்பு,நவ.23
ஆரையம்பதியில் இடம்பெற்ற காணி அபகரிப்பு தொடர்பாக ஆரையம்பதி அபிவிருத்தி குழுவினர், மண்முனைப் பற்று பிரதேச செயலர் வாசுதேவன் மற்றும் பிரதேச சபைச் செயலாளர் அருட்பிர காசம் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
சர்ச்சைக்குரிய காணி ஆரையம் பகுதிக்குச் சொந்தமானது என்பதற்கான சட்ட ஆவணங்கள் தம்மிடம் உள்ளதாக அபிவிருத்திக் குழுவினர் தெரிவித்தனர்.
காணி இல்லாத அப்பாவி முஸ்லிம்கள் காணி பிடிப்பில் ஈடுபடவில்லை. காத்தான்குடி தலைமைகள் சிலரும் வர்த்தகர்கள் சிலருமே காணிகளை அபகரிக்கின்றனர். இந்த விடயம் தொடர்பில் நாம் மேலதிக விவரங்களைச் சேகரித்து வருகின்றோம்.
விரைவில் மட்டக்களப்பு அரச அதிபர் மற்றும் அமைச்சர்களையும் சந்திக்கவுள்ளோம் என்று அவர்கள் கூறினர்.
கடந்த சில மாதங்களாக இடம் பெறும் இந்த காணிப் பிரச்சினையில் மாவட்ட செயலக வாசலை அடைத்து தமது காணியைத் தமக்குப் பெற்றுத் தருமாறு முஸ்லிம் கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.
இந்த நிலையில் இது தொடர்பில் ஆராய்வதற்கு அரச அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-10)

### திருமலையில் தமிழ்ப் பாடசாலைகள்

# ஆசிரிய நியமனத்தில் அரசால் புறக்கணிப்பு

### நகர சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

திருகோணமலை,நவ.23
கிழக்கு மாகாணத்தில் தற்போது வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்தின் போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் முற்றாக புறக் கணிக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் குற்றஞ் சாட்டியுள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல தமிழ் பாடசாலைகளில் பல்வேறு பாடங்களுக்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றபோதும், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாது புறக்கணிக்கப்படுவது கவலைக்குரியது.



கிழக்கு மாகாண கல்வி அமைச்சு திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்ப் பாடசாலைகளிலும் முஸ்லிம் பாடசாலைகளிலும் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளியிட வேண்டும்.
இந்த விடயம் குறித்து கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் தண்டாயுதபாணியின் கவனத்துக்கும் கொண்டு வரப்படும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

# மண்முனை பாலத்தில் புதிய வீதி; விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு

### ஆராயச் சென்றது பொறியியலாளர் குழு

மட்டக்களப்பு,நவ.23
மட்டக்களப்பு, மண்முனைத் துறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மண்முனைத்துறைப் பாலத்தின் புதிய வீதி, அங்கு வயல்களின் நிலமட்டத்தை விட 3 அடி உயரமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அதனால் விவசாயிகள் எதிர்காலத்தில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படவுள்ளது.



இதுதொடர்பாக ஆராய்வதற்காக கிழக்கு மாகாண சபை உறுப்பி னர் சிப்லி பாறூக் தலைமையில் பொறியியலாளர்களைக் கொண்ட குழுவினர் வியாழக்கிழமை அந்த இடத்துக்குச் சென்று வீதியின் நிர்மாண வேலைகளைப் பார்வையிட்டனர்.
மழை காலங்களில் நீர் இயற்கையாகவே வாவிக்குள் வழிந்தோடுகின்றது. அப்பாதை முற்றாக தடைப்படுவதனால் நீர் தேங்கி நிற்கும் நிலை ஏற்படுகின்றது. அதனால் எதிர்காலத்தில் வயல்களில் நெற்செய்கை செய்யமுடியாத நிலை ஏற்படும் என்று விவசாயிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.
இதற்கான திட்ட வரைபுகளை உடனடியாகத் தயாரித்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் உறுதியளித்தார் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் கூறினார். (ச)

### கடலில் மூழ்கியவர்களை

# காப்பாற்ற சென்ற நபர் பரிதாபச் சாவு

மட்டக்களப்பு,நவ.23
கடலில் மூழ்கிய இருவரை மீட்பதற்காக சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் வாழைச்சேனை, நாசிவன் தீவு பகுதியில் இடம்பெற்றுள்ளது.
வாழைச்சேனை, அக்பர் பள்ளி வீதியைச் சேர்ந்த அல் ஹாபீஸ் மீராமுகைதீன் முஹம்மது பயாஸ் என்ற இளைஞரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் வியாழக் கிழமை காலை குடும்பத்தினருடன் நாசிவன் தீவு கடலுக்கு அவர் குளிக்கச் சென்ற போதே இடம் பெற்றுள்ளது.
அவருடன் சென்ற இருவர் நீரில் மூழ்கியதைக் கண்டு அவர் களைக் காப்பாற்றுவதற்கு இவர் முயற்சித்த சமயம் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது என்று உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர். (ச)

**வீடு வாடகைக்குத் தேவை**
ஐந்து பேர் கொண்ட உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் வசதியான வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: (40403)(4.6.3)
077 759 0496, 077 508 4646

**தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு**
எம்மிடம் நல்லினத் தென்னம் நாற்றுக்களும் குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய நல்லின நாற்றுக்களும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு:077 659 2044 (33609)(4.6.3)

softlogic இன்
BEST IN THE BUSINESS
நத்தார் புதுவருட
பண்டிகைக் காலக் குதூகலத்தில் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்
Dell Inspiron 3521 Core i3
• Intel Core i3, 3227U, 3rd Generation Processor
• 4 GB, DDR3 Memory
• 500 GB, HDD
• 15.6" HD LED Display
• Bluetooth – Wi-Fi
• McAfee Security 01 year subcription
Laptop Bag இலவசம்
Canon IP2772 பிறிண்டர் இலவசம்



14999/= மாத்திரம் செலுத்தி Dell i3 மடிக்கணினி ஒன்றினை பெற்றுக்கொண்டு மீதிப்பணத்தை 12 மாத வட்டியில்லாமல் செலுத்தலாம்
★ நிபந்தனைகளுக்கு உட்பட்டது
தொடர்புக்கு:
இல. 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 739 7734/ 021 567 1108

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
**சாமஸ்ரீ விருது விழா**



பு.தினேஸ்குமார் சாமஸ்ரீ தேசமானிய
கா.சுரேன் சாமஸ்ரீ தேசமானிய
து.விமல் சாமஸ்ரீ தேசகீர்த்தி
அ.ஜெகதீபராஜன் சாமஸ்ரீ தேசகீர்த்தி
சமய, சமூக, கலை, கலாசார ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்விமான்களுக்கும், வர்த்தகர்களுக்குமான தேசிய விருது விழாவில் இன்று சனிக்கிழமை திருகோணமலை சென்ட் மேரிஸ் கல்லூரி வளாகத்தில் சாமஸ்ரீ சமூக சேவையாளர் விருதைப் பெறும் நண்பர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: நண்பர்கள்
(40399)(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக் கருத்தரங்கு





ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைத் தயார்ப்படுத்தும் முகமாக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், சண்டிலிப் பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவச கல்விக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன. இதில் 4 ஆவது கருத்தரங்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தி னராக வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் கலந்துகொண்டார். (வ-86)

# மாதாந்தச் சந்தா 50 ரூபா; சலுகைகளும் அதிகரித்தன

### ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில்

அச்சுவேலி,நவ.23

"அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் மாதாந்தச் சந்தா 50 ரூபா மட்டும் ஓய்வூதியத்தில் இருந்து கழித் தெடுக் கப்படும். சந்தா அதிகரிப்பின் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் குழப்பத்துக்கு உள்ளாக வேண்டாம்"

இவ்வாறு அரச் சேவை ஓய் வூதியர்நம்பிக்கைநிதியத்தின்யாழ். மாவட்டத் தலைவர் வி.சிறி சக்திவேல் தெரிவித் துள்ளார்.

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் மாதாந்தச் சந்தா அதிகரிப்பு மற்றும் உறுப்பினர்களுக்கான சலுகை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு தேசிய ரீதியில் செயற்படுவது இலங்கையில் அரச ஓய்வூதியர்களின் நலன்புரிநடவடிக்கைகளுக்கும் வளர்ச்சிக்கும் கைகொடுக்கும் நிறுவனம்.

உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய தேசிய ரீதியில் பொதுச் சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப மாதாந்த சந்தா செப்ரெம்பர் மாதத்தில் இருந்து 50 ரூபா ஓய்வூதியத்தில் இருந்து கழிப்பது என தீர்மானிக்கப் பட்டுள்ளது.

செப்ரெம்பர். ஒக்ரோபர் மாதங்களுக்கான சந்தா நிலுவை 60 ரூபாவும் நவம்பர் மாத சந்தா 50 ரூபாவும் சேர்த்தே நவம்பர் மாத ஓய்வூதியத்தில் 110 ரூபா கழிக்கப்பட்டது. டிசெம்பர் மாதத்தில் இருந்து மாதாந்தம் 50 ரூபா மட்டும் கழிக்கப்படும்.

சந்தா அதிகரிப்பின் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப் படும் சத்திரசிகிச்சை கொடுப்பனவு. கண்வில்லை மற்றும் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவு. மரணப் பணிக்கொடை என்பன மடங்குக் கணக்கில் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. எனவே உறுப் பினர்கள் குழப்பத்துக்கு உள் ளாக வேண்டாம்" எனத் தெரிவித்தார். (ந-11)

## நாவலர் குருபூசையும் பரிசளிப்பு நிகழ்வும்

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையும், வினாவிடை போட்டிப் பரீட்சை பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

குருபூசையை தொடர்ந்து அகில இலங்கை திருமுறை மன்றத்தினரது கூட்டுப் பிராத்தனையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குரு பூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட வினாவிடை போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பும் இடம்பெறும். (ந)

## பெண் தலைமைத்துவம் தொடர்பான நூல்கள் குறித்த கலந்துரையாடல்

வடமாகாண காணி பிரச்சினை மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட மகளிர் அபி விருத்தி நிலையத்தின் தலைவி சரோஜினி சிவசந்திரனால் வெளியிடப்பட்ட நூல்களை வழங்கும் நிகழ்வும் கலந் துரையாடலும் வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகளைச் சேர்ந்த உயர் மட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பெண்களை மையமாகக் கொண்ட பல விடயங்கள் இந்த நிகழ்வில் ஆராயப்பட்டதுடன் பெண் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பிலும் மற்றும் காணி தொடர்பிலான சட்டங்கள் போன்றவை குறித்தும் கலந் துரையாடப்பட்டன. காணி மற்றும் பெண் தலை மைத்துவங்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட நூல்கள் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மூலம் அவற்றில் உள்ள விடயங்கள் நடை முறைப் படுத்தப்பட வேண்டும் என கலந்து கொண்டோர் தெரிவித்தனர். (ந-10)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**

பிறப்பு
16.12.1949

இறப்பு
24.10.2013

கடந்த 24.10.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.11.2013) சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எமக்கு பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் லண்டன் வாழ் உறவினர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்து வெளியிட்டோருக்கும் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

சாவில்,
புலோலி தெற்கு, புலோலி. 077 539 3280

## மரண அறிவித்தல்

திருமதி **பகவதி** (சீதா) **கனகலிங்கம்**



320/5, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி (சீதா) கனகலிங்கம் 21.11.2013 கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கனகலிங்கத்தின் மனைவியும், சந்திரசேகர், சொர்ணம், காலஞ்சென்ற ஞானசேகர் மற்றும் சிவராஜசேகர் ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயக்குமார், குமுதினி ஆகியோரின் அன்பு மாமியும், சஜிதா, கஜேந்திரன், தரங்கினி, தர்மினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை ந.ப.12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

320/5, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 794 6778

தகவல்:
குடும்பத்தினர்.

(40404)
(12.3-6)

## கண்ணீர் விழிகளுடன் 2 ஆம் வருட நினைவு நாள்

அமரர்
**கணபதிப்பிள்ளை குகானந்தன்**



மண்ணில்
30★05★1960

விண்ணில்
16★12★2011

கணவராக வாழ்ந்த கானகனே!
தந்தையாய் வாழ்ந்த எமதருமைத் தருமரே!
ஊருக்கு உழைத்த உத்தமரே!
கிராம அபிவிருத்தியின் தலைவரே,
கமக்கார அமைப்பின் காரியதரிசியே,
எங்கு ஐயா சென்றாய் நீ!
நீ மறைந்து இரு ஆண்டுகள் ஆனாலும்
நீர் எமக்களித்த அன்பும் ஊருக்காற்றிய
தொண்டும் எமது நெஞ்சை விட்டு அகலவில்லை
உம்மைப் போற்றவும் வாழ்த்தவும் தான்
எமது இறுதி நாள் வரை இலட்சியம் கொண்டுள்ளோம்.
வாழ்க உங்கள் புகழ்! சாந்தி உங்கள் ஆத்மாவிற்கு!

மறவன்புலோ கிழக்கு,
சாவகச்சேரி.

அன்பு மனைவி (ரஞ்சினி),
பிள்ளைகள்.

(3398) (4.6.3)

## 18 ஆம் ஆண்டு நினைவு





அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம்**
ஸ்தாபகர்: சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
தோற்றம்
03.11.1941

மறைவு
23.11.1995

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன்**
மாணவன்: யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி
தோற்றம்
18.08.1983

கார்த்திகையில் உங்களைக் காலன் கவர்ந்து
ஈரொன்ப தாண்டுகள் இன்றுடன் தாண்டின
நேர்ந்ததை நினைந்து நொந்து வாடினும்
[illegible] நாம் வாழ சிவனருள் புரிகிறார்

[illegible] இல்லம்' இல.29, ஒட்டுமடம் வீதி,
வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரை பின்னுவதற்கு ஆள்கள் தேவை

புதிதாகச் செய்யப்படும் கதிரைகள் பின்னுவதற்கு ஆள்கள் தேவை.

(40416)(10.14) தொடர்பு: 0776729641, 075 040 3632

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

# பாராட்டுகின்றோம்

## வயிரமுத்து சந்திரசேகரம்

(நிர்வாகக் கிராம அலுவலர் நானாட்டான்)



கடந்த 35 வருடங்களாக அரச சேவையாற்றி 24.11.2013 முதல் தனது சேவையில் இருந்து இளைப்பாறுவதையிட்டு மனதாரப் பாராட்டுகின்றோம்.

03.04.1978ஆம் ஆண்டு பயிர்ச்செய்கை அலுவலராகச் சேவையில் இணைந்து கொண்ட இவர் 01.02.1989ஆம் ஆண்டு முதல் கிராம அலுவலராகப் பதவி மாற்றம் செய்யப்பட்டு மக்கள் சேவையே மகேசன் சேவையென நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி 01.01.1993இல் தனது தரம் ஒன்று பதவி உயர்வையும் பெற்றார். 29.01.2006ஆம் ஆண்டு அதிவிசேட தரத்திற்கு தரமுயர்வு பெற்றதுடன் நானாட்டான் பிரதேச செயலகத்தில் கடமையை பொறுப்பேற்றதுடன் ஓய்வுபெறும் வரை தனது கடமையை நல்ல முறையில் ஆற்றி சக அலுவலர்களினதும் மக்களினதும் பெரும் மதிப்பையும் பெற்றுக் கொண்ட இவர் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்று மன நிம்மதியுடன் இறைவனின் அருள்பெற்று நீண்ட காலம் வளமுடன் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

Best wishes

அலுவலர்கள் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், நானாட்டான்.

(சி/14982)(7.8.3)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு அச்சுவினி நட்சத்திரம், கிரக பாவம் 14 ½ உடைய UK இல் Student Visa விலிருக்கும் மணமகனுக்கு PR உடன் மணமகள் தேவை.

(40415)(10.14) தொடர்பு: 077 748 8301

## தவறிவிட்டது

பருத்தித்துறையைச் சேர்ந்த கந்தையா பாலசுப்பிரமணியம் (372850590V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன தவறிவிட்டன. தொடர்பு: (40413)(10.14)

077 8737 334, 077 138 6968 (கொட்டடி)

## வேலையாள்கள் தேவை

கொடிகாமத்தில் இயங்கும் வர்த்தக நிலையத்தில் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்கள் தேவை. தொடர்பு:

021 7915 871, 077 3412 571

## விற்பனைக்கு/வாடகைக்கு

கச்சேரிக்கு மிக அண்மையில் 3பரப்புக் காணியில் அமைந்த வீடு 4 அறைகள், 2குளியலறைகள், 2சமையலறை, 2விசாலமான வரவேற்பறை மற்றும் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய நல்ல சூழ லில் உள்ள வீடு உடன் வாட கைக் கு அல்லது விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்ப டும்.

தொடர்பு : 077 0609178, 077 452 7671

## விற்பனையாளர் தேவை

எமது ஸ்தாபனத்தக்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை.

கணினி அறிவுடையவருக்கு - ரூபா 12000/-
விற்பனையாளருக்கு - ரூபா 10000/-

மாத வேதனத்துடன் மேலதிகமாக தங்குமிட வசதியும், மூன்று நேர உணவும் வழங்கப்படும்.

தொடர்பு:
11-A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(40412)(10.14) T.P: 021 222 3857

## விற்பனைக்கு

MAZDA (JAPAN) கார் 16-8xxx விற்பனைக்கு. தொடர்பு: (40409)(10.14)

077 918 4553, 077 724 2662

# வலி கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

## கேள்வி அறிவித்தல் -2014

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2014 ஆம் ஆண்டிற்கு (01.01.2014 - 31.12.2014) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 25.11.2013- 09.12.2013.**
**கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 10.12.2013 நண்பகல் 12.00 மணி வரை**
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 10.12.2013 பி.ப 02.00 மணி.**

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை "தவிசாளர், வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும், எதிர்வரும் 10.12.2013ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வரி நீங்கலாக) | மாதாந்த வாடகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித்தரிப்பிடம், மின்சாரக்கட்டணம் உட்பட) துவிச்சக்கர வண்டி 5/=மோட்டார்சைக்கிள் 10/= | 2000.00 | 10,000.00 | 5,126,000.00 | |
| 02 | அச்சுவேலி வாகன தரிப்பிடம் | 500.00 | 2000.00 | 50,000.00 | |
| 03 | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 569,000.00 | 500.00 |
| 04 | அச்சுவேலி கோழி இறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 182,000.00 | 500.00 |
| 05 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 46,500.00 | 500.00 |
| 06 | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 118,000.00 | |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 194,000.00 | 500.00 |
| 02 | புத்தூர் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 130,000.00 | |
| 03 | புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 11,500.00 | 500.00 |
| 04 | ஆவரங்கால் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 16,500.00 | |
| | நீர்வேலி உப அலுவலகம் | | | | |
| 01 | நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 62,700.00 | 500.00 |
| 02 | நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 | நீர்வேலி மீன்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| 04 | நீர்வேலி பொதுச்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 661,000.00 | 500.00 |
| 02 | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 | கோப்பாய் கோழி இறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 38,500.00 | 500.00 |
| 04 | இருபாலைச் சந்தி மாட்டிறைச்சிக் கடை(இடத்தினை தாங்கள் ஒழுங்கு செய்தல் பொதுககாதார பரிசோதகரின் அனுமதியுடன்) | 500.00 | 2000.00 | 660,000.00 | |
| 05 | இருபாலை ஆட்டிறைச்சிக் கடை (இடத்தினை தாங்கள் ஒழுங்கு செய்தல் பொதுககாதார பரிசோதகரின் அனுமதியுடன) | 500.00 | 1000.00 | 25,300.00 | |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 133,100.00 | 500.00 |
| 02 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 99,000.00 | 500.00 |
| 03 | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 200,000.00 | |
| 04 | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 80,300.00 | 500.00 |
| 05 | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1000.00 | 22,000.00 | 500.00 |

01. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும், காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
08. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
23.11.2013

(சி/14980)(10.8)

அன்னலிங்கம் உதயகுமார்,
தவிசாளர்
வலி கிழக்கு பிரதேசசபை
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார் / புதுவருட சிறப்பு விற்பனை



சல்வார்
1200
தொடக்கம்

தெரிவுகள் ஏராளம்! ஏராளம்!!
விலையோ மிகக் குறைவு !!!
விரையுங்கள்!
அள்ளிச் செல்லுங்கள்!!

(40411)(10.14)

**கனடா ஜெயசாஜி சுப்பர் சென்ரர்**
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி : 021 221 9393

## கரைதுறைப்பற்று பல நோக்கு கூட்டுறவு சங்கம், முல்லைத்தீவு

### அறிவித்தல்

சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 25.12.2013ஆம் திகதியுடன் மூடப்பட இருப்பதால் சங்கத்தின் அங்கத்தவர்களாக கடந்த காலத்தில் இருந்தும் இன்றுவரை தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தாதவர்கள் 20.12.2013 ஆம் திகதிக்கு முன்னதாக சங்க தலைமை காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொண்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன் ஏற்கனவே உள்ள கிளை ரீதியான பட்டியல்களை கிளைகளிலும் தலைமைக் காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

சங்கத்தின் பழைய அங்கத்தவர்கள் பட்டியலில் இல்லாதவர்கள் தாம் பழைய அங்கத்தவர் என்பதை சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்தி வழங்குவதுடன், பங்குப்பணம் 100 /= வினையும் செலுத்த வேண்டுமென்பதனை தங்களின் தயவான கவனத்துக்கு அறியத்தருகின்றோம்.

21.11.2013 ஆம் திகதிய இயக்குநர் சபைக் கூட்டத்தில் 04ஆம் இலக்க தீர்மானக் கட்டளைப்படி.

செயலாளர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,
முல்லைத்தீவு.

(சி/14981)(10.14)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

## பதவி வெற்றிடங்கள்

### கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)

(பருத்தித்துறை, சுன்னாகம், சாவகச்சேரி, வேலணை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா)

**1. தகைமைகள்:**

1) க.பொ.த. (சா/த)

(பாதுகாப்பு சேவை அனுபவம் உள்ளவர்களுக்கும், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும் முன்னுரிமையும், கல்வித்தகைமையில் விலகல் அளிக்கப்படும். பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

**2. உயரம்** :- 5' 4'' குறையாமல் இருத்தல் வேண்டும்.

**3. வயது** :- 01.12.2013 அன்று 23 வயதுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.

**4. சம்பளம்:-** (i) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
(ii) EPF + ETF வழங்கப்படும்

நேர்முகப் பரீட்சை 26.11.2013, 27.11.2013 (செவ்வாய், புதன் கிழமைகள்) ஆகிய நாள்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப 2.00 மணிவரை கீழ் காணப்படும் அலுவல கத்தில் நடைபெறும்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

(i) கிராம சேவகரின் நற்சான்றுப்பத்திரம் (06 மாதங்களுக்கு உட்பட்டது)
(ii) தேசிய அடையாள அட்டை
(iii) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
(iv) கல்வித் தராதரப்பத்திரம்/பாடசாலை அதிபரின் நற்சான்றுப் பத்திரம்.

இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டு வரவும்.

**கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை**
**337 1/1, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/14983)(10.14)

# கொலை செய்வோர் முற்கோபக்காரர்கள்

## அதனால் 90 வீதமானோர் சிறைவாசம் அனுபவிப்பு

கொலைகளைச் செய்து விட்டு குற்றவாளிகளாகி மரண தண்டனைத் தீர்ப்புக்குள்ளாகியிருக்கும் சிறைக் கைதிகளில் 90 வீதமானோரும் முற்கோபம் காரணமாகவே சிறைவாசம் அனுபவிப்பது தெரியவந்துள் ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகல தெரிவித்துள்ளார்.

பாரதூரமான குற்றச் செயல்கள் சம்பந்தமாக நூற்றுக்குப் பத்து வீதத்துக்கும் குறை வான தரப்பினரே மரண தண்டனைத் தீர்ப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் கூறினார்.

முற்கோபம் காரணமாக இடம்பெறும் குற்றமொன்று மரண தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாகும் வேளை சிறைக் கைதி யொருவரின் குடும்பம் அசௌகரியங்களை எதிர் நோக்க நேர்கிறது.

சிறைக் கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படும் நியாய மற்ற நடைமுறைப் போக்குக ளால் அந்தக் குடும்பங்களின் உறுப்பினர்கள் சிறைத் தண்ட னையை விடக் கடுமையான தண்டனையை அனுபவிக் கின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். இந்தக் குடும்பங் களைச் சேர்ந்த ஒரு பிள்ளைக்குப் பாடசாலை செல்வதற்கோ வேலைவாய்ப் பொன்றுக்குச் செல்வதற்கோ இயலாதநிலை காணப்படுகின்றது- என்று அவர் மேலும் கூறினார். (ச-22)

நம்ப முடியவில்லையா??? அதிசயம் ஆனால் உண்மை !!!




- நீங்கள் கருமை நிறம் உடையவரா? or சற்று நிறம் குறைந்தவர்களா?
- உங்கள் கன்னங்கள் குழிவிழுந்தவையா? or கரு வளையம், பருக்கள் நீண்ட கால தழும்புகள், கரும்புள்ளிகள், பாலுண்ணிகள் உடையவரா?
- உங்கள் உடல் பருமனாக அமைப்பில்லாமல் இருக்கின்றதா? or மெலிவான தோற்றமா? கவலையை விடுங்கள்!!!
- முடி உதிர்வு, பொடுகு, பேன், செம்படை போன்றவற்றால் அவஸ்தைப்படுகிறீர்களா? மற்றும் அழகிய முக அமைப்பை பெற விரும்புகிறீர்களா?

10 நாட்களில் தீர்வு நிச்சயம் முதற் பதிவு அவசியம் அழையுங்கள் 0777351954

இவற்றிற்காக நீங்கள் பல இடங்களில் சிகிச்சை பெற்றும்
தீர்வு இல்லாமல் பணத்தையும் நேரத்தையும் வீண்செய்தீர்களா? கவலையை விடுங்கள்
"எம்மை நாடுங்கள்"
முற்றிலும் ஆயுள்வேத சிகிச்சைகள் பக்கவிளைவுகளற்றவை

We care Always

சானியா கேபல் கெயர்
262, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை
நல்லூர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி குயின்மேரி சந்தியாப்பிள்ளை



மாதகலைகப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குயின்மேரி சந்தியாப்பிள்ளை நேற்று (21.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துளசீன்பிள்ளை - லூயீசம்மாவின் அன்புமகளும் காலஞ்சென்ற இராசேந் திரம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மரு மகளும் காலஞ்சென்ற சந்தியாபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கன், ரவி மற்றும் இராசாத்தி யம்மா(பிரான்ஸ்)பழம்(லண்டன்) ஆகி யோரின் பாசமிகு தாயும் சாந்த குமாரின் (பிரான்ஸ்) மாமியும் சவீஷன், சுஜித்தா, சுஜின்சிகா, நிலக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சவுந்தரநாயகம், (இந்தியா) மணி ஆகி யோரின் அருமைச்சகோதரியும் காலஞ்சென்ற வேவி மற்றும் திரவியம், செல்லம், அருமை (கனடா) ஆகி யோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25.11.2013 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு புனித தோமையார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சகோதரன் குடும்பம்
அன்ரனி ஜெகநாதன் கார் மலா

## மரண அறிவித்தல்

### முருகேசு கந்தப்பு



நெடுந்தீவு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கந்தப்பு நேற்று முன்தினம் (21.11.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- சிவகாமிப் பிள்ளை தம்பதியரின் மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற பிரபாகரன் மற்றும் சுதாமதி, சாந்தமதி, கருணா கரன், வனிதா, யசோதா, கோமதி கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தை யும் சிவகுமாரன் காலஞ்சென்ற ஜெயகரன் மற்றும் சுந்தா, இராஜபாலன், சூரியகுமார், வசந்தகுமார், லதாங்கி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 25.11.2013 திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கனகன் தம்பித்துரை



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மேற்கு, மாலைவைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகன் தம்பித்துரை 20.11.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகன்-வாரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தன்-வள்ளி தம் பதியரின் அன்பு மருமகனும், தேவியின் அன்புக் கணவரும், சுவேந்திரன் (பிரான்ஸ்), சுமதி ஜெயராஜ் (சுவிஸ்), ராஜன் (பிரான்ஸ்), சுபாசினி சுபாஸ் (புவனம்), கௌசிகா ஆகியோ ரின் அன்புத் தந்தையும், சிறி, ஜெயராஜ், விஜி, ரஜனி ஆகி யோரின் மாமனும், ஒன்சிகா, பதுஜா, துஸ்மிகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற நல்லம்மா, சின்னையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாலை வைரவர் கோயிலடி,
நீர்வேலி மேற்கு.
T.P: 077 890 6717

(சி/14949) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் நிற்சிங்கர் (சபா)



மீசாலை வடக்கைச்சேர்ந்த மயில்வாகனம் நிற்சிங்கர் நேற்று (22.11.2013) வெள் ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கண வரும், காலஞ்சென்ற மயில் வாகனம் - வள்ளியம்மை தம் பதியரின் புதல்வரும் காலஞ் சென்றவர்களான கமலேஸ் வரி, விமலேஸ்வரி, வல்லிபுர நாதன் மற்றும் மயில்வாக னம் (ஜேர்மனி), ஞான மனோகரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந் தை யும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, தாமோ தரம்பிள்ளை மற்றும் சிவபாக் கியம் ஆகியோரின் சகோதர ரும் செல்லையா, நடராசா (மணியம்), ரூபசௌந்தரி (ஜேர்மனி), பரமேஸ்வரன் (வவா) ஆகியோரின் மாமனாரும் ரமேஸ் (லண்டன்), றமணி, றசிந்தன், அஜிந்தன் (லண்டன்), அஜிந்தா (லண்டன்), சுரேஸ், ஸ்ரீதர்சனா, கபிலன், கஜீவன், கம்ஷிகா, மயூரன் (ஜேர்மனி), துஷாந் (ஜேர்மனி), துஷிகா (ஜேர்மனி), நிக்ஷா (ஜேர்மனி) ஆகி யோரின் பேரனும் நீலவன் (லண்டன்), விதுர்ஷா, திஷனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2013) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சோனாங்காடு இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சபா குடும்பத்தினர்,
பரமேஸ்வரன் (வவா)

(33011) (14)

## மரண அறிவித்தல்

### லயன் குழந்தைவேலு நடராசா

( லயன்ஸ் கழக 306B1 மாவட்ட தலைவர், சமுர்த்தி மகா சங்கத்தலைவர்,
தென்மராட்சி தென்னை அபிவிருத்திச்சபை தலைவர்,
தென்மராட்சி கிழக்கு அபிவிருத்திச்சபை உறுப்பினர்,
கொடிகாமம் பொது வைத்தியசாலை அபிவிருத்திசபை உறுப்பினர்,
நூலக அபிவிருத்திச்சபை பொருளாளர்)



கச்சாய் வடக்கு , கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும். நகுலகிரி கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு நடராசா (20.11.2013) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - ஈஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் நகுலேஸ்வரியின் பாசமிகு கணவரும் விநாயகமூர்த்தி, சிறிரங்கநாதன், தவமணி, தவமலர் ஆகியோரின் அன்புச்சகோதரனும் திருச்செல்வம், பரமேஸ்வரி, மகேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சோமநாதர், அரியநாயகம், இராசேஸ்வரி, சிறிநந்தினி ஆகியோரின் மைத்துனரும் கணேசலிங்கம், ஜெயமணிதேவி, காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், ஜெயவீரசிங்கம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சிவரூபன், சிவகேசவன், சிவநேசன், துஸ்யந்தி, சாவித்திரி, கோபிகா, சுதர்சன், பரிசன், சுவர்ணா, தட்சாயினி , பிரகாஸ், கஸ்தூரி, வாசுகி ஆகியோரின் மாமனாரும் சாரங்கன், சாரங்கி ஆகியோரின் பெரியப்பாவும் சோதீஸ்வரன், விக்கினேஸ்வரன், இராசேஸ்வரன், பாலசோதி, பாலேஸ்வரி, ஜெயச்சந்திரன், ஜெயராணி, ஜெயரோகிணி, குமணன், அகிலன், கலாநிதி, கவிதினி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் கொடிகாமம் பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'நகுலகிரி', கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(40405)(7.8.3)

தகவல் :
குடும்பத்தினர்
077 667 9391, 077 429 3432

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழக் கவிஞர் ஜெயபாலன் பொலிஸாரால் நேற்றுக் கைது

ஈழக் கவிஞரும், திரைப்பட நடிகருமான வ.ஐ.ச.ஜெயபாலன் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அண்மையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த ஜெயபாலன் விஸா நடைமுறைகளை மீறி, இனங்களுக்கிடையே ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் செயற்பட்டதாலேயே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். எனினும் மாங்குளத்தில் உள்ள தனது தாயாரின் சமாதியை வணங்கச் சென்ற போதே அவர் கைது செய்யப்பட்டார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 99 வீதமான

றத்துக்கே இருக்கிறது என அரசமைப்பின் 148ஆவது அத்தியாயத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள போதும், கடந்த காலங்களில் அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ள ஆவணத்துக்கு மாறாக நிதி நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய போது அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரையில் 101 பந்திகள் வாசிக்கப்பட்டன. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்த மானியமும் கிடைக்கவில்லை. வாழ்க்கைச் செலவைக் குறைக்க எந்தத் திட்டமும் இல்லை. அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. இதற்கு மாறாக நாட்டின் விவசாய, மிருகவள, நீர்வள, வனஜீவராசிகள் மற்றும் சுகாதாரத் துறைகளில் பணி யாற்றும் அதிகாரிகளுக்கு 5 வருடகால வரிச்சலுகைமுறைக்கு அமைய மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் நாட்டின் பொருளாதாரத்தின் உண்மை நிலை வெளிப்படுத்தப்படவில்லை. புள்ளி விவரங்களில் நம்பிக்கை கொள்ள முடியாது. 2003ஆம் ஆண்டு ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் 1.86 ரில்லியன்களாக இருந்த அரச கடன், 2008ஆம் ஆண்டில் 3.58 ரில்லியன்களாகவும், 2013 ஆம் ஆண்டில் 6.63 ரில்லியன்களாகவும் அதிகரித்துள்ளது. அதேபோல், 2003ஆம் ஆண்டு ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் 843 பில்லியன்களாக இருந்த வெளிநாட்டுக் கடன், 2008 இல் 1.44 ரில்லியன் களாகவும், 2013இல் 3 ரில்லியன்களாகவும் அதிகரித்துள்ளது. நாம் ஒரு கோடி இலட்சம் ரூபா கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

இங்கே என்ன நடந்துள்ளது? ஆரம்பத்தில் போருக்காக செலவழிக்கப்பட்ட பணம் போரின் பின்னர் தத்தமது வருமானங்களை உயர்த்துவதற்காக புதிய வழிகளில் கொள்ளையடிக்கப் பட்டது.

**கல்வி, சுகாதாரத்துக்கு நிதிக் குறைப்பு**

நாட்டின் சுகாதாரத்துறைக்காக ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவில் 30 வீதத்தையும், கல்விக்காக ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவில் 29 வீதத்தையும், உயர் கல்விக்காக ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவில் 38 வீதத்தையும் அரசு பறித்துள்ளது. இதனூடாக கல்வி, சுகாதார சேவைகளின் அபிவிருத்திகளுக்கான நிதிக் குறைப்பு செய்யப் பட்டுள்ளது.

**ஐ.தே.க. - ராஜபக்ஷ அரசுகளுக்கு இடையிலான வேறுபாடு**

எமது திட்டத்துக்கமைய சரியான முறையில் பொருளாதார நடவடிக்கை களை மேற்கொண்டிருந்தால் இந்த வருடத்தில் 20 பில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நிய செலாவணியாகப் பெற்றுக்கொண்டிருக்க முடியும். ஆனால், இந்த அரசு 2020ஆம் ஆண்டே 20 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெற எதிர்பார்க்கிறது என்று நேற்று (நேற்று முன்தினம்) வரவு - செலவுத்திட்ட உரையில் தெரிவிக்கப்பட்டது. இது தான் இந்த இரு அரசுகளுக்கும் இடையிலான வித்தியாசம்.

**ஒரு சதவீதத்தினருக்காக 99 வீதத்தினர் மீது சுமை**

இந்த வரவு - செலவுத்திட்டத்தினூடாக ஒரு சதவீதத்தினரின் நன் மைக்காக 99 சதவீதமானோர் மீது அரசு சுமையைச் சுமத்தியுள்ளது. - எனத் தெரிவித்தார். (த-சி)

### புலனாய்வாளர்

விடுக்கப்படும் அச்சுறுத்தல்களைக் கண்டித்து மன்னாரில் நேற்று நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

காணாமற்போன உறவுகளைத் தேடி அவர்களின் குடும்பத்தினர் நடத்தும் போராட்டங்களில் முன்னின்று செயற்படும் மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் இணைப்பாளர் எஸ். கனேஸ் சோசை என்பவருடைய வீட்டிற்கு நேற்றுமுன்தினம் அதிகாலை சென்ற இராணுவப் புலனாய்வாளர்கள் அவருக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் மிரட்டல் விடுத்திருந்தனர்.

இதனைக் கண்டித்தும், காணாமற்போனோரின் விடுதலைக்காகக் குரல் கொடுத்து வருவோருக்கு விடுக்கப்படு கின்ற அச்சுறுத்தல்களைக் கண்டித்தும் மன்னார் பிரஜைகள் குழு, தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவை மற்றும் மன்னார் மாவட்ட காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கம் ஆகியவை இணைந்து கண்டனப் பேரணியை நேற்று நடத்தின.

இந்தப் பேரணியில் மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு யோசப்பும் கலந்து கொண்டார். குறித்த பேரணி மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் இருந்து காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகி, மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தைச் சென்றடைந்தது.

இதன்போது பேரணியில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களுக்கும், மன்னார் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது மன்னார் மாவட்டத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பில் பணியாற்றுகின்றவர்களுக்கு புலனாய்வுத்துறை என்ற பெயரில் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வருகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பாக பேரணியில் கலந்துகொண்டவர்கள் பொலிஸ் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த பேரணி மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்று, ஜனாதிபதிக்கு வழங்கும் முகமாக மகஜர் ஒன்றை மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் கையளித்தனர். இந்தப் பேரணியில் கலந்துகொண்ட மன்னார் ஆயர் தமது நிலைப்பாட்டை மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆகியோருக்குப் பின்வருமாறு தெரிவித்தார்.

"இந்த நாட்டை ஜனநாயக நாடு என்று அரசு கூறி வருகின்ற போதும் வடக்கில் தமிழ் மக்கள் அஹிம்சை ரீதியில் உரிமைப் போராட்டம் நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இராணுவத்தினரால் கடத்தப்பட்டவர்களைத் தேடி - காணாமற்போனோரைத் தேடி - இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பைக் கண்டித்து நடத்தப்படுகின்ற போராட்டங்களில் முன்னின்று செயற்படுவர்களை இராணுவப் புலனாய்வாளர்கள் குறிவைத்து அவர்களை அச்சுறுத்தியும், தாக்கியும் வருகின்றனர்.

எனவே, வடக்கில் இராணுவப் புலனாய்வாளர்களின் அடாவடியை உடன் நிறுத்தி அங்கு மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்" - என்றார்.

இந்தப் பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம், வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி வி.சத்தியலிங்கம், வட மாகாண மீன்பிடி - போக்குவரத்து அமைச்சர் ப.டெனீஸ்வரன் , வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிரிமூஸ் சிறாய்வா, தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் இணைப்பாளர் எஸ்.ஜேசுதாசன், கத்தோலிக்க குருமார்கள், மன்னார் மாவட்ட காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கப் பிரதிநிதிகள்,மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-சி)

### போரினால்

காட்டுகின்றது. நாட்டு மக்கள் வாழ்க்கைச் செலவினத் தாக்கத்துக்கு உட்பட்ட நிலைமை காணப்படுகின்றது. மக்களுக்குப் பரிகாரம் தேடிக் கொடுக்கும் நிலையில் இந்த வரவு - செலவுத் திட்டம் இல்லை என்றே நினைக்கின்றேன்.

பணவீக்கம் குறைவு என மத்திய வங்கி குறிப்பிட்டாலும் யதார்த்தம் அவ்வாறில்லை. மத்திய வங்கியின் கருத்திற்கேற்ற தீர்ப்பை மக்கள் எதிர்பார்த்த நிலையிலும் அது கிடைக்கவில்லை. அரசு சமூக நல சேவைகளைச் செய்வதன் மூலம் தன்னை பாதுகாக்கும் நிலையே காணப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி என்பது நாட்டின் வேர். சமூக நலச் சேவைகள் என்பது கிளைகள். வேர் நன்றாக இருந்தாலே கிளைகள் நன்றாக அமையும். வேர் இன்றி மரம் இல்லை - என்றார்.

இந்த வரவு செலவுத் திட்டம் கடந்த ஆண்டின் தொடர்ச்சியே என கொழும்பு பல்கலைக் கழகப் பொருளாதாரத் துறை பேராசிரியர் எம்.கணேசமூர்த்தி தெரிவித்தார். இது [illegible] பொருளாதாரத்தை [illegible] வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

"அரசு ஊழியர்களுக்கான கொடுப்பனவு போதாதென அவர்கள் நியாயமாகக் கூறினாலும் அதிகளவிலான அரச ஊழியர்களைக் கொண்ட அரசால் சம்பள அதிகரிப்பை மேற்கொள் வது கடினம் என்றும் அவர் கூறினார். (த-10)

### வடக்குக்கான

நிராகரித்து விட்டார்கள். அதை அரசு சார்பான அதிகாரம்படைத்தவர்கள் புரிந்து கொண்டு நடக்கப் பழக வேண்டும். இராணுவத்தைத் தொடர்ந்தும் மாகாணத்தில் இருக்கவிட்டு அதன் அரவணைப்பில் குளிர் காயலாம் என்று எண்ணுவது மடமை.

எனவே மக்கள் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றவர்கள் தத்தமது கடமைகளில் ஈடுபட வழியமைத்துக் கொடுப்பதின் அவசியத்தைச் சகலரும் உணருவார்கள் என்று நம்புகின்றோம்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரம் போதுமானதா என்பது இதுவரை பரிசீலிக்கப்படவில்லை. ஏனெனில் மத்தியில் இருப்பவர்களே மாகாணத்தில் இருந்தார்கள்.

தற்போது எமக்கு அதிகாரப் பகிர்வு கிட்டியதும் அரசின் சுயரூபம் தெரிகின்றது. ஆளுநருடன் சேர்ந்து அதிகாரப் பகிர்வை அர்த்தமாற்றதாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எங்களுக்கு அதிகாரப் பகிர்வு கிடைத்ததும் அதைச் சிதைக்கச் சதி நடக்கின்றது.

ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்கள் தமது உயிர்களைப் பலி கொடுத்தது, இவ்வாறான சில்லறைச் சதிகளுக்கு ஆளாகவல்ல. மாகாண சபையை நாம் நடத்த இடையூறு செய்யப்படும் சதிகள் யாவும் தமிழர்களுக்கு இதுவரையில் இழைக்கப்பட்ட அநீதிகளை வெளிக்காட்டும்.

அரசுடன் சேர்ந்தியங்கும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் அதிகாரிகள் எம்மை இயங்க விடாமல் செய்யப் பார்க்கின்றார்கள். ஒரு வேளை அரசுக்கும் எமக்கும் இடையில் நெருங்கிய உறவு அடுத்த தேர்தலில் ஏற்பட்டால் தமது பாடு இக்கட்டாகி விடும் என்பதால் அவ்வவாறு செய்கிறார்களோ தெரியவில்லை.

எது எவ்வாறு இருப்பினும், உள்நாட்டு விடயங்களை இப்பொழுதும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்றே நான் நம்புகின்றேன் - என்றார். (த-5-9)

### ஜனாதிபதியின்

பிக்க முடியும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் சி.ஆனந் தராஜா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு மற்றும் 2007 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற் போனவர்கள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் கடந்த வருடம் தலைமையகத்திலிருந்து வந்த அதிகாரிகளால் மீள விசாரணை நடத்தப்பட்டது. இதற்கான முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் இன்னொரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டமை தொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஆணையாளர், காணாமற்போனவர்கள் காணாமற்போனவர்கள் தான் என்பது தீர்வு. அவர்கள் இப்போது காணாமற் போயிருக்கிறார்கள்.

நாம் குறித்த விசாரணைகள் தொடர்பில் விரைவில் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்போம். ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு எமக்கு மேலானது. எனவே அவர்களிடம் முறைப்பாட்டைத் தெரிவிக்கலாம்.

நாமும் அவர்களுக்கு உதவிகளை வழங்கவுள்ளோம் - என்றார். (த-5)

### யாழ்.பல்கலை

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் மாவீரர் தினத்தன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் விளக்கேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் இடம்பெற்ற அசம்பாவிதத்தையடுத்து யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால் இந்த ஆண்டு முன்னெச்சரிக்கையாக யாழ்.பல்கலைக் கழக மாணவர்களுக்கு நீண்ட விடுமுறை அறிவிக்கப்பட்டிருப்பதுடன், விடுதிகளிலிருந்தும் மாணவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அத்துடன் யாழ்.பல்கலைக் கழகத்துக்குள் மாணவர்கள் சோதனைகளின் பின் பதிவு செய்யப்பட்டே அனுமதிக்கப் படுகின்றனர்.

அத்துடன் யாழ்.பல்கலைக் கழகச் சுற்றாடலில் சீருடையினரிந்தும், புலனாய்வாளர்களினதும் பிரசன்னம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் யாழ்.பல்கலைக்கழகச் சுற்றாடலில் நேற்று மாவீரர் தினத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் அவை காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

### தொலைபேசி

திட்ட முன்மொழிவு யோசனைக்கு இந்தக் கட்டண அதிகரிப்புகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் அறி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

### வீடழிப்பு

இவ்வாறு வலியுறுத்தப்பட் டுள்ளது.வலி.வடக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் நிலங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. தமிழ் மக்களின் காணிகளில் யோக்கட் தொழிற்சாலை மற்றும் உல்லாச விடுதிகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மக்களின் நிலங்களில் இராணுவத்தினர் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் குறித்த காணிகளுக்குரிய மக்கள் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வீடுகள் இடித்தழிக்கப்பட்டு வருகின்றன. மேலும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை அவர்களின் சம்மதமில்லாமல் வேறு இடங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த சிவில் சமூகத்தினர், அந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த உயர் மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். (த-5)

### பொதுநலவாய

இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொதுநலவாய அமைப்பின் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்று விசாரணைகளை முன்னெடுக்கப் படப் போவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் ஆணையாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது இதற்குப் பதிலளித்த அவர், அது தவறு. சித்திரவதைகள் தொடர்பில் மாத்திரமே விசாரணைகள் முன்னெடுக்கவுள்ளோம்.அவை எந்தக் காலப் பகுதியில் இடம்பெற்ற சித்திரவதைகள் என்பது குறித்தும் தடுப்பு முகாம்களில் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் தொடர்பிலா என்பது தொடர்பிலும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

அடுத்த மாத முதல் வாரப் பகுதியில் பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர். இதன்போதே மேற்படி விடயங்கள் தீர்மானிக்கப்படும் - என்றார். (த-5)

### மனித உரிமைகள்

அதேபோன்று எமக்கும் போதிய அதிகாரங்களும் இல்லை' என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர்களுள் ஒருவரான இ.ஆனந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. கிராம மட்டங்களில் இராணுவத்தினரால் பல்வேறு அச்சுறுத் தல்கள் விடுவிக்கப்படுகின்றன.

எனவே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விரிவாக்க வேண்டும் என்று சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் இந்தக் கலந்துரையாடலில் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஆணையாளர், நாம் எமது செயற் பாடுகளை விரிவாக்கத் திறைசேரியிடம் அனுமதி கோரியுள்ளோம். திறைசேரியில் நிதியில்லை என்பதே பதிலாக வருகின்றது.

எங்களுக்குப் போதியளவு அதிகாரங்கள் இல்லை, எம்மால் ஏழு விடயத்தில் பரிந்துரைகள் மாத்திரம் தான் செய்ய முடியும். அதை நடைமுறைப் படுத்தாவிட்டால் எதுவும் செய்ய முடியாது - என்றார்.

இதேவேளை - அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் லீக்கின் உதைபந்து: ஆட்டங்களில் வென்ற அணிகள்



யாழ்ப்பாணம், நவ.23
மன்னார் உதைபந்தாட்ட லீக் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நேற்று மன்னார் நகர சபை மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி மைதானங்களில் ஆரம்பமாகியது.

மன்னார் நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெறவிருந்த ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வவுனியா யுனிபைட் விளையாட்டுக்கழக அணி மோதவிருந்தது.

இதில் வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணி போட்டிக்கு சமூகம் தராமையால் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

மூன்றாவதாக இடம்பெறவிருந்த ஆட்டத்தில் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் அடம்பன் செந்தாமரை விளையாட்டுக் கழக அணி மோதவிருந்தது.

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி போட்டிக்கு சமூகம் கொடுக்காமையால் மன்னார் அடம்பன் செந்தாமரை விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது

நான்காவதாக இடம்பெறவிருந்த ஆட்டத்தில் மன்னார் நானாட்டான் அச்சம்குளம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவிருந்தது.

மன்னார் நானாட்டான் அச்சம்குளம் விளையாட்டுக் கழக போட்டிக்கு சமூகம் தராமையால் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

ஐந்தாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தோட்ட வெளி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பெரிய கமம் எவர்கிறீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் தோட்டவெளி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆறாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.

"_"

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கற்கடந்த குளம் சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23-12)

# வடக்கு அணி வெற்றி

யாழ்ப்பாணம், நவ.23
மாகாண விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வெள்ளிக்கிழமை நாவலப்பிட்டி ஜெயதிலக, விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் வட மாகாண விளையாட்டு உத்தியோகத்தர் அணி வெற்றி பெற்றுள்ளது.

வட மாகாண விளையாட்டு உத்தியோகத்தர் அணிக்கும் மத்திய மாகாண விளையாட்டு உத்தியோகத்தர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வட மாகாண விளை யாட்டுத் உத்தியோகத்தர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை இன்று காலை நடைபெறவுள்ள காலிறுதியாட்டத்தில் வட மாகாண, விளையாட்டு உத்தியோகத்தர் அணியை எதிர்த்து ஊவா மாகாண விளையாட்டு உத்தியோகத்தர் அணி மோதவுள்ளது.

(த-23)

# ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், நவ.23
யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணிக்கும் யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோல் களைப் பெற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)



வடக்கு மாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட உள்ளூராட்சி அமைச்சு அணி. (த-23)

# சென்.பற்றிக்ஸ் வெற்றி



சென்.பற்றிக்ஸ் கல்லூரி



யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்

யாழ்ப்பாணம், நவ.23
இலங்கை ரென்னிஸ் சம்மேளனம் ஏற்பாட்டில் அகில இலங்கை பாடசாலைகளின் 10 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான ரென்னிஸ் சுற்றுப் போட்டி கடந்த மாத இறுதியில் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் 7 வயதுப் பிரிவில் 'சிவப்பு பந்து' பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலாமிடத்தை பெற்றுள்ளது.

இதே பிரிவில் பெண்களுக்கான போட்டியில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட ம.வி. அணி 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

8 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 'செம்மஞ்சள்' பிரிவு போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 4 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. (த-23)

# ஸ்கந்தவரோதயவை வீழ்த்தி வாகை சூடியது நெல்லியடி

யாழ்ப்பாணம், நவ.23
இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளின் பரிவு III க்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வாரம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 29 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சார் பில் சிறிகிருஸ்ணா 6 இலக்குகளையும் விஜிதன் 2 இலக்குகளையும் அஜிதன், பிரதாபன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினார்கள்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 39 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அபிதன் 57 ஓட்டங்களையும் விஜிவன் 44 ஓட்டங்களையும், கம்சன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பில் தனுசன் 3 இலக்குகளையும் கஜதீபன் 2 இலக்குகளையும் சருஷன் 2 இலக்குகளையும் பிரிந்தன், அபிசன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

தனது 2 ஆவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 31 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தனுஷன் 4 ஓட்டங்களையும், தருஷன் 3 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நெல்லியடி மத்திய கல்லூரி சார்பில் சிறிகிருஸ்ணா 6 இலக்குகளையும் பிரதாபன் 3 இலக்குகளையும் விஜிவன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினார்கள். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் ரிக்கெற் விற்பனை பெப்ரவரியில்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கான ரிக்கெற்றுகள் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் விற்பனை செய்யப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான ரிக்கெற் விலை மற்றும் பயணச் செலவுகள் குறித்த அறிவிப்பைச் சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இந்தப் போட்டிகளை ஆஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் இணைந்து நடத்துகின்றன.

ஆரம்ப ஆட்டம் நியூசிலாந்து அணியின் கிரிஸ்ட் சேர்ச் மைதானத்திலும் இறுதி ஆட்டம் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னிலும் நடக்க உள்ளன.

இதற்கான ரிக்கெற் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிரிக்கெட் ரசிகர்கள் www.cricket worldcup .com என்ற இணையத் தளத்திலும் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த)

# அன்டி முரேயின் போட்டி ரத்து



சத்திர சிகிச்சையின் பின்னர் ரென்னிஸ் சம்பியன் அன்டி முரே பங்குபற்றவிருந்த ரென்னிஸ் போட்டித் தொடர் கைவிடப் பட்டுள்ளது. பார்படோஸில் இந்தப் பேர்ட்டித் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி நடத்தப் படவிருந்தது. எனினும் காரணங்கள் அறிவிக்காமல் இந்தப் போட்டித் தொடர் ரத்து செய்யப்பட் டுள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் அன்டி முரே சத்திர சிகிச்சை செய்து கொண்டார்.

அதன் பின்னர் அவர் பங்கேற்கவிருந்த போட்டிகள் ரத்துச் செய்யப்பட்ட நிலையில், மியாமியில் உள்ள பயிற்சித் தளத்தில் அவர் தொடர்ந்து ரென்னிஸ் பயிற்சிகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)



# பாகிஸ்தானுக்கு எதிரான தென்னாபிரிக்கக் குழாம்

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக் கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான தென்னாபிரிக்கக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

3 போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் நாளை நவம்பர் 24ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. ஏற்கனவே 20/20 தொடர் ஆரம்பித்து இடம்பெற்று வருகிறது.

ஏபி.டி.வில்லியர்ஸ் தலைமையில் அறிவிக்கப்பட் டுள்ள இந்தக் குழாமில் அந்த அணியின் சகலதுறை வீரர் ஜக்ஸ் கலிஸ் இடம்பெற்றுள் ளார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடு வதைத் தவிர்த்து வந்த அவர், பெப்ரவரி 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன்முறையாக ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமிலிருந்து பப் டு பிளெஸிஸ், றொபின் பீற்றர்சன் இருவரும் நீக்கப்பட்டுள்ளனர். சுழற்பந்து வீச்சாளரான இம்ரான் தாஹிர் இந்தக் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

அத்தோடு, இறுதியாக பாகிஸ்தானுக்கெதிராக இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமில் உபாதை காரணமாக இடம் பெற்றிருக்காத அந்த அணியின் டெஸ்ட் தலைவர் கிறேம் ஸ்மித் இக்குழா முக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

**அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:**
ஏபி.டி.வில்லியர்ஸ், ஹசிம் அம்லா, குயின் டன் டீ கொக், ஜே.பி.டுமினி, இம்ரான் தாஹிர், ஜக்ஸ் கலிஸ், றயன் மக்லரன், டேவிட் மில்லர், மோர்னிமோர்க்கல், வெய்ன் பார்னெல், வேர்ணன் பிலாந்தர், கிறேம் ஸ்மித், டேல் ஸ்ரெய்ன், லொன்வபோ சொற்சொபி. (த)

# அதிக கோல்களைக் குவித்த மெஸ்ஸிக்கு தங்கக் காலணி




ஐரோப்பிய உள்ளூர்ப் போட்டிகளில் அதிக கோல் அடித்து சாதனை படைத்த ஆர்ஜென்ரீனா வீரர் லியோனல் மெஸ்ஸிக்கு தங்கக் காலணி விருது வழங்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா கழகத்தில் 2012-2013 பருவகாலத்தில் மெஸ்ஸி 46 கோல்களை அடித்துள்ளார். இதற்காக இவருக்கு தங்கக் காலணி விருது வழங்கப்பட்டுள்ளது.

இவர் ஏற்கனவே 20092010 பருவ காலத்திலும் (34 கோல்கள்-), 2011 - 2012 பருவ காலத்திலும் (50 கோல்கள்) தங்கக் காலணி விருதைப் பெற்றுள் ளார்.

இந்த விருதை 3 முறை பெற்ற முதல் வீரர் என்ற சாதனையை 26 வயதான மெஸ்ஸி படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆஸி. ஆதிக்கம்

ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரின் முதலாவது போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் ஆஸி அணி ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது.

பிறிஸ்பேர்ணில் இடம்பெறும் இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல்நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது.

12 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்த ஆஸ்திரேலிய அணி, இரண்டாவது இலக்குக்காக 59 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது. ஆனால் அடுத்த 5 இலக்குகளை 61 ஓட்டங்களுக்கு இழந்த ஆஸ்திரேலிய அணி, 6 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களுடன் தடுமாறியது. 7ஆவது இலக்குக்காக பிரட் ஹடின், மிற்சல் ஜோன்சன் இருவரும் 114 ஓட்டங்களைப் பகிர்ந்து ஓரளவு போராட்டத்தை வெளிப்படுத்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. இதன்போது சிறப்பாக ஆடிய பிரட் ஹடின் 94 ஓட்டங்களோடு வெளியேறினார். இதனால் ஆஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 295 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும்





இழந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் மிகச்சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தி 81 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைக் கைப்பற்றினார். அத்துடன் ஜேம்ஸ் அன்டர்சன் 2 இலக்குக்களையும், , கிறிஸ் ட்ரெட்லெட் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

அடுத்து தனது முதல் இன்னிங்ஸுக்காக களம் இறங்கிய இங்கிலாந்து வீரர்களை ஆஸ்திரேலிய வேகங்கள் பதம் பார்த்தன. ஆஸியின் மிற்சல் ஜோன்சன் வேகப் பந்துத் தாக்குதலை சமாளிக்க முடியாமல் திணறிய இங்கிலாந்து வீரர்களை இன்னொரு புறத்தில் தனது சுழலால் வேட்டை ஆடினர் ஹரிஸும், நதன் லயனும்.

இங்கிலாந்து அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹார்பெரி 40 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட் ப்ரோட் 32 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். ஏனைய வீரர்கள் ஏமாற்றத்தைக் கொடுக்க 136 ஓட்டங்களோடு முதல் இன்னிங்ஸில் சுருண்டது இங்கிலாந்து அணி.

பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணியின் மிற்சல் ஜோன்சன் 4 இலக்குகளையும், ஹரிஸ் 3 இலக்குகளையும், நதன் லயன், பீற்றர் சிடில் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றைய ஆட்ட நேர நிறைவில் இலக்கு இழப்பு ஏதுமின்றி 65 ஓட்டங்களைப் பெற்று 224 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. களத்தில் ரோஜர்ஸ் 15 ஓட்டங்களுடனும் வோர்ணர் 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

(ஙு)

முதலாம் ஆண்டு நினைவுச் சுடர்



அமரர்
செல்லப்பா
இராசதுரை
(சின்னக்கிளி)
மண்ணில்
18.08.1930



மனதில்
04.12.2012

"காலம் யாவும் உங்கள் நாமம்
கலையா தெங்கள் மனம் வாழும்!
ஞாலம் நாளும் உங்கள் சேவை
நாங்கள் போற்றி வாழ்வோமே!"

எமது குடும்பத் தலைவரின் நினைவாக எமது இல்லத்தில் இன்று (23.11.2013) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கு மாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

(40373)(12)(3.6)

# வென்றது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் '20/20' போட்டியில், பாகிஸ்தான் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்க சென்றுள்ள பாகிஸ்தான் அணி, இரண்டு '20/20', மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகளும் மோதிய முதலாவது '20/20'போட்டி, ஜோகனஸ்பர்க்கில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் முஹமட் ஹபீஸ் களத் தடுப்பை தெரிவு செய்தார்.

தென்னாபிரிக்க அணிக்கு குயின்டன் டி கொக் (43), அம்லா (31) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அணித் தலைவர் டுபிளசி (22) ஏமாற்றினார். பின்வரிசையில் டேவிட்ஸ் (3), டுமினி (11), பர்னல் (6) என எவரும் நிலைக்க வில்லை. கடைசி நேரத்தில் மில்லர் (19) சற்றுக் கைகொடுக்க, தென்னாபிரிக்க அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்கு இழப்புக்கு 153 ஓட்டங்கள் எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை துரத்திய பாகிஸ்தான் அணியை, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷெசாத் (9) ஏமாற்றினார். நாசிர் ஜாம்ஷெத் (18), டுமினி சுழலில் சிக்கினார். பாகிஸ்தான் அணி 9.1



பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குக்கு 60 ஓட்டங்கள்எடுத்திருந்த போது, மழை பெய்தது. தொடர்ந்து மழை நீடிக்கவே, டக்வோர்த் - லூயிஸ்' முறைப்படி, தென்னாபிரிக்க அணி 4 ஓட்டங்கள்வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்காவின் குயின்டன் டி கொக் தேர்வு செய்யப்பட்டார்.

(ஙு)

# எங்கே சென்றார் சச்சின்?



இந்தியாவின் கிரிக்கெட் ஜாம்ப வான் சச்சின், சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். சாதனைகள் பல புரிந்த சச்சினின் ஓய்வு கிரிக்கெட் ரசிகர்களுக்கு மட்டுமின்றி, இளம் வீரர்களுக்கும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் சச்சின், மனைவி அஞ்சலி, மகள் சாரா மற்றும் மகன் அர்ஜுனுடன் ஜாலியாக ஊர் சுற்றக் கிளம்பி விட்டாராம்.

உத்தரகாண்ட் மாநிலம் டேரா டூன் மாவட்டத்தில் உள்ள மலை வாசஸ்தலமான முசோரி, சச்சினுக்கு பிடித்தமான இடமாகும்.

பனியுடன் கூடிய இந்த மலைப் பகுதிக்கு, புத்தாண்டு மற்றும் கிறிஸ்மஸ் விடுமுறை நாள்களில் குடும்பத்தினருடன் செல்வதை வாடிக்கையாகக் கொண்டு இருக்கிறார் சச்சின்.

கடந்த ஆண்டில் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பு கூட இங்கு சென்று வந்தார்.

இங்கு குடும்ப நண்பரும், தொழில் பங்குதாரருமான சஞ்சய் நராங்கின் ஹோட்டலில் தங்கி இருக்கும் சச்சின், ஒரு வாரம் அங்கிருந்து பொழுதை கழித்துவிட்டு வருவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(து)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org